எல்லாம் இயேசுவே

அருளுரைகள்

எபநேசர் டிக்கிகஸ்

தொகுத்தவர்:

எஸ். இஸ்ரவேல்

கிறிஸ்தவ இலக்கிய சங்கம்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS-600 003

JESUS IS ALL TO ME

Sermons by
E. TYCHICUS
in Tamil

Compiled by
S. ISRAEL

©

First Published 1979
Reprinted 1982, 1990

விலை-ரூ. 15·00

Printed at The Diocesan Press, Madras-600 007. B1634

அறிமுகம்

இச் சிறு நூலில் அடங்கியுள்ள அருளுரைகள் என் தகப்பனார் அருள்திரு. டிக்கிகஸ் அவர்கள் ஆற்றிய நூற்றுக் கணக்கான அருளுரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை ஆகும். இவை பல்வேறு காலக்கட்டங்களில் ஆற்றப் பட்டவை. இவைகளை நான் கேட்டிருக்கிறேன்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு காலம் சென்ற ஆசிரியர் விட்டுச் சென்ற அருளுரைக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டும், நினைவில் நின்ற குறிப்புக்களைச் சேர்த்தும் இவ் வருளுரைகள் எழுத்து வடிவம் பெற்றுள்ளன. ஆசிரியரின் பேச்சு நடையைப் பேரளவுக்குத் தழுவியே அருளுரைகள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அவர் அவைகளை ஆற்றியபோது வெளிப்பட்ட வேகமும் அழுத்தங்களும் அப்படியே எழுத் துருவம் பெற்றுள்ளன என்று துணிந்து கூறமுடியாது. செய்தியைச் சிதைவின்றித் தர முயன்றுள்ளோம். இம் முயற்சியில் துணை நின்றவர் தமிழ்நாடு இறையியல் கல்லூரி ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு. எஸ். இஸ்ரவேல் ஆவார். ஆசிரியரை அவர் நேரில் கண்டதில்லை என்றாலும் அவருடைய அருளுரைக் குறிப்புக்கள் மூலம் அவர் உள்ளத்தைப் புரிந்துகொண்டு இருபத்திரெண்டு அருளுரைகளை எழுத்துருவில் வழங்கியுள்ளார். அவருக்கு என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

சகல பரிசுத்தவான்களின்
திருநாள், 1979
சென்னை

தி. தயானந்தன் பிரான்சிஸ்

உள்ளடக்கம்

		பக்கம்
அறிமுகம்	..	iii
1. இயேசுவுக்குச் சொல்லுங்கள்	..	1
2. இயேசுகிறிஸ்துவின் திருப்பெயர்	..	6
3. இயேசுவின் சாட்சி	..	11
4. இயேசுவின் பார்வை	..	15
5. எல்லாம் இயேசுவே	..	19
6. அன்பழைப்பு	..	24
7. இயேசு உயிர்த்தெழுந்தார்	..	28
8. எபநேசர்—இம்மானுவேல்	..	33
9. இந்த நாள்	..	38
10. இல்லறப் பயணம்	..	42
11. கேளுங்கள்—தேடுங்கள்—தட்டுங்கள்	..	47
12. நல்ல தலைவன்	..	52
13. தகுதியும் தகுதியின்மையும்	..	56
14. சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்	..	60
15. மேலும் மேலும்	..	64
16. அர்ப்பணமும் ஆயத்தமும்	..	68
17. செத்த ஈக்கள்	..	73
18. சில விளக்குகள்	..	77
19. விண்ணப்பமும் விடையும்	..	81
20. இணையும் உறவு	..	85
21. நித்திய இளைப்பாறுதல்	..	89
22. நம்மோடிருக்கும் இறைவன்	..	93

1

இயேசுவுக்குச் சொல்லுங்கள்

'எல்லாவற்றையும் . . . கடவுளுக்குத் தெரியப்படுத்துங்கள்.' (பிலி. 4:6)
'அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்.' (யோ. 2:5)

ஓர் அம்மாள் தமக்கேற்பட்ட மிக வருத்தமான சம்பவங்கள் சிலவற்றைத் தெய்வ பக்தர் ஒருவரிடம் சென்று, ஒன்றையும் அடக்கிவைக்காமல் எல்லாவற்றையும் சொன்னார்கள். அவர், அந்த அம்மாள் அதிக உணர்ச்சியோடு உள்ளத்திலிருந்து எடுத்துரைத்த யாவற்றையும் பொறுமையோடு கேட்டுச் சற்றுத் தாமதித்து, 'அம்மா, இவைகளை இயேசுவுக்குச் சொன்னீர்களா?' என்று கேட்டார். அவர் கேட்ட அந்தக் கேள்வி அந்த அம்மாளுடைய உள்ளத்தை ஊடுருவிச் சென்றது.

இயேசுவுக்குச் சொன்னீர்களா?

இக்கேள்வி, ஜெபத்தைக் குறித்து நமக்குள் ஒரு புது உணர்ச்சியை உண்டாக்குகின்றது. கண்களை மூடிப் பல வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்கிறது மாத்திரமல்லாமல், ஆண்டவரை நம் பக்கத்திலிருப்பவராக நம்பி, நேருக்கு நேரே நமது விஷயங்களை எடுத்துரைக்கப் பழகிக்கொள்ள வேண்டியது அவசியம்.

நீங்கள் உங்கள் விஷயங்களை இயேசுவுக்குச் சொல்லக் கற்றுக்கொண்டிருக்கிறீர்களா? 'ஆண்டவர் சமீபமாயிருக்கிறார்', 'கடவுள் நம்மோடிருக்கிறார்.' ஆகவே, 'நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர்

நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்' (1 யோ. 5:14,15). இயேசுவின் சமூகப் பழக்கம் நமக்கிருக்குமானால், நாம் அவரோடு பேசவும் கற்றுக்கொள்ளுவோம். அவருடைய சீடரும், சிநேகிதரும் அவ்வாறு செய்ததாகச் சுவிசேடங்களில் வாசிக்கிறோம்.

நமது துக்க சம்பவங்களை இயேசுவுக்குச் சொல்லுவோம்: யோவானுடைய சீடர் அவ்வாறு செய்தார்கள். 'யோவானுடைய சீடர்கள் வந்து உடலை எடுத்து அடக்கம்பண்ணி, பின்புபோய் அந்தச் சங்கதியை இயேசுவுக்கு அறிவித்தார்கள்' (மத். 14:12). நம்முடைய வருத்தமான பாரச்சுமைகளை நீக்கி இளைப்பாறுதலைக் கொடுக்க இயேசு நம்மை அழைக்கிறார். அவர் நமக்காகக் கவலைப்படுகிறவரானபடியால், நமது கவலைகளையெல்லாம் அவர்மேல் நாம் வைத்துவிட வேண்டுமென விரும்புகிறார். உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி அவரே. லாசரு வியாதியாயிருந்தபோது அவனுடைய சகோதரிகள், 'ஆண்டவரே, நீர் நேசிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்' என்று சொல்ல அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள். 'எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்' (1 கொ. 1:4). நாமும் நமது உபத்திரவங்களையும் துக்க அனுபவங்களையும் இயேசுவுக்குச் சொல்லக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நமது குறைவுகளை இயேசுவுக்குச் சொல்லுவோம்: மரியம்மாள் அவ்வாறு செய்தார்கள். 'திராட்சரசம் குறைவுபட்டபோது இயேசுவின் தாய் அவரை நோக்கி அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை' என்றார்கள். அந்தக் குறைவை ஆண்டவர் நிறைவாக்கினார் (யோ. 2:3–10). திரளான ஜனங்கள் வனாந்தரத்திலே பசியுற்றிருந்தபோது அந்திரேயா, இயேசுவை நோக்கி, 'இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும், அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்?' என்றான்.

இயேசு அவைகளை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்கு வேண்டிய மட்டும் கொடுத்தார். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். ஒரு சமயத்தில் ஆண்டவர் தமது சீடரைப் பார்த்து, 'ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா?' என்றார்; அவர்கள் 'ஒன்றும் குறைவாயிருந்ததில்லை' என்றார்கள். நமது குறைவுகளை இயேசுவுக்குச் சொல்லக் கற்றுக்கொள்வோமாக. 'உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்போது அவனுக்குக் கொடுக்கப்படும்' என்று யாக்கோபு அப்போஸ்தலன் கூறுகிறார்.

நமது குறைவுகளை இயேசுவுக்குச் சொல்லுவது மாத்திரம் போதாது. அவர் என்ன செய்யச் சொல்லுகிறாரோ அதன்படி செய்யவேண்டும். 'இயேசுவின் தாயார் வேலைக்காரரை நோக்கி அவர் என்ன செய்யச் சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்' என்றார்கள். நாமும் அவ்வாறே செய்வோமாக.

நமது சந்தேகங்களை இயேசுவுக்குச் சொல்லுவோம்: யோவான் ஸ்நானகன் அவ்வாறு செய்தார். 'தன் சீடரில் இரண்டு பேரை அழைத்து, வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா?' என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். நமது வாழ்க்கையில் பல விஷயங்களை நாம் சரியாக அறிந்துகொள்ளாமலிருக்கிறோம், உண்மையை அறிய விரும்புகிறோம். சந்தேகம் உண்டாகும்போது எங்கே, யாரைத் தேடிப் போகிறோம்? 'ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே' என்று இயேசுவினிடத்தில் போய்ச் சொல்லவும் கேட்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். 'ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?' 'நீர் என்னை எப்படி அறிவீர்?' 'தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ?' 'நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ?' 'நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்?' எனப் பலர் அவரிடத்தில்

கேட்டுத் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொண்டார்கள். நாமும் அவ்வாறே செய்வோமாக.

நமது வேலைகளைப்பற்றி இயேசுவுக்குச் சொல்லுவோம்: ஆண்டவரின் சீடர் அவ்வாறு செய்தார்கள். 'அப்பொழுது அப்போஸ்தலர், இயேசுவினிடத்தில் கூடிவந்து, தாங்கள் செய்தவைகள், உபதேசித்தவைகள் யாவையும் அவருக்கு அறிவித்தார்கள்' (மா. 6:30). ஆண்டவர் சீடர்களை அழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரங்கொடுத்து, மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கம் செய்ய அவர்களை அனுப்பினர். அவர்கள் அவ்வாறே சென்று நல்ல வேலைகளைச் செய்து திரும்பி வந்து தங்கள் அனுபவங்களை ஆண்டவருக்கு அறிவித்தார்கள். அது ஆண்டவருக்கு மகிழ்ச்சியளித்தது. நம்முடைய வேலைகளில் நாம் காணும் நல்ல பலன்களைக் குறித்து மகிழ்ச்சியடைகிறோம். நல்ல அறிக்கைகளை எழுதுகிறோம். மற்றவர்களுக்கு அறிவிக்கிறோம். நமது ஆண்டவராகிய இயேசுவுக்கு அவைகளைச் சொல்லுகிறோமா? அவைகளுக்காக அவரைப் புகழுகிறோமா? நமது வேலைகளில் பல பிரச்சினைகள், தோல்விகள் ஏற்படலாம். எல்லாவற்றையும் ஆண்டவருக்கு அறிவிப்போம். 'நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பலனுள்ளதாயிருக்கிறது.'

நமது மீறுதல்களையும் பாவங்களையும் இயேசுவுக்குச் சொல்லுவோம்: நாம் ஒவ்வொருவரும் அவ்வாறு செய்யவேண்டியது அவசியம். 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்' (1 யோ. 1:9). தாவீது அரசனைப் போல் 'நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன், என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்' என்று சொல்ல வேண்டும்.

'திருமுகத் தொளியற்று, பெருவினைகளில் உற்றுச்
சீர்கெட்ட பாவி ஆனேன்—நான்
ஒருமுகமாய் உனதிடம் மனந்திரும்பிட,
ஊக்கம் அருள், பரனே,

துரிச்சையினால் என் அசுத்தம் நிறைந்து நல்
சோபிதம் தான் இழந்தேன்—பேய்ப்
பரீட்சையினாலும் மயக்கம் அடையும் இப்
பாவிக்கிரங் கையனே.'

'மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன' என்று ஆண்டவர் சொல்லுவதை அப்பொழுது கேட்போம்.

நாம் இயேசுவுக்கு நன்றி சொல்லுவோமாக: ஆண்டவரிடத்தில் நாம் கேட்டுப் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக அவருக்கு நன்றிசெலுத்த அவர் விரும்புகிறார். எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மைகளை நாம் அவரிடத்திலிருந்து பெற்றிருக்கிறோமல்லவா? பவுல் தம் கடிதங்களில், அடிக்கடி அவர் அடைந்த கிருபைகளை நினைத்துத் தோத்திரம் செலுத்துகிறார். 'என் தேவனைத் தோத்திரிக்கிறேன்,' 'ஜெயங்கொடுக்கிற தேவனுக்குத் தோத்திரம்' என்றெல்லாம் தோத்திரிக்கிறார். பத்துக் குஷ்டரோகிகளில் ஒருவன் சுகமடைந்து திரும்பி வந்து அவருக்கு நன்றிசெலுத்தினபோது அது ஆண்டவருக்கு மகிழ்ச்சியளித்தது, நாமும் அவ்வாறே செய்வோமாக.

முடிவாக, 'நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து நம்முடைய விண்ணப்பங்களைத் தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று பவுல் கூறுகிறார். ஏனெனில், 'நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.' இதுவே நமது ஜெபத்தின் இரகசியம்.

ஜெபம்:

ஆண்டவரே, நாங்கள் எங்கும் எப்போதும் எதையும் உமக்குச் சொல்லுகிறவர்களாக உம்மோடு எங்களுக்குள்ள உறவை வளர்த்துக்கொள்ள, எங்களுக்கு அருள்தாரும்—ஆமென்.

2

இயேசுகிறிஸ்துவின் திருப்பெயர்

'அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக: ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்.' *(மத்: 1:21)*

(இயேசு=ஆண்டவரே மீட்பு)

'அவன் முதலாவது தன் சகோதரனுகிய சீமோனைக் கண்டு, மேசியாவைக் கண்டோம் என்று சொன்னுன்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்.' *(யோ. 1:41*

(மேசியா=அபிஷேகம்பண்ணப்பட்டவர்)

ஓர் ஆளின் பெயர் அவரது ஆள் தத்துவத்தின் சிறப்பினைக் குறிப்பிடுகின்றது. சிலர் தங்கள் குணங்களுக்குப் பொருத்தமேயில்லாமல் பெயர் வைத்திருப்பார்கள். ஆரோக்கியதாஸ் என்று பெயர் இருக்கும், அவன் நோயாளியாக இருப்பான். கருப்பசாமி என்று பெயர் இருக்கும், வெளுப்பாக இருப்பான். இயேசுநேசன் என்று பெயர் இருக்கும். அவனிடம் இயேசுவும் இரார்; நேசமும் இராது. பெயருக்குத் தக்கபடி குணத்தை மாற்றவேண்டும். முடியாவிட்டால் பெயரை மாற்றிக் கொள்வதே நல்லது. இயேசுவின் பெயர் அவருடைய குணங்களையும் மீட்பின் செயலையும் குறித்து நிற்கின்றது. எனவே தான் நம்முடைய கீர்த்தனைகள் சிலவற்றில் பக்தர்கள் இயேசு நாமத்தின் சிறப்பை அழகாக எடுத்துரைக்கிருர்கள். அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்:

1. தேனினிமையிலும் இயேசுவின் நாமம் திவ்ய மதுரமாமே.
2. இயேசென்னும் மகத்துவ நாமம்.

3. இயேசு நாமமல்லால்... நாமம்.
4. விசுவாசியின் காதில்பட இயேசு என்னும் நாமம்... இனிப்பாகுது.
5. இயேசுவின் நாமமே... திருநாமம்.
6. இயேசு... என்ற திருநாமத்திற்கு... ஸ்தோத்திரம்.

இந்நாமம் கருத்தற்றதாய்ப்போகாதிருப்பதாக. திருமறை வாக்கியங்களோடு இந்நாமத்தை இணைத்துச் சிந்தனை செய்வோமாக.

அது மேலான நாமம் என்று அறிகிறேம்: 'எல்லாத் துரைத்தனத்திற்கும், அதிகாரத்திற்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக அவர் உயர்ந்திருக்கப்பண்ணினுர்' (எபே. 1:20). இயேசுவைக் கடவுள் உயிரோடெழுப்பினதினுலே அவருக்கு இந்த மேன்மை கிடைத்தது. எனவே, உலக ஆளுகைகள், அரசுகள், அறிஞர்கள் யாவரிலும் இயேசு மேலானவராக வாழுகிருர். இந்த மேன்மை அவருக்குக் கிடைக்கக் காரணம், அவர் சிலுவையின் மரணம்வரையும் தம்மைத் தாழ்த்தியதாகும். நித்திய உயிரியாகிய அவர் கடவுளுக்குச் சமமாயிருப்பதைப் பெரிதென்று எண்ணுமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் உருவெடுத்து மனிதனுனர். 'ஆனதுபற்றி வானேர், பூதலத்தோர், பூமியின் கீழானேருடைய முழங்கால்கள் யாவும் இயேசுவின் நாமத்தில் முழங்கும்படிக்கும், இயேசுகிறிஸ்து ஆண்டவரென்று நாவுகள் யாவும் பிதாவாகிய கடவுளின் மகிமைக்கென்று அறிக்கைப்பண்ணும்படிக்கும் கடவுள் அவரை உயர்த்தி எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினுர்' (பிலி. 2:9–11).

தொமித்தியான் பேரரசனின் கொடுமைக்குள்ளாகி பத்மு தீவில் நாடுகடத்தப்பட்ட யோவான், இயேசுவை எல்லாருக்கும் மேலான அரசனுக ஒரு காட்சியில் கண்டார். 'ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின்

மேலும் எழுதப்பட்டிருந்தது' (தரி. 19:16). அவர் எல்லாருக்கும் மேலானவரானபடியால் உலக வரலாற்றில் நமக்கு நல்லெதிர் நோக்கு இருக்கிறது.

அது ஒரே நாமம் அல்லது ஒப்பற்ற நாமம் என்று அறிகிறோம்: 'அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை' (அப். 4:12). சிலருக்கு இது கருகலாக இருக்கலாம். கிறிஸ்தவன் மீட்பைப் புரிந்துகொண்டிருக்கும் அடிப்படையில், இயேசுகிறிஸ்து போன்ற ஒரு மீட்பர் இல்லாவிடில் அவனுக்கு நம்பிக்கையின் அஸ்திவாரம் இல்லை. மேலும், ஒருவரும் ஒப்பற்றவருமானவர் உலக மீட்பராக, யாவருக்கும் உரியவராக இருக்கிறார் என்பதே சிறப்பு. இங்கேயே இப்பொழுதே நமக்கு மீட்பு வழங்கி உலக வாழ்க்கையைப் பொருளுள்ளதாக ஆக்குவதில் அவர் ஒப்பற்றவராய் விளங்குகிறார்.

அது வல்லமையுள்ள நாமம் என்று அறிகிறோம்: 'நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட' என்று பேதுரு பிறவிச் சப்பாணியிடம் கூறுகிறார் (அப். 3:6). உடனே இயேசு என்னும் நாமத்தைப்பற்றி யூதர்கள் கலக்கமடைந்தனர். ஆனால் பேதுரு தமது அறிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தினார். 'அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே இவனைப் பெலப்படுத்தினது' (அப். 3:16). இன்றும் அவருடைய இயக்கம், செயற்பாடு இவற்றால் அவருடைய நாமம் வல்லமையுடையதாய் விளங்கவேண்டுமானால் அவருடைய திருநாமத்தை அணிந்திருக்கும் கிறிஸ்தவர்கள் அனைவரும் உயிருள்ள சாட்சிகளாய் செயல்படுவது அவசியம். அப்போதுதான் இன்னும் அதிக வல்லமையை அவர் திருப்பேரின் மூலமாகக் காணமுடியும்.

அது மீட்பின் நாமம் என்று அறிகிறோம்: 'நீங்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்' (அப். 2:38). கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் மீட்கப்படுவான்' (ரோ. 10:13).

இந்த மீட்பு ஒரு கருத்தின் அடிப்படையிலல்ல, ஒரு செயலின் அடிப்படையில் சம்பாதிக்கப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்துவில் கடவுள் தரும் மீட்பு நிறைவேறுகின்றது.

இயேசுவின் நாமம் மேலானதும் ஒப்பற்றதும் ஆற்றலுடையதுமாக இருப்பதற்குக் காரணம், அது நமக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலையையும் மரணத்திலிருந்து வாழ்வையும் தருவதாக இருப்பதேயாகும்.

அது ஜெபத்தில் விளங்கும் நாமம்: என்று அறிகிறோம்: 'நீங்கள் என் நாமத்தில் பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்' (யோ. 15:16). நாம் யாவரும் கடவுளுடைய பிள்ளைகளாயினும், நமது பாவத்தினால் கடவுளின் பிள்ளைக்குரிய மகிமையை இழந்துபோனோம். இயேசுகிறிஸ்துவின் மூலம் கடவுள் புதிய உடன்படிக்கை செய்து நம்மை மறுபடியும் தமது பிள்ளைகளாக்குகிறார். 'இயேசுவின் நாமத்தில் விசுவாசம்கொண்டு அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு அவருடைய பிள்ளைகளாகும்படிக்கு அதிகாரம் கொடுக்கிறார்' (யோ. 1:12). எனவே, நாம் ஜெபிக்கும்போது இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். 'என் நாமத்தில் நீங்கள் என்னிடம் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்' (யோ. 14:14), நம்மைப் போல ஒருவராக மாறி உலகில் வாழ்ந்த இயேசுவின் நாமத்தில் நாம் வேண்டிக்கொள்ளும் பேறுபெற்றிருக்கிறோம். அவரை அணுக நமக்குப் புதிய தைரியம் பிறக்கிறது.

அது ஜீவனுள்ள நாமம் என்று அறிகிறோம்: 'அவர் நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையவும் நற்செய்தி நூற்கள் நமக்கு எழுதப்பட்டிருக்கின்றன' (யோ. 20:31). இயேசுவின் நாமமும் நித்திய ஜீவனும் தொடர்புடையவை. இயேசுவின் நாமம் நிகழ்காலத்திற்குரியது. எனவே, நித்திய ஜீவனும் நிகழ்காலத்திலேயே ஆரம்பிக்கிறது. அவருடைய நாமத்தை ஏற்றுக்கொள்கிறவன் நித்திய ஜீவனில் இப்பொழுதே பங்கடைகிறான். இந்தப் பேறு செடிக்கும் கொடிக்கும் இடையே அமையும் ஜீவனுள்ள உயிர்த்தொடர்பாக விளங்குகிறது.

அது நற்செய்தி தரும் நாமம் என்று அறிகிறோம்: 'நான் மற்றொருவனுடைய அஸ்திவாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் நற்செய்தியை அறிவிக்கும்படி நாடுகிறேன்' (ரோ. 15:21). 'இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் உலகில் பிறந்தது எல்லா மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கும் நற்செய்தி ஆகும்.' (லூ. 2:10,11). கிறிஸ்துவின் நாமத்தை அறிவித்தல் நற்செய்தி அறிவித்தலாகும். இத்தனை மகிழ்ச்சி நிறைந்த நற்செய்தியாகிய இயேசுவின் நாமத்தை அடக்கிவைக்காமல் எங்கும் எடுத்துக்கூற இன்று ஆண்டவர் நம்மை அழைக்கிறார். நற்செய்தி என்றாலே கிறிஸ்து என்பதை இதன் மூலம் அறிகிறோம்.

இன்னும் அவருடைய நாமத்தின் சிறப்பைச் சொல்லிக் கொண்டே போகலாம். 'நாம் எதைச் செய்தாலும் இயேசுவின் நாமத்தில் செய்யும்படி அது நம்மைச் செயல்பட வைக்கிறது' (கொலோ. 3:17). அவருடைய நாமத்தைத் துதிப்பதற்கு இனி மிருக பலிகள் தேவையில்லை. உதடுகளின் கனிகளாகிய ஸ்தோத்திர பலிகள் போதும் (எபி. 3:15). இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நாம் நிந்திக்கப்பட்டால், பாடுகள் பட்டால் நாம் பாக்கியவான்கள் (1 பே. 4:14; மா. 13:13). இயேசுவின் நாமத்தில் கடவுள் கொண்டுள்ள திருவுளச்சித்தமும், திருநோக்கமும் உள்ளடங்கி இருக்கின்றன. அவருடைய நோக்கத்திற்குள்ளடங்கி அவர் நாமத்தை உயர்த்திக்காட்ட இன்றே உறுதிபூணுவோம்.

ஜெபம்:

இயேசுகிறிஸ்துவே, உமது நாமத்தைப் பிச்சை எடுப்பதற்கும், பிழைப்பதற்கும் நாங்கள் பயன்படுத்தாமலும், எங்கள் புகழை நிலைநாட்ட அதை எடுத்துக் காட்டாமலுமிருந்து, உமது திருநாமத்தின் புகழ்ச்சிக்கென உலகில் வாழ்ந்து எங்களை மறைத்துக்கொள்ளத் துணைசெய்யும்—ஆமென்.

3

இயேசுவின் சாட்சி

'நீர் சொல்லுகிறபடி நான் இராஜாதான். சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன்; இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்.' *(யோ. 18:37)*

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வில் ஓர் இலட்சியத்தைக் கொண்டிருக்கிறான். திட்டமில்லாத பிரயாணமும் குறிக்கோளில்லாத வாழ்க்கையும் பயனற்றவைகளாகும். சில குறிக்கோள்களை வாழ்க்கையில் வைத்திருப்பவர்களும் துன்பமான சூழ்நிலைகளில் தங்கள் குறிக்கோள்களைப்பற்றி ஐயப்படுகின்றார்கள். இயேசுகிறிஸ்து தமது மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கையிலும் தமது வாழ்வின் குறிக்கோளை மறந்தாரில்லை. 'இன்றைக்குச் சாப்பிடுவோம், நாளைக்குச் சாவோம்; ஏதோ, உலகில் பிறந்துவிட்டோமே' என்பது ஆண்டவரின் கருத்தல்ல. இழிவான சிலுவையைக்கூட, கடவுளின் அநாதித் திட்டத்திற்குட்பட்டதாய் அவர் கண்டார்.

ஆண்டவரின் சாட்சியில் சிறப்பாக இரு பகுதிகள் உண்டு. முதலாவது, அவர் அந்த சாட்சியை நிறுவிக் காட்டினார். இது முழுக்க முழுக்க அவரது பணியைச் சார்ந்ததாகும். ஆனால் அடுத்தபடியாக வரும் சாட்சியின் நிறைவேறுதல் என்பது நம்மைச் சார்ந்ததாகும். இயேசுகிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்ட மெய்ப் பொருளான கடவுளை மக்கள் ஏற்றுக் கொள்ளும்போது அவருடைய சாட்சி நிறைவேறுகின்றது.

இயேசுகிறிஸ்து தன்னிகரற்ற சத்திய சாட்சி ஆவார்: சத்தியம் என்பது மெய்ப் பொருளைக் குறிக்கும். அது கடவுளோடு

தொடர்புடையது; நித்தியமானது; என்றும் உயிராற்றல் உடையது. யோவான் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்க வந்தார். இயேசுகிறிஸ்துவோ தாமே சத்தியமாகவும், அதைக் குறித்துச் சாட்சி கொடுப்பவராகவும் வந்தார். 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' என்று அவர் கூறுமளவிற்கு இறை அதிகாரம் படைத்தவராகவும் இறைவனோடு ஒன்றி அவர் சித்தத்தை அறிந்து செயல் பட்டவராகவும் இருந்தார்.

மெய்ப் பொருளான வார்த்தையானவர் மானிடனாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே தங்கினார். எனவே இயேசுவின் சாட்சி ஒரு பிரசங்கம் அல்ல. அது வாழ்க்கை நிகழ்ச்சி ஆகும். இன்று 'இயேசு கிறிஸ்துவுக்காக சாட்சி கொடுக்கிறேன்' என்று கூறுகிறவர்கள் பலர். பத்திரிகைகளில் சாட்சி எழுதுகின்றவர்களும் உண்டு. ஆனால் இவர்களின் சாட்சி தங்களது வாழ்க்கையில் பெற்ற ஒரு சில நன்மைகளின் அடிப்படையில் எழுகின்ற ஒன்றாகும். ஆனால் இயேசுகிறிஸ்துவோ ஒரு வாழும் சாட்சி. கடவுளின் திருமைந்தன் என்கின்ற உன்னத நிலையைக் குறித்து அவர் பெருமையடையாமல் பாவிகளான மனிதர்களிடையே அவர் வாழ்ந்தார். இங்ஙனம் இயங்கும் சாட்சியான அவரது ஒளி, பாவிகளின் வாழ்க்கைகளை ஒளிமயமாக்கிற்று (யோ. 8:12). இதன் மூலமாக அவர் ஒரு புதிய அரசைக் குறித்துப் பேசினார். அது என் அரசு என்று கூறினார் (யோ. 8:36). அது இன்றும் வளர்ந்துகொண்டிருப்பதோடு உலக அரசுகளுக்கு வேறுபட்டு அவைகளுக்குச் சவால் விட்டுக்கொண்டிருக்கிறது. திருச்சபை இன்று ஓர் இயங்கும் சாட்சியாக இருக்குமானால், இயேசு நிறுவிய இறையரசை இந்த உலகம் தெளிவாகப் புரிந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை.

அமெரிக்காவிலிருக்கும் இந்தியத் தூதுவர் இந்தியாவின் பிரதிநிதியாக மட்டுமல்லாமல், இந்தியாவைப்பற்றிச் சாட்சி கொடுக்கிறவராகவும் உள்ளார். இந்தியாவின் சார்பிலே நின்று பேச அவருக்கு அதிகாரம் உண்டு. அமெரிக்காவில் நடக்கும் ஒரு நிகழ்ச்சிக்கு இந்தியாவின் ஆதரவை அல்லது எதிர்ப்பை இந்தியத் தூதுவர் எடுத்துரைக்கிறார். இது போன்று கடவுளின் சாட்சியாக இயேசு இருந்தது மட்டுமல்லாமல், கடவுளைப்பற்றிச் சாட்சியும் பகர்ந்தார். உலகின் தீமைகள்மேல் கடவுளின் தீர்ப்பைக் கூறி அறிவித்தார். கடவுளின் செய்கையை முழுமையாகக் கண்டுகொண்ட அவர் அவரது திருவுளத்தின்படி உலகில் செயல்பட்டார் (யோ. 5:19). இதனால்தான் யூத மக்களின் சமய நம்பிக்கைகளில் இருந்த தாறுமாறுகளையெல்லாம் தாக்கினார். இப்படிப்பட்ட ஒரு புரட்சிகரமான சாட்சிக்கு உலகம் அவருக்குக் கொடுத்த பரிசு சிலுவை மரணம் ஆகும். சாட்சி கொடுக்க வந்தவர் தம்மையே கொடுத்துவிட்டார். நம்மை இந்த உலகத்தில் கரைத்துக்கொள்வதின் மூலம்தான் நாம் உயிருள்ள சாட்சிகளாய் வாழமுடியும்.

அவரது சாட்சியின் நிறைவேற்றம் மக்களின் ஏற்றுக்கொள்ளுதலைப் பொறுத்திருக்கிறது: அவர் உலகத்தில் இருந்தார். . . உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு 'கடவுளின் பிள்ளைகள்' என்ற உரிமையைத் திரும்பவும் வழங்கினார் (யோ. 1:10–12). சத்தியவான் எவனும் அவரது சத்தத்தைக் கேட்கிறான். இங்குச் சத்தியவான் என்பது ஏற்கெனவே நல்லவனாக இருக்கிறவன் என்பது பொருளல்ல. இயேசுகிறிஸ்துவின் சாட்சியை அக்கறையோடும் முழு மனதோடும் கேட்கிறவனுவான். இன்றும் இயேசுவின் சாட்சி உலகத்தில் உண்டு. எல்லாச் சமயங்களும் இயேசுவின் சாட்சியை உன்னிப்போடு பார்க்கும்படி அழைக்கப்படுகின்றன.

இதற்குமேல் கடவுளின் சாட்சி வெளிப்பட முடியாது. தவறான வழியில் நடக்கும் ஒரு மகனுக்காக அக்கறை கொள்ளும் ஒரு தாய் அவனிடம் அன்பு ஆலோசனை கூறலாம், கண்டிக்கலாம், கண்ணீர் விடலாம், கடைசியில் உயிரையே விடலாம். அதற்குமேல் அவள் என்ன செய்யமுடியும்? ஆம், இதுபோன்றே இயேசுகிறிஸ்துவின் சாட்சியும் அமைந்துள்ளது. இதனை ஏற்றுக்கொள்ளுகின்றவர்கள் சத்தியத்

தினுல் விடுதலையாக்கப்பட்டு புது சிருஷ்டிகளாய் மாறுகின்ருர்கள். மற்றவர்களோ தங்களைத் தாங்களே நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்திக்கொள்ளுகின்ருர்கள்.

மேலும், இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்ட சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் தொடர்ந்து இந்த உலகத்தில் சாட்சிகளாயிருக்க அழைக்கப்படுகின்ருர்கள். அவர் கடவுளால் ஏற்படுத்தப்பட்டதுபோல நாமும் உலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளோம் (லூ. 22:29). தூய ஆவியானவரால் ஆட்கொள்ளப்படுகின்றவர்கள் உலகம் முழுவதும் சாட்சிகளாயிருப்பார்கள் (அப். 1:8). இந்த அன்புக் கட்டளை உயிரோடிருக்கும் கடவுளின் முன்னிலையிலும், பொந்தியு பிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின இயேசுகிறிஸ்துவின் முன்னிலையிலும் நமக்கு அருளப்படுகின்றது (1 தீமோ. 6:14). கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியினிமித்தம் தங்கள் உயிரைத் தியாகம் செய்த ஆயிரக்கணக்கான பரிசுத்தவான்களின்மேல் நாம் இன்று ஆசனம் போட்டு அமர்ந்திருக்கிறேம். கிறிஸ்து வெளிப்படுத்தும் மெய்ப் பொருளைக் கேட்டு, அறிந்து, கண்டு, ருசித்து, உயிருள்ள சாட்சிகளாய் வாழ்ந்து உலகெங்கும் அதனைப் பறைசாற்றுவோமா?

ஜெபம்:

மெய்ப் பொருளான கிறிஸ்துவே, எங்கள் தீச்செயல்களான ஆணிகளால் உம்மை இன்னும் உறுத்துகின்ற வெறிச் செயலிலிருந்து எங்களுக்கு விடுதலை தாரும். உமது பெயரை வைத்து எங்கள் பெயர்களை விளம்பரப்படுத்தும் சுயநலத்திலிருந்து எங்களைத் தப்புவியும். வாழும் சாட்சிகளாய் இயங்கி, நாளும் உம் அரசைப் பரப்பத் தூய ஆவியின் ஆற்றலை ஏராளமாய் வழங்கும்—ஆமென்.

(இவ்வருளுரை ஒரு கிறிஸ்மஸ் நாளன்று ஆற்றப்பட்டது. தாம் எதற்காகப் பிறந்தார் என்பதை ஆண்டவர் எடுத்துச் சொல்லும் ஒரே கட்டம், பிலாத்து முன்னிலையில்தான் என்பது விளக்கப்பட்டது.)

4

இயேசுவின் பார்வை

'இதைக் . . . காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார்.' (மா. 5:32)
'அப்பொழுது ஆண்டவர் திரும்பிப் பேதுருவை நோக்கிப் பார்த்தார்.' (லூ. 22:61)

என்னைக் கவர்ந்த படங்களில் சிறப்பான ஒன்று ஒரு சிறு குழந்தையின் படமாகும். அந்தக் குழந்தை தன் கரங்களைக் கூப்பியவண்ணம் சற்று மேல் நோக்கி யாரையோ மிக உன்னிப்பாய் பார்த்துக்கொண்டிருந்தது. அது ஆண்டவரையே பார்த்துக்கொண்டிருப்பதாக அப்படத்தின் கீழே கொடுக்கப்பட்ட வசனம் கூறியது. அந்தப் பார்வையில் எத்தனை அழகு! எத்தனைக் கவனம்! ஆம், சிலருடைய பார்வையே அவர்கள் உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டும். இயேசுகிறிஸ்துவின் பார்வையில் வெளிப்பட்ட அற்புத ஆற்றலைச் சீடர்களின் கண்கள் காணத் தவறவில்லை. எனவே அதனை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிருர்கள்.

அவர் வானத்தை அண்ணாந்து பார்த்தார் என்று படிக்கிறேம். ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும்கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த நேரத்திலும் (மா. 6:41). திக்குவாயும் செவிடுமான ஒருவனுக்கு சுகம் கொடுத்த போதும் (மா. 7:34), லாசருவை உயிரோடெழுப்பு முன்பும் (யோ. 11:41), தமது மத்தியஸ்த மன்ருட்டிலும் (யோ. 17:1) அவர் தமது கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுத்தார். ஆண்டவர் தமது ஒவ்வொரு செயலுக்கும் தம் தந்தையாரை எந்த அளவுக்குச் சார்ந்திருந்தார் என்பது இதனல் விளங்குகிறது. கர்த்தருக்கென்று பெரிய காரியங்களை

நாம் செய்ய விரும்பினால் அவரிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்க்கவேண்டும். சொந்த பலத்தில் சார்ந்து நிற்பவர்கள் கடவுளின் திருப்புகழுக்காக அரிய செயல்களைச் செய்ய முடியாது. இதை உணர்ந்துதான் சங்கீதக்காரன் பாடுகிறான்: 'என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கின்றன' (சங். 25:15) என்று. 'வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கைகளை நோக்கியிருப்பதைப் போல எங்கள் கடவுளாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கம் செய்யும்வரைக்கும் எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கின்றன' (சங். 123:2). இந்த அனுபவம் எப்போதும் எங்கேயும் நமது அனுபவமாயிருக்கவேண்டும்.

சிறு சிறு காரியங்களிலும் பொருட்களிலும்கூட அவர் கடவுளின் அன்பையும் மாட்சிமையையும் பார்த்தார்: காட்டிலுள்ள மலர்களின் அழகும் நறுமணமும் கடவுளின் படைப்புத்திறனை அவருக்கு நினைவூட்டின (மத். 6:28). பறவைகளின் வாழ்வும் அவைகளின் இனிய பாடல்களும் கடவுளின் பராமரிப்பினை அவருக்கு நினைவுபடுத்தின (மத். 6:26). மேய்ப்பன், ஆடுகள் இவற்றைக் கண்டபோது அந்த உறவில் வெளிப்பட்ட உயரிய அன்பை வைத்து இறைவனின் அன்பை விளக்கிக் காட்டினார் (யோ. 10). இவ்வாறு எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள்! பேயின் வடிவு என்று யூதர்களால் புறக்கணிக்கப்பட்ட பாம்பிலும்கூட அவர் ஒரு நல்ல குணத்தைக் கண்டார் (மத். 10:16). இயேசுவின் திருப்பணிக் காலத்தில் நடந்ததாக ஒரு கதை கூறப்படுவதுண்டு. இயேசுவும் சீடர்களும் போய்க்கொண்டிருக்கையில் வழியருகே ஒரு நாய் செத்துக் கிடந்ததைக் கண்டார்களாம். உடனே சீடர்கள் மூக்கை அடைத்துக்கொண்டு முணுமுணுத்துக்கொண்டே பக்கமாய் விலகிப்போனார்களாம். இயேசு அவர்களை அழைத்து, 'அதோ பாருங்கள், அந்த நாயின் பற்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன' என்று கூறினாராம். இயேசுவின் பார்வை கடவுளின் மகிமையை எந்தச் சூழ்நிலையிலும் கண்டுபிடிக்கும் ஆற்றல் பெற்றிருந்தது.

அவர் மனிதரின் தேவைகளை அன்புடனும் அனுதாபத்துடனும் பார்த்தார்: கடவுளைக் காணும் கண்கள் மனிதர்களை மிகவும்

மதிப்புடன் காணும் என்னும் பாடத்தினை ஆண்டவர் நமக்குக் கற்றுத் தந்துள்ளார். நித்திய ஜீவனை நாடிவந்த பணக்காரனை ஆண்டவர் அன்புடன் பார்த்தார் (மா. 10:21). தம்மைக் காணுவதற்கு ஆவலோடு வந்து மரத்தில் ஒளிந்துகொண்டிருந்த சகேயுவை அவர் பார்த்தார் (லூ. 19:5). பல நோயாளிகளையும் கண்டு அவர் மனதுருகினார். சீடர்களால் தடைசெய்யப்பட்ட குழந்தைகளையும், குருடனையும்கூட அவரது கண்கள் கண்டன. ஆண்டவரின் பார்வை அவரது ஆள்தத்துவத்தையே பாதித்தது. அவர் அனுதாபப்படுகிறவர்போல நடிக்கவில்லை. அவர் எருசலேம் நகரத்தைப் பார்த்து கண்ணீர்விட்டு அழுதார் (19:41). அது மட்டுமா? அவரது அனுதாபமுள்ள பார்வை ஒரு பெரிய செயலுக்கு அவரை உந்தித்தள்ளியது. சிலுவையில் தொங்கும்போதும் தமது தாயை மிகவும் அனுதாபத்தோடு பார்த்த அவர் அவளை யோவானிடம் ஒப்படைக்கிறார். இன்று பல கிறிஸ்தவர்களும் உலகத்தை அன்போடும் அனுதாபத்தோடும் பார்க்கிறார்கள். ஆனால் அவர்களின் உள்ளம் பாதிக்கப்படுவதுமில்லை, அவர்கள் தொடர்ந்து செயல்படுவதுமில்லை. அனுதாபம், அன்பு, செயல் ஆகியவைகொண்ட ஒரு முழுமை இயேசுவின் பார்வையில் இருந்தது.

அவரது பார்வையில் நீதியும், தீமைக்கு எதிரான கோபமும் வெளிப்பட்டன: தொழுமன்றத்தில் கூடியிருந்த பக்தர்களின் இதயக் கடினத்தை முன்னிட்டு அவர் கோபத்துடன் சுற்றிப் பார்த்தார் (3:5). பிள்ளைகள் தவறு செய்யும்போது சில பெற்றோர் அடிப்பதோ, திட்டுவதோ இல்லை. ஆனால் அவர்களின் பார்வையில் விளங்கும் மாற்றமும் கண்டனமும் பிள்ளைகளை அழவைக்கும். மரணம் வந்தாலும் கூடவே இருப்பேன் என்று சவால்விட்ட பேதுரு இயேசுவை மறுதலித்தான். ஆண்டவர் அவனைப் பார்த்தபோது அவன் மனங்கசந்து அழுதான். உலகில் அநீதி தாண்டவமாடும்போது நாம் காணாதவர்கள்போல இருக்கிறோம். இது வாழ்வில் குடிகொள்ளும் சுயநலம் என்னும் பேய் ஆகும். சமுதாயத்தில், திருச்சபையில் நடக்கும் அநீதிகள், அறநெறிச் சீர்கேடுகள் இவற்றிற்கு விரோதமாய் நமது பார்வை

கடவுளின் நியாயத்தீர்ப்பை எடுத்துக்கூறும் அதிகாரம் நிறைந்ததாயிருக்கவேண்டும். 'தீமை செய்கிறவர்களின் புகழை ஒழிக்கக் கர்த்தரின் முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது' *(சங். 34:16).*

இயேசுகிறிஸ்துவின் பார்வையைச் சிந்திக்கிற நாம் அவருடைய பார்வையினால் பாதிக்கப்படவேண்டும். அவரது பார்வையில் வெளிப்படும் அற்புத ஆற்றல் நமது வாழ்க்கையை மாற்றும். அதோடு இயேசுகிறிஸ்துவுக்கிருந்த சிந்தையும், பார்வையும் நமக்கும் இருக்கவேண்டும். நமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் பரத்தைப் பார்க்கிறோமா? அற்பமான இன்பத்தை அளிக்கும் காட்சிகளை நமது கண்கள் ஆவலோடு பார்க்கவில்லையா? அதற்காக நமது பணத்தையும் நேரத்தையும்கூட வீணாக்குகின்றோமே! கடவுளின் மாட்சிமையையும், மக்களின் மதிப்பையும், உலகத்தின் தீமையையும் ஆராய்ந்துபார்க்கும் ஒரு தெய்வீகப் பார்வையை இன்று ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

ஜெபம்:

ஆண்டவரே, நீர் இந்த உலகத்தைப் பார்க்கிற விதமாக நானும் பார்க்க அருள் புரியும். தேவையற்றவைகளைப் பார்த்துக்கொண்டேயிருக்கும் சிற்றின்பத்திலிருந்தும், தேவையானவைகளைப் பார்க்கத் தவறும் மதியீனத்திலிருந்தும் அடியேனுக்கு விடுதலை தாரும்—ஆமென்.

5

எல்லாம் இயேசுவே

(வேற்றுமை உருபுகளுடன்)

'எல்லாம் இயேசுவே, எனக்கெல்லாம் இயேசுவே' என்னும் பாடல் நமக்கு மிகவும் பழக்கமானது. அதனைப் பொருளுணர்ந்து பாடும்போது உண்மையிலேயே ஒரு மகிழ்ச்சி ஏற்படும். எப்பொழுதும் எல்லாவற்றிலும் கர்த்தரை—ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை—மையமாக வைப்பதில் பக்தர்களுக்குத் தனிப்பெரும் மகிழ்ச்சி. பழைய ஏற்பாட்டுக் கால பக்தர்கள் பிரயாணங்களிலும், வழிபாடுகளிலும், பண்டிகைகளிலும் கர்த்தருடைய நாமத்தைத் திரும்பத் திரும்பப் பாடினார்கள். இலக்கண அமைப்புகளை நினைவில் வைத்து அவருடைய நாமத்தைச் சொல்லி அவரைத் துதித்தார்கள். எடுத்துக்காட்டாக, 34ம் சங்கீதத்தில் 'கர்த்தர்', 'கர்த்தரை', 'கர்த்தருக்குள்', 'கர்த்தருடைய', 'கர்த்தருக்கு' போன்ற தொடர்கள் அழகுற அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இப்படி அவரைப் போற்றுவதால் ஓர் ஆன்மீகப் புத்தெழுச்சியை அவர்கள் அடைந்தார்கள். நாமும் தமிழில் வரும் 8 வேற்றுமை உருபுகளோடும் சேர்த்து ஆண்டவரின் மாட்சிமையைக் காணலாம்.

முதல் வேற்றுமை—கர்த்தர் பெரியவர் (சங். 48:1). கர்த்தர் என் மேய்ப்பர் (சங். 23:1). கர்த்தர் நல்லவர் (சங். 34:8)

நமக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. உலகம் நம்மை விரட்டும்போது நாம் ஒளிந்துகொள்ளத்தக்க அடைக்கலப் பட்டணம் உண்டு. உலகம் நமது துன்பங்களைப்பற்றிக் கவலை கொள்ளாதிருக்கும்போதும் நமக்கு அருமையானவர்கள்கூட

நமது வேதனைகளைப் பகிர்ந்துகொள்ள முடியாமலிருக்கும் போதும் நாம் எந்நேரம் வந்தாலும் நம்மோடு பேசி, பழகி, ஆறுதலளிக்கும் ஓர் அன்பு நண்பர் உண்டு. அவர் கர்த்தர். அவர் பெரியவர். அவருடைய மேய்ப்புக்குள் நாம் இருக்கிறோம் என உணரும்போது நெஞ்சம் பூரிப்படைகிறதல்லவா? ஆம், அவர் நமக்கு மிக மிக நல்லவர். இந்தக் கர்த்தர் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.

இரண்டாம் வேற்றுமை—கர்த்தரைத் துதியுங்கள் (சங். 136:1). கர்த்தரை நம்பி நன்மை செய் (சங். 37:3). கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது (சங். 34:10)

உதடுகளிலிருந்து பிறக்கும் கனிகள் ஸ்தோத்திர பலிகள். துதிக்குப் பாத்திரமான ஒரே நாமம். அது கர்த்தரின் நாமம். கர்த்தரைத் துதிப்பதும் உன்னதமான அவரது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதும். . . அவருடைய சத்தியத்தை அறிவிப்பதும் நலமாயிருக்கும் *(சங். 92:1–3).* 'இயேசுவின் நாமமே திருநாமம்.' நமது செயல்களின் அடிப்படை அவர் தான். அவரை நம்புகின்றவன் அந்த நம்பிக்கையின் பிரதி பலிப்பாகப் பிறருக்கு நன்மை செய்கிறான். நமக்கு நன்மையுண்டாகும்படி யார் யாரையோ தேடுகிறோம். உள்ளக் கரிசனையோடு தேடுகிறோம். கர்த்தரை அந்த அளவுக்குத் தேடுகிறோமா? அவரைத் தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது.

மூன்றும் வேற்றுமை—கர்த்தரால் ஆசீர்வாதத்தைப் பெறுவான் (சங். 24:5). ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு (சங். 68:20)

காலையில் எழும்புகிறோம்; கதிரவனைக் காண்கிறோம். இருள் மூடும் நேரத்திலும் வெண்ணிலா வானத்தில் சிரிக்கின்றதைக் காண்கிறோம். மின்னி மின்னித் துலங்கும் கோடிக்கணக்கான விண்மீன்கள்; நிலத்தைக் குளிரவைக்கும் மழைகள்; ஒவ்வொரு நாளும் புதிது புதிதாகத் தோன்றும் கடல் அலைகள்; இயற்கையின் எழில்—இவைகளெல்லாம் யாரால் உண்டாயிருக்கின்றன என்று நாம் கேட்டுக்கொள்வதுண்டா? திரை மறைவிலிருந்துகொண்டு இவை அனைத்தையும் இயக்குகிறவர் கர்த்தரே. அவர் தரும் இந்த ஆசீர்வாதங்களனைத்தையும் பெறும் நாம், அவராலேயே வாழ்வை அடையும் வழியையும் காண்கிறோம்.

நான்காம் வேற்றுமை—கர்த்தருக்குக் காத்திரு (சங். 27:14). நீ கர்த்தருக்குக் காத்திருந்து அவருடைய வழியைக் கைக்கொள் (சங். 37:34). உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு (சங். 37:5)

நம் அன்புக்குரியவர்கள் வெளியில் சென்றுவிட்டால் வரும் வரை காத்திருக்கிறோம். ஆவலோடு வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறோம். காத்திருக்கிறவர்கள் அதிக விழிப்புள்ளவர்கள்; நல்ல கவனமுள்ளவர்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவன் தூய வாழ்க்கை நடத்த விழிப்புள்ளவனாயிருக்கிறான். வங்கிகளை நம்பிப் பணத்தை ஒப்படைக்கிறோம். நாம் ஒப்புவித்ததை விடாமல் காக்கிற கர்த்தரிடத்தில் நமது வாழ்க்கையைத் தைரியத்துடன் ஒப்படைப்போமா?

ஐந்தாம் வேற்றுமை—கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்

ஆறும் வேற்றுமை—கர்த்தரின் வலது கரம் உயர்ந்திருக்கிறது (சங். 118:16). கர்த்தரின் வலது கரம் பராக்கிரமஞ் செய்யும் (சங். 118:15). கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதினால், அவர்கள் கர்த்தரின் வழிகளைப் பாடுவார்கள் (சங். 138:5)

தனது தலையில் கைவைத்து ஜெபம்பண்ணவேண்டுமென்று ஒரு சகோதரன் எப்போதும் கேட்டுக்கொள்வான். அப்போதெல்லாம் நான் அவனிடம், 'சகோதரனே, இந்தக் கைகள் நிலைவரமற்றவை; இவை வைத்துவிட்டுப் போய்விடும். ஆனால் ஆண்டவர் தமது வலது கரத்தை உன் தலையின்மேல் எப்போதும் நீட்டிக்கொண்டிருப்பதாகக் கற்பனை செய்துகொள்' என்று சொல்வது வழக்கம். எல்லா மாட்சிமையிலும் சிறந்தது கர்த்தரின் மாட்சிமை. எல்லா வழிகளிலும் செம்மையானது கர்த்தரின் வழிகள்.

ஏழாம் வேற்றுமை—கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன் (சங். 27:4)

இந்த வேற்றுமை இடப் பொருளைக் குறிக்கும். நமக்குத் தேவையான அனைத்தும் அவருடைய கரங்களில் இருக்கின்றன. அவை விலைமதிப்பற்ற கருவூலங்கள். நமது வாழ்வை நிறைவாக்கும் உயரிய செல்வங்கள் அவரிடம் உண்டு. எதில் நாம் வறுமையடைந்திருக்கிறோமோ அவைகளுக்காக அவரிடம் கேட்போம். நமது மனுக்கள் உடனுக்குடனே பரிசீலிக்கப்படும்.

எட்டாம் வேற்றுமை—கர்த்தாவே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன் (சங். 25:1). கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும் (சங். 119:145). கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறு வயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர் (சங். 71:5)

அப்பா, 'ஓ' அல்லது 'என்ன?' என்று பதில் கொடுத்தாலும் சில பிள்ளைகள் மீண்டும் மீண்டும் அப்பாவை விளித்துக் கொண்டேயிருப்பார்கள். இப்படி விளிப்பதில் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி. கடவுளின் திருவருளையும், அவருடைய மாண்பினையும் நினைந்து நினைந்து பக்தர்கள் பலப் பலப் பெயர்களால் அவரை விளித்துப் பாடினார்கள். துதிக்கும் போதும், மன்றாடும்போதும், பாடும்போதும் நம்மையறியாமல் இந்த உணர்வு ஏற்பட்டு விடுகின்றது. இவ்வித மழலைச் சொற்களால் நமது பரம தந்தை அதிக மகிழ்ச்சியடைகிறார்.

எட்டு வேற்றுமை உருபுகளிலும் ஆண்டவரைப்பற்றிச் சிந்தித்தோம். வாழ்க்கையில் பிறரோடு நாம் கொள்ளும் எல்லாத் தொடர்புகளையும் இந்த வேற்றுமைகளில் அடக்கலாம். அப்படியே ஆண்டவரோடு நமக்குள்ள பெரிய தொடர்பை—இந்த உருபுகளைக் காட்டும் உறவில் வைத்து விளங்கிக்கொள்ளலாம். நமக்குக் கன்மலையாக இருப்பவர் கிறிஸ்துவே. நமது துதிக்குப் பொருளடக்கமும் அவரே. சகல நன்மைகளுக்கும் ஆதிகாரணரும் உறைவிடமும் அவரே. நமது எதிர்பார்ப்பு அவரே. நமக்குப் பாதுகாப்பும்

அவரே. நமக்குச் சொந்தமும் அவரே. நாம் தொடர்பு கொள்ளவேண்டிய நித்திய முகவரியும் அவரே. நாம் அழைத்து விளித்து அன்புகொட்டக்கூடிய அன்பரும் அவரே. எல்லாவற்றிற்கும் எல்லாம் அவரே. எல்லாம் இயேசுவே, நமக்கெல்லாம் இயேசுவே!

ஜெபம்:

கர்த்தராகிய ஆண்டவரே, காலம், இடம் இவற்றால் உம்மைக் கட்டுப்படுத்த நினைக்கும் சோதனையிலிருந்து எங்களை விடுவியும். எப்பக்கத்தில் திரும்பினாலும் உமது திருமுகம் தெரியும்படி எங்களைப் பிரதிபலிப்புள்ள கண்ணாடிகளாக மாற்றும்—ஆமென்.

6

அன்பழைப்பு

அவள் போய் தன் சகோதரியாகிய மரியாளை அழைத்து, 'போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார்' என்றாள். (யோ. 11:28)

எதிர்பாராத இழப்பு. தங்களுக்கு அருமையாக இருந்த சகோதரன் இறந்துவிட்டான். பெத்தானியா சகோதரிகளான மார்த்தாள், மரியாள் என்பவர்களுக்கு இது தாங்கக்கூடாத வேதனை. தங்கள் குடும்ப நண்பரான இயேசுகிறிஸ்துவாவது அப்போது அங்கு இருந்திருந்தாரானால் ஓர் ஆறுதல் கிடைத்திருக்கும். அவரோ போதனை செய்துகொண்டு திரிகிறார். லாசருவின் வியாதியைப்பற்றிக் கேள்விப்பட்ட பிறகாவது உடனே வரவில்லை. எப்படியும் லாசருவின் கதை முடிந்துவிட்டது. பிறகு வருகிறார். வந்தவரை எப்போதும் போல சுறுசுறுப்பாக மார்த்தாள் சென்று வரவேற்றாள். அவளுக்கு இயேசுவைக் கண்டவுடன் துக்கமெல்லாம் பறந்து போய்விட்டது. உயிர்த்தெழுதலும் ஜீவனுமான இயேசு கிறிஸ்துவைக் காண அவள் கண்கள் திறக்கப்பட்டுவிட்டன. ஓர் அற்புதமான மகிழ்ச்சி. ஆனால் இந்த மகிழ்ச்சி தனது சகோதரியாகிய மரியாளுக்கு இன்னும் கிடைக்கவில்லை. உயிர்த்தெழுதலின் நம்பிக்கையினை ஊட்டும்படி அவளையும் அழைத்துவரச் சொல்லுகிறார். கண்ணீரோடும் கவலையோடுமிருந்த மரியாளுக்கு இயேசு வந்துவிட்டார் என்கிற செய்தி மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கவேண்டும். அந்த நற்செய்தியில் இரண்டு வார்த்தைகள் முக்கியமானவை.

போதகர் வந்திருக்கிறார்: அவர் பிந்திதான் வந்தார். ஆனால் அவர் ஏற்கெனவே லாசருவை எழுப்பப் போவதாகச்

சொல்லித்தான் வந்திருக்கிறார். இயேசு வந்துவிட்டார் என்றால் மரணத்தின் கூரை ஒடிக்கும் புதிய உயிர் வந்துவிட்டது என்றுதானே பொருள்? அவர் எங்கேயோ இருந்துகொண்டு நம்மை அவரிடம் அழைக்கவில்லை. நாம் இருக்கிற உலகத்திற்கு, நமது கிராமத்திற்கு, நமது வீட்டிற்கு அவர் வருகிறார்.

இயேசுவின் வருகையில் எப்போதும் ஒரு நோக்கம் உண்டு. 'இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்' (லூ. 19:10). எனவே எங்கே இழப்பு ஏற்படுகிறதோ அங்கே அவர் வருகிறார். அவர் தேடிக்கொண்டு வருகிறார். மீட்கவேண்டுமென்ற ஆர்வத்தோடு வருகிறார். நமது இக்கட்டான நிலைகளில் அவருடைய வருகை பிந்தினதுபோலக் காணப்படலாம். ஆனால் அதற்கும் அவரிடம் ஒரு நோக்கம் உண்டு, நமது கஷ்டங்களைக் குறித்த அக்கறை அவருக்கு அதிகம் உண்டு. அந்த அக்கறையோடும் அன்போடும் இப்போது நம்மிடம் வந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து வந்துவிட்டார் என்றால் அவர் மட்டும் ஒரு மனிதராக வரவில்லை. அவரோடு பரலோகமே இந்த உலகத்திற்குள் வந்துவிட்டது. இறையரசு நமக்குள்ளேயே இருப்பதாகப் போதித்தார். நித்திய ஜீவன் இங்கேயே பெற்றுவிடலாம். உயிர்த்தெழுதலும் வாழ்வுமாயிருக்கிற அவரிடம் நம்பிக்கைகொள்ளும்போது மோட்ச வாழ்வு இந்த உலகத்திலேயே துவங்கிவிடுகிறது. இதன் முழுமையைத்தான் நாம் மறுமையில் காண்போம். இப்படிப்பட்ட மகிமை நிறைந்த கிறிஸ்து வந்திருக்கிறார் என்று கேட்டது மரியாளுக்கு எத்தனை பெரிய நற்செய்தி!

அவர் உன்னை அழைக்கிறார்: நீ துக்கத்தில் இருப்பது அவருக்குத் தெரிகிறது. உனது துக்கத்தை வேறு யாராலும் மாற்ற முடியாது. வேறு யாரோடும் பேசி உனக்கு மகிழ்ச்சிதர அவர் விரும்பவில்லை. உன்னோடு அவர் நேரடியாகப் பேசவேண்டுமாம். நம்பிக்கையில் உனக்கு ஏற்பட்டிருக்கிற பழுதை அவர்தான் பார்க்கவேண்டுமாம். உனது ஆன்மீக வாழ்வின் வறட்சியை அவர் நேரடியாகச் சந்திக்க விரும்புகிறார். ஆகையால் அவர் உன்னை அழைக்கிறார்.

அவருடைய அழைப்பில் ஆசீர்வாதம் நிறைய இருக்கும். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களுக்கு அவரிடம் இளைப்பாறுதல் இருக்கும். தாகமாயிருக்கிறவர்களுக்கு வாழ்வளிக்கும் தண்ணீர் அவரிடம் உண்டு. குருடர்களுக்குப் பார்வையும், முடவர்களுக்குக் கால்களும், தனிமையில் வாடுவோருக்குத் துணையும், வாழ்வில் வறட்சியடைந்திருப்போருக்குச் செழிப்பும் கொடுக்க அவர் வல்லவர். நமது நிலையினை உணர்ந்து அவரது அழைப்புக்குக் கீழ்ப்படிவோமா?

இந்த நிகழ்ச்சியில் விளங்கும் மூன்றாவது உண்மை மரியாளின் கீழ்ப்படிதலாகும்: 'அவள் அதைக் கேட்டவுடனே சீக்கிரமாய் எழுந்து அவரிடத்தில் வந்தாள்' (யோ. 11:29). அழைப்பின் செய்தியைக் கேட்டவுடன் மரியாள் தாமதம்பண்ணவேயில்லை. சிந்திப்பதற்கோ, ஆயத்தப்படுவதற்கோ அவள் நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. தீவிரத்தோடு ஓடுகிறாள். தன்னை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இயேசுவைச் சந்திக்கிறாள். 'ஆண்டவரே, நீர் இங்கு இருந்திருந்தால் என் சகோதரன் மரணமடைந்திருக்கமாட்டான்' என்கிறாள். அந்த யூதர்களின் நடுவில் அது ஒரு சிறந்த அறிக்கையாக இருந்தது.

மரியாளின் அழுகையைக் கண்ட இயேசு தாமும் ஆவியில் கலக்கமடைந்து அழுகிறார். இதுவன்றோ மாபெரும் அன்பு! நம்முடைய துக்கத்தை அவர் பகிர்ந்துகொள்ளுகிறார். ஏதோ மந்திரவாதிபோன்று அற்புதம் செய்யாமல் நம்முடைய உணர்ச்சிகளுக்குள் கலந்து நம்மோடு சேர்ந்து அழுகிறார். இப்போது நமக்கு ஆறுதலாயிருக்கிறதல்லவா? லாசருவை உயிரோடெழுப்பின அற்புதத்தைவிட பெரிய அற்புதம், அவர் அந்தக் குடும்பத்தின் துக்கத்தில் பங்குபெற்று அவர்களுக்கு ஆறுதல் வழங்கியதாகும்.

நாம் வாழ்க்கையின் சந்தடிகளால் சோர்புற்றிருக்கிறோமா? மனப்போராட்டங்களால் அலசடிப்படுகிறோமா? முன்னால் இருந்த உம் நம்பிக்கையில் அசைவு ஏற்பட்டிருக்கிறதா? நாம் செய்த பாவங்களை எண்ணி கவலைமேல் கவலையடைகிறோமா? வறுமை, கடன், நோய் இவற்றால் மகிழ்ச்சியின்றிக் காணப்படுகிறோமா? பயப்படவேண்டாம். நம் வாழ்வில் மாபெரும் அற்புதம் நடக்கப்போகிறது. இயேசுகிறிஸ்து உம் அருகே வந்து உம்மை அழைக்கிறார். எப் பெரிய பாவியானாலும் உம்மை ஏற்க அவர் தயங்கவேமாட்டார். சீக்கிரம் போவாயா? அப்போது உன் துன்பங்களில் உன்னோடு சேர்ந்து துன்புறும் அன்புடைய மீட்பரைக் காண்பாய்.

பாவி! உன் மீட்பர் கரிசனையாய்
அழைக்கிறார் அழைக்கிறார்!
அலைந்து திரிந்து ஏன் கெடுவாய்?
இயேசுவின் இரட்சிப்பைப் பார்.

அழைக்கிறார்! அழைக்கிறார்
விரும்பி வருந்தி உந்தனை அழைக்கிறார்!

ஜெபம்:

கர்த்தாவே, என் துன்பத்தில் இன்பமும், கசப்பில் இனிப்பும், தனிமையில் துணையும் நீரே. இப்போதே வருகிறேன், ஏற்றுக்கொள்ளும்—ஆமென்.

7

இயேசு உயிர்த்தெழுந்தார்

‘வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.’ *(1 கொ. 15:4)*

‘கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.’ *(1 கொ. 15:22)*

ஆத்திரத்தோடு வெளிப்பட்ட உணர்ச்சிகள் அடங்கிப் போய்விட்டன. அரசைக் கட்டி ஆட்சி செய்து தங்களுக்கும் ஆசனங்கள் கொடுப்பார் என்று தங்கள் குருவைப் பற்றிக் கொண்டிருந்த சீடர்களின் நம்பிக்கையில் ஒரு சலனம் ஏற்படுகின்றது. பரம பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்ட அந்தத் திருமைந்தன் சாபத்தின் சின்னமாகிய சிலுவையில் அடைந்த மரணம் அவரது நண்பர்களுக்கு ஒரு புதிராக அமைந்தது. தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள இந்தக் கொடிய மந்தாரம் நீண்ட நாள் இருக்கப்போவதில்லை என்பதை அவர்கள் அப்போது தெரிந்துகொள்ள முடியவில்லை.

மறுபக்கமோ யூதர்களின் கொண்டாட்டம். இடறுதல் உண்டாக்கின கல்லைப் பூமிக்குள் புதைத்துவிட்டோம் என்ற மகிழ்ச்சி. அவர் சிலுவை மரணத்திற்குத் தகுதியானவர் தான் என்பதில் இப்போது அவர்களுக்குச் சந்தேகமே இல்லை. ஏனெனில், கடவுளின் திருமைந்தன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வந்திருப்பாரே. இனி தேவாலயத்திலும் ஜெபாலயங்களிலும் தொந்தரவு தீர்ந்துவிட்டது என்ற நிம்மதி. இந்த அற்ப மகிழ்ச்சி நீண்ட நாள் இருக்காது என்பதை அவர்கள் உணரவில்லை.

காரிருள் மாறி மூன்றாம் நாள் ஓர் ஒளிப்பிழம்பு விழுந்தது. ரோமை அரசாங்கத்தின் முத்திரையை அது உடைத்தது.

காவல் காத்தோர் கலங்கினர்; கட்டுகள் அவிழ்ந்தன; கல்லறை திறந்தது. ஆம், இயேசு உயிர்த்தெழுந்தார் என்னும் செய்தி எருசலேமின் காலை இருளைக் கிழித்துச் சென்றது. இது ஒரு மாபெரும் அற்புதம். இந்த அற்புதம் காலம் கடந்த ஒன்றல்ல; நிகழ்ந்துகொண்டே இருக்கும் ஒன்று. இதைப் பவுல் அப்போஸ்தலன் மூன்று படிநிலைகளில் வைத்துக் காண்கிறார்.

1. **கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்:** ‘கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்’ (1 கொ. 15:20). இது ஏதோ எதேச்சையாக ஏற்பட்ட நிகழ்ச்சி அல்ல. மீட்பின் திட்டத்தில் கடவுளின் சித்தம் எதுவோ அதன்படி நடந்தது. மனிதனின் சுயாதீனம் கடவுளின் திட்டத்தைத் தாமதிக்கப்பண்ணலாம். ஆனால். அதை அழிக்க இயலாது. இறுதியில் அவரே வெற்றி கொள்கிறார். கடவுள் இயேசுவின் மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை உயிரோடு எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது (அப். 2:24).

உயிர்த்தெழுதல் ஒரு வரலாற்று நிகழ்ச்சி ஆகும். அதற்குச் சான்று, வெறுமையான கல்லறை மட்டுமல்ல, மாற்றமடைந்த மக்களும் ஆவார்கள். மரணத்தைக்கண்டு அஞ்சி மறுதலித்த பேதுரு பெரும் மக்கள் கும்பலின் நடுவே நின்றுகொண்டு ‘இந்த இயேசுவைக் கடவுள் உயிரோடெழுப்பினார்; இதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்’ என்று வீர முழக்கமிடுகிறார் (அப். 2:32). இந்தத் தைரியம் எங்கிருந்து வந்தது? இயேசு பிடிக்கப்பட்டபோது ஓடிவிட்ட அப்போஸ்தலர்கள், அவர் உயிர்த்தெழுந்த பின்பு செய்த பணியைத் தடை செய்வதற்காக அவர்களை அடித்து அவமானப்படுத்தினார்கள். இயேசுவின் நாமத்தில் அடிபட்டு அவமானமடைந்ததற்காக அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள் (அப். 5:40,41). இந்த மகிழ்ச்சி எங்கிருந்து வந்தது? இப்படிப்பட்ட கோழைகள் பலனடைந்ததில் இயேசுவின் உயிர்த்தெழுதல் உண்மையென உறுதிப்படுகின்றது. அணுகுண்டு விழுந்து வெடித்ததை நாம் காணவில்லை; ஆனால் அந்த இடத்தில் விழுந்த குழி, மண்சிதறல் இவற்றை இன்றும் காண்கிறோம்.

2. நமது உயிர்த்தெழுதல்: 'அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்' (ரோ. 6:5). இவ்விதமாக இயேசுவின் உயிர்த்தெழுதல் அவரில் நடந்த ஒரு விந்தை அல்ல; அது மனிதர்களாகிய நம்மோடும் இணைந்த செயலாயிருக்கிறது.

நம்முடைய உயிர்த்தெழுதல் என்னும்போது அதை இரண்டு விதங்களில் புரிந்துகொள்ளும்படி பவுல் நம்மைத் தூண்டுகிறார். ஒன்று இந்த உலகத்திலேயே பாவத்திற்குச் செத்து நீதிக்குப் பிழைக்கும் ஓர் அனுபவம். மற்றது இறுதி நாளில் நாம் உயிரோடெழுப்பப்படுவோம் என்கிற நம்பிக்கை ஆகும். 'நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் கடவுளுக்கென்று பிழைக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்' (ரோ. 6:11). கிறிஸ்தவ வாழ்க்கை செத்துப் பிழைக்கின்ற அனுபவம். பாவம் சாகவேண்டும். சிலர் மீட்கப்பட்டவர்களைப்போல நடிக்கிறார்கள். இன்னும் அவர்களில் சாகாத பாவங்கள் உண்டு. ஆராதனையில் உட்கார்ந்திருக்கும்போது பெட்டிப் பாம்புபோன்று அடங்கியிருப்பார்கள்; ஆனால் வெளியே சென்றால் தெரியும் அவர்களின் குணம். மரித்தவர்களைப்போல நடிப்பதில் நரிகள்தான் அதிக தந்திரமுள்ளவை. முகம் மறையும்போது அவைகள் ஓடும். சிலர் பாவத்தைக் குற்றுயிராக விட்டிருக்கிறார்கள். ஆனால் அது ஒரு நாள் பிழைத்துவிடும் அபாயம் உண்டு. நமது வாழ்வில் சாகாத பாவங்கள், குற்றுயிராகக் கிடக்கும் தீய குணங்கள் உண்டா என்று சிந்தித்துப்பார்ப்போம். பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டுப் புதிய மனுஷன் நம்மில் உயிர்த்தெழட்டும்.

அடுத்து, நாம் இறுதிநாளில் உயிர்த்தெழுவோம் என்கிற நம்பிக்கை உண்டு. மரணமானது நித்திய வாழ்வுக்குள் செல்லும் ஒரு நுழைவாயிலாகும். 'எக்காளம் தொனிக்கும், அப்போது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்' (1 கொ. 15:32). இயேசுகிறிஸ்து மரணத்தை வென்று வெற்றியடைந்தார்.

பிசாசானவனைத் தம் மரணத்தால் அழித்து, மரண பயத்திலிருந்து நமக்கு விடுதலையைத் தந்துள்ளார் (எபி. 2:14,15). எனவே மகிழ்ச்சியோடே நமது ஓட்டத்தைத் தொடருவோம்.

3. இன்றும் பலனளிக்கும் உயிர்த்தெழுதல்: 'கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா' (1 கொ. 15:14). திருச்சபை இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சின்னமாக விளங்குகின்றது. அது தனது விசுவாச அறிக்கையில் இயேசுவின் உயிர்த்தெழுதலை அறிக்கையிட்டு வருகின்றது. பலருடைய மரணத்திலும் இந்த விசுவாசம் காக்கப்பட்டு வருகின்றது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் மார்க்கு அலீலியு என்னும் பேரரசன் காலத்தில் ஜஸ்டின் மார்ட்டர் என்பவர் உயிர்த்தெழுதலை அறிக்கையிட்டு இரத்தசாட்சியாக மரித்தார். 'நீ உயிர்த்தெழுவாயென்று யூகிக்கிறாயா?' என்ற குற்றவியல் நடுவரின் கேள்விக்கு ஜஸ்டின், 'நான் யூகிக்கவில்லை; எனக்கு அது நிச்சயமானது' என்று பதிலளித்தார். கிறிஸ்தவர்களுக்குக் கர்த்தருடைய நாள் ஏழாம் நாளாகிய ஓய்வுநாளல்ல; முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை ஆகும். இயேசு இந்த நாளில் உயிர்த்தெழுந்தபடியால் உலகம் முழுதும் இது அனுசரிக்கப்படுகின்றது. புதிய ஏற்பாடு எழுதப்படுவதற்குக் காரணமே இயேசுவின் உயிர்த்தெழுதலாகும். திருவிருந்தின்போதெல்லாம் நாம் இயேசுவின் மரணத்தை நினைவுகூர்ந்து அவரது உயிர்த்தெழுதலை அறிக்கையிடுகிறோம். இன்றும் உள்ளங்கள் மாற்றப்படுகின்றன என்றால், அது உயிர்த்தெழுதலின் தொடர்ச்சியாக வரும் நடைமுறைச் செயலாகும்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் மூடும் கற்களை அகற்றுகின்றது. பிரேதச் சீலைகளை நீக்குகின்றது. புதிய இடத்திற்கு நம்மை அழைக்கின்றது. காலத்தால் உயிரற்றுப்போன பழக்கங்கள், மனப்பான்மைகள் இவற்றை இன்னும் நாம் மூடிப் பாதுகாப்போமானால், இயேசுவை நாம் இன்னும் அடக்கிவைக்கிறோம் என்பதுதானே பொருள்! நமது வாழ்விலும் திருச்சபையிலும் மூடிநிற்கும் கற்கள் அகலட்டும்; அதிகாரப்படுத்தும் முத்திரைகள் உடையட்டும்; சோகம் நிறைந்த வாழ்வுகள் மகிழ்வு

நிறைந்தவைகளாக மலரட்டும். அப்போது ‘கிறிஸ்து எனக்கு வாழ்வு, சாவு எனக்கு இலாபம்’ என்று நாமும் பாடலாம் (பிலி. 1:21).

ஜெபம்:

உயிர்த்தெழுந்த ஆண்டவரே! செயல்களில் வெளிப்படாத செத்த விசுவாசத்திலிருந்தும், அழுகிப்போனவற்றைப் பாதுகாக்கும் அறியாமையிலிருந்தும் என்னை விடுவியும். சிலுவையை நினைத்து அழுதுகொண்டு மட்டும் இராமல், உயிர்த்தெழுந்தவராக எங்களுக்கு முன்னே பணிசெய்யச் செல்லும் உம்மை நாங்கள் பின்பற்றிவர அருள்புரியும்—ஆமென்.

8

எபநேசர்—இம்மானுவேல்

‘அதற்குக் கடவுள்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடன் சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று இஸ்ரவேலரோடு சொல்வாயாக என்றார்.’ *(யாத். 3:14)*

‘அப்பொழுது சாமுவேல் ஒரு கல்லை எடுத்து, மிஸ்பாவுக்கும் சேணுக்கும் நடுவாக நிறுத்தி, இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார் என்று சொல்லி அதற்கு எபநேசர் என்று பெயரிட்டான்.’ *(1 சாமு. 7:12)*

‘இம்மானுவேல் என்பதற்குக் கடவுள் நம்மோடிருக்கிறார் என்று பொருள்.’ *(மத். 1:23)*

கப்பல் ஓட்டும் மாலுமிக்குத்தான் கலங்கரை விளக்கத்தின் அருமை தெரியும். ஏதோ ஓர் உலகத்தில் போகிற உணர்வோடு, காரிருள் நேரத்திலும் கடலில் பயணம் செய்கிறவர்கள் அடிக்கடி பயப்படுவார்கள் என்பதில் வியப்பொன்றுமில்லை. அந் நேரத்தில் விட்டுவிட்டு வீசும் ஒளிக் கதிர்கள் அவர்களுக்குத் தைரியத்தை அளிக்கின்றன. தாங்கள் உலகத்திலிருந்து தனித்து விடப்படவில்லை என்ற உணர்வு அப்போது பிறக்கிறது. தங்கள் பயணத்தின் முன் பாதைகளில் அபாயங்கள் இருந்தால் எளிதில் கண்டுகொள்ளுகிறார்கள். இதுபோன்றே உலகில் ஆன்மீகப் பயணம் செய்யும் கடவுளின் மக்கள் சோர்ந்துபோகும் நேரத்திலும், பயப்படும் நேரத்திலும் வேத புத்தகத்தில் அங்கங்கே கலங்கரை விளக்கங்கள் ஒளிர்வதைக் காண்பார்கள். கலங்கரை விளக்கம் ஒரு சுருக்கமான அமைப்பு; ஆனால் அதன் ஒளி பரந்துபட்டு வீசுகின்றது. திருமறையில் இக் கலங்கரை விளக்கங்கள் சுருக்க வடிவில் சிறப்புப் பெயர்களாகக் காணப்படுகின்றன.

அவைகளில் மிக முக்கியமான மூன்றினைப்பற்றி இன்று சிந்திக்கப் போகிறோம்.

'யெகோவா' அல்லது 'கர்த்தர்' என்னும் பெயர்: இதன் பொருள், இருக்கிறவராக இருக்கிறேன் என்பதாகும். முன்னும் பின்னும் அறியாத கடவுள் தன்னை ஒரு பெரிய பணிக்கென்று அழைத்தபோது மோசே அவரது பெயரைக் கேட்கிறான். கடவுளின் பெயரை அறிய விரும்புவது அவரின் இயல்பையும் குணத்தையும் அறிய விரும்புவதாகும். பெயரில்லாத கடவுள் இஸ்ரவேலருக்கு அன்னியக் கடவுள். கடவுளின் பெயரை அறியும்போது புதிய உறவு பிறக்கிறது. கடவுளின் பேரில் நமக்கு உரிமையும் பிறக்கிறது. நாம் சிலரைப் புதிதாகச் சந்திக்க நேர்ந்தால், பிரியும்போது ஒருவருக்கொருவர் பெயரைக் கேட்டுக்கொள்கிறோம். இதனால் நட்பும் உறவும் தொடர வழி ஏற்படுகிறது. மோசே தனது பணியில் அடைந்த எல்லாத் துன்பங்களிலும் தன்னை அழைத்த 'யாவே' என்னும் கடவுளின் பெயர்தான் அவனுக்குத் தைரியத்தையும் ஆறுதலையும் கொடுத்தது. இருக்கிறவராக இருக்கிறவர் நித்திய தன்மையுடையவர். முக்காலங்களையும் அறிகிறவர். எனவே நாம் எதிர்காலத்தைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை. நம்மைத் தமது உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறவர் தமது திட்டப்படி நம்மை நடத்துவார் என்ற மகிழ்ச்சியில் பயணத்தைத் தொடருவோமாக. இந்த யெகோவா என்னும் பெயரோடு தொடர்புடைய இன்னும் சில தொடர்கள் உண்டு:

யெகோவா யீரே = கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக்கொள்ளப்படும் (ஆதி. 22:14)

யெகோவா ஷாலோம் = கர்த்தரின் சமாதானம் (நியா. 6:24)

யெகோவா ஜிட்கேனு = நீதியாயிருக்கிற கர்த்தர் (எரே. 23:6)

யெகோவா ஷம்மா = அங்கே இருக்கிற கர்த்தர் (எசே. 48:35). (கர்த்தரின் வீடு)

யெகோவா நிசி = கர்த்தரின் கொடி (யாத். 17:15) (வெற்றி)

யெகோவா ரூபா = பரிகாரியாகிய கர்த்தர் (யாத். 15:26)

இவை ஒவ்வொன்றையும் தியானிக்கும்போது நமது உள்ளம் கொழுந்துவிட்டு எரியும். இருக்கிறவராகவே இருக்கிற ஆற்றல் நிறைந்த ஒருவரை நம் தந்தையாகப் பெற்றிருப்பது எத்தனை பாக்கியம்!

எபநேசர் என்னும் பெயர்: இது ஒரு நினைவுச் சின்னமாகிய கல்லுக்கு இடப்பட்ட பெயராகும். அது உதவியின் கல். இம்மட்டும் ஆண்டவர் செய்திருக்கிறவைகளை நினைக்காமல் வருங்காலத்தை அறிவதிலேயே ஆர்வம் கொண்டிருப்பது சுயநலமாகும். இன்னும் இன்னும் என்று நீட்டிக்கொண்டு போகாமல், இம்மட்டும் இம்மட்டும் என்று சிந்தித்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம். 'என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல நன்மைகளையும் மறவாதே' என்று சங்கீதக்காரன் பாடுகிறார் (சங். 103:2). வரலாற்றில் முழு உலகத்திற்கும் கடவுள் செய்த உதவியை எடுத்துக் காட்டும் சின்னங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானது சிலுவை. இது முழு உலகத்திற்கும் நிறைவேற்றப்பட்ட தேவனின் இரட்சிப்பை நமக்கு நினைவுபடுத்துகின்றது. இதற்கான நன்றியுணர்வு நமது உள்ளத்தில் பொங்குகின்றதா? நாட்டுக்காக உயிர்விட்ட போர் வீரர்களின் நினைவுச் சின்னங்களைப் பார்க்கும்போது அவர்கள் நமக்குச் செய்த உதவியை எண்ணாமலிருக்கமுடியாது. நமது வாழ்க்கைப் பாதையில் அடிக்கடி எபநேசர் என்னும் நினைவுச் சின்னத்தைக் காண்போமாக. அது நமக்குப் புது தைரியத்தையும் மகிழ்ச்சியையும் வழங்குகின்றது. 'கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்' (சங். 126:3).

இம்மானுவேல் என்னும் நாமம்: கடவுள் நம்மோடிருக்கிறார் என்று பொருள். இயேசு என்னும் பெயர் இரட்சகர் என்று

பொருள் பெற்றது. இந்த இரட்சகர் பழைய ஏற்பாட்டில் எதிர்
பார்க்கப்பட்ட இம்மானுவேல் என்று மத்தேயு கூறுகிறார்.
எப்படியும் இங்கு இச் சொல்லின் தனி முக்கியத்துவத்தை
மட்டும் பார்ப்போம். இயேசுகிறிஸ்துவுக்கு முன்னும் கடவுள்
நம்மோடிருப்பது மெய்யெனினும், அவர் மூலம் கடவுள்
நமக்கு மிக அண்மையில் வந்துவிட்டார், நமது உலக
வாழ்வில் கலந்துவிட்டார் என்கின்ற உண்மை வெளிப்படு
கிறது. இருக்கிறவராக இருக்கிறவர் நம்மோடும் இருக்கிறார்.
இதனால் இரு உண்மைகள் நமக்கு முன் தோன்றுகின்றன.
முதலாவது அவர் நம்மோடிருப்பதை உணரும்போது நாம்
தீய செயல்களைச் செய்யப் பயப்படுவோம். கடவுள்
எங்கேயோ இருக்கிறார் என நினைத்து துணிகரமான பாவங்
களைச் செய்வது நம்மை நாமே ஏமாற்றுவதாகும். அவரது
பார்வைக்கு மறையத்தக்கதான ஒளிப்பிடம் உலகில் இல்லை.
நமது படுக்கை அறை முதல் பணித்தளம் வரை யாவும்
அவருக்கு வெட்ட வெளிச்சமாக இருக்கிறது. நமது நினைவு
களையும்கூட அவர் ஆராய்ந்து அறிகிறார். அடுத்து அவர்
நம்மோடிருக்கிறார் என்று உணரும்போது ஒரு பெரிய உள்
ஆற்றல் நம்மில் குடிகொள்கிறது என்றும் அர்த்தம்.
அன்னாளின் கண்ணீரும் ஆகாரின் அழுகையும் தேவ சமுகத்தில்
மறைக்கப்படுவதில்லை. சிங்கக் குகையிலும் தீச்சூளை நடுவிலும்
கூட அவர் நம்மோடிருக்கும் இம்மானுவேலாயிருக்கிறார்.

கலங்கரை விளக்கங்களை ஒழுங்காகப் பயன்படுத்திக்
கொள்ளாதவர்கள் அதனை வீணாக்குகிறார்கள். அவர்களுக்
காகச் செய்யப்பட்ட செலவு நஷ்டமடைகிறது. உறுதியான
நம்பிக்கைக்கு நேராக நம்மை உந்தித்தள்ளும் இந்தப்
பெயர்களை நாம் எப்போதும் உச்சரித்துத் தியானிக்கலாம்.
தேவையற்ற பெயர்களை அலம்பிக்கொண்டு பொழுது
போக்குவதில் பயனில்லை. அளவுக்கு மிஞ்சி மனிதர்களின்
ஆற்றலில் சார்ந்து நிற்பதும் நிலைவரமற்ற ஒன்று. நமது
செயல்களால் ஆண்டவரின் திருப்பெயர் வீணிலே வழங்கப்
படக்கூடாது. 'வல்ல மீட்பர் நாடு சேரும் நேரம்' வரையும்
செல்லப்பிள்ளைகளாகவே நமக்கு முன் காணப்படும் பெயர்
பலகைகளைப் பார்த்துக்கொண்டே முன்னேறிச் செல்வோம்.

இருக்கிறவராகவே இருக்கிறவர் நமக்கு எபநேசரும்
இம்மானுவேலுமாயிருக்கிறார்.

ஜெபம்:

அன்புத் தந்தையே! உமது பெயருக்காகப் பாடுபடவும் உமது பெலத்தில் சார்ந்திருக்கவும் அருள்புரியும். எங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் உம்மை நாங்கள் சந்திக்கும்படி உமது திருப்பெயர்கள் எங்கள் உள்ளப் பலகையில் எழுதப்பட்டிருக்கட்டும்—ஆமென்.

9

இந்த நாள்

'இது கர்த்தர் உண்டுபண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.' (சங். 118:24)

'இது அனுக்கிரக காலம், இன்று இரட்சண்ய நாள்.' (2 கொ. 6:2)

காலங்களும் நேரங்களும் ஆண்டவரின் கரத்தில் உள்ளன. நாம் 'இன்று' என்று சொல்வதை நேற்று 'நாளை' என்றும், நாளைக்கு அதை 'நேற்று' என்றும் சொல்கிறோம். இப்படி நாட்கள் கடந்துகொண்டே செல்கின்றன. ஒவ்வொரு நாளும் ஆண்டவர் நமக்குத் தரும் அருட்கொடை ஆகும். 'என் காலங்கள் உமது கரத்தில் இருக்கின்றன' என்று பாடும் சங்கீதக்காரனின் அனுபவம் நம்முடையதாகவுமிருக்க வேண்டும் (சங். 31:15). சும்மா போகிறேன், சும்மா இருக்கிறேன் என்று கூறிக் காலங்களை வீணாக்குகின்றவர்கள் அதன் மதிப்பை உணராதவர்கள் ஆவர். ஒவ்வொரு நாளும் நமக்கு முக்கியமானது. ஒவ்வொரு நாளிலும் காலையில் எழுந்தவுடன் 'இந்த ஒரே நாள்தான் என் வாழ்க்கையில் உண்டு' என்று எண்ணி தங்கள் பணிகளைச் செய்கின்றவர்கள் உலகில் பெரிய காரியங்களைச் சாதிக்கமுடியும் என்று ஒரு பக்தன் கூறுகின்றார். ஆம், இது எவ்வளவு உண்மை! ஆண்டவர் தரும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் நாம் கணக்குச் சொல்லவேண்டும். எனவே இன்றைய தினமாகிய இந்த நாள் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதைச் சிந்திப்போம்.

இது கடவுளால் படைக்கப்பட்ட நாள்: ஆண்டவரின் படைப்பு வேலை தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு நாளையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு அவர் படைக்கிறார். இந்த நாளில் செய்து முடிக்கப்படவேண்டிய பணிகள்

அவரது நாள் குறிப்பேட்டில் உண்டு. இந்தப் பணிகளில் மனிதர்களும் ஒத்துழைக்கவேண்டுமென்பதே அவர் விருப்பம். கடவுள் தமது சாயலில் மனிதனைப் படைத்ததின் பொருள், அவரோடு சேர்ந்து மனிதனும் படைப்புப் பணியில் ஈடுபட வேண்டும் என்பதே. இயேசுகிறிஸ்துவும் தமது பரம தந்தை செய்கிறதாகக் கண்டதையெல்லாம் தாமும் செய்தார் (யோ. 5:19). ஒவ்வொரு நாளும் நாம் ஜெபிக்கிறதின் நோக்கம் நமது பொறுப்புக்களையெல்லாம் கடவுள்மேல் வைத்துவிட்டு சும்மா இருக்க அல்ல, கடவுளிடமிருந்து இந்த நாளுக்குரிய பொறுப்புக்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்காகவே ஆகும். மனிதன் ஒத்துழைக்காத காரணத்தால் ஆண்டவர் மகிழ்ச்சியுடனும், துரிதத்துடனும் தமது பணியினைச் செய்ய முடிவதில்லை. எனவே இந்த நாளின் பெருஞ்சிறப்பை உணர்ந்துகொள்வோமா?

இந்த நாள் கர்த்தர் நம்மைச் சந்திக்கும் நாள்: 'நம்மை அவர் சந்திக்கும் காலத்தை அறிந்து இந்த நாளிலாகிலும் நமது சமாதானத்துக்கேற்றவைகளைத் தெரிந்துகொண்டால் நலமாயிருக்கும்' (லூ. 19:42,43). அவர் நம்மைச் சந்திக்க வரும்போது நாம் அதிக விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும். இன்று சிறப்பாக அவர் நம்மைச் சந்திகக விரும்புகின்றார். நாம் விரும்பும் தோற்றத்தில் அல்ல, அவர் விரும்பும் தோற்றத்தில் நம்மைச் சந்திக்க விரும்புகிறார். இன்ன உருவத்தில்தான் அவரை நான் சந்திக்கவேண்டுமென்று நாம் ஏற்கெனவே மனதில் திட்டம்பண்ணிவிடுகிறபடியால், சில வேளை வேறு உருவத்தில் அவர் நம்மைச் சந்திக்க வந்து நிற்பது நமது கண்களுக்கு மறைவாயிருக்கிறது. அரசன் ஒருவன் தன் நாட்டிலுள்ள ஓர் ஏழைக் குடும்பத்திற்கு உதவி செய்ய விரும்பி ஓர் இரவில் மாறுவேடத்தில் அந்த வீட்டிற்குள் நுழைந்தாராம். அந்த வீட்டு மக்களோ வீண் வார்த்தைகளையெல்லாம் கூறித் தங்கள் இழிநிலையினையும் உணராமல் நாட்டு அரசனை இழிவாகப் பேசினார்களாம். எனினும் நினைத்தபடி அவர் கொஞ்சம் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். ஒரு நாள் அவர்களைத் தன் அரண்மனைக்கு அழைத்து, அன்று இரவு அவர்கள்

பேசினதையெல்லாம் அப்படியே அரசன் நினைவுபடுத்தினான். வெட்கத்தால் தலை குனிந்த அந்த மக்கள் அழுகையோடும் கண்ணீரோடும் அரசனின் மன்னிப்புக்காகக் கெஞ்சினார்கள். கல்லறையருகே தோட்டக்காரன் போன்றும், கடற்கரையில் சாதாரண மனிதன் போன்றும், பயணத்தில் வழிப்போக்கன் போன்றும் அவர் நம்மைச் சந்திக்கிறார். இந்த நாளில் அவர் சந்திப்பதை அறிந்து அவரது பாதத்தில் விழ ஆயத்தமாயிருப்போம்.

இந்த நாள் இரட்சண்ய நாள்: 'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்' (1 தீமோ. 2:4). கடவுளின் பணி முழுக்க முழுக்க மீட்பின் பணி ஆகும். வேட்டை நாய் போன்று அவர் நம்மைத் தொடர்ந்து வருகின்றார். இயேசு கிறிஸ்துவின்மூலம் எக் காலத்துக்கும் எல்லா மனிதருக்கும் மீட்பு சமைக்கப்பட்ட உணவுபோன்று ஆயத்தமாக வைக்கப்பட்டுள்ளது. 'ஆண்டவரே, என்னை மீட்டுக்கொள்ளும்' என்றுகூட கூறத் தேவையில்லை. ஏனென்றால் அவர் ஏற்கெனவே நம்மை மீட்டுக்கொண்டார். பதிலாக 'ஆண்டவரே, உமது மீட்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்' என்று சொல்வதே மனிதனின் கடமை. அம்மா சோறைப் பக்கத்தில் வைத்த பின்பும் 'சோறு சோறு' என்று அழுகுரல் எழுப்பும் சில குழந்தைகளைப்போல இன்று பலர் மீட்படைவதற்காக அங்குமிங்கும் ஓடுகிறார்கள். இப்படிச் செய்வது ஆண்டவரை இன்னும் ஒரு முறை சிலுவைக்கு விரட்டும் கோரச் செயலாகும். ஆண்டவர் நம்மை ஏற்றுக்கொண்டுவிட்டார்; நம்மை மீட்டுவிட்டார். இன்று இதனை உணர்ந்து அவரது மீட்பினை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்வோமானால் இந்த நாள் நமக்கு இரட்சண்ய நாள். நாம் உலகத்தில் பிறந்த நாளைவிட, கிறிஸ்துவின் மீட்பை ஏற்றுப் புது கிருஷ்டிகளாய் மாறும் நாள் அதிக முக்கியமானதல்லவா?

இந்த நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள் (2 இரா. 7:9): இதற்கு இணையாக ஒரு கிறிஸ்தவன் வேறு எதையும் செய்ய முடியாது. நற்செய்தியால் மாற்றப்படுகின்றவர்கள் இந்த நற்செய்தியைப் பிறருக்கும் எடுத்துரைக்கத் தீவிரப்படுவார்கள். எல்லா ஜனத்துக்கும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கும் நற்செய்தியைக் கேட்ட மேய்ப்பர்கள் பெத்தலைப் பாலனைக் கண்டபின் தீவிரமாக அதைப்பற்றி பிறருக்குக் கூறினதில் ஆச்சரியமொன்றுமில்லை (லூ. 2:16,17). பவுல் திருமுழுக்குப்பெற்றபின் தாமதமின்றி கிறிஸ்துவே கடவுளின் திருமைந்தன் என்று பிரசங்கித்தான் என்று படிக்கிறோம் (அப். 9:20). நாம் நற்செய்தியினை அறிவித்துக்கொண்டிருக்கும்போதுதான், நாம் அதன் ஆழத்தையும், இனிமையையும் அதிகமதிகமாய்க் கண்டுகொள்ளுகிறோம். நற்செய்தியை அடக்கிவைப்பவன் பெரிய சுயநலவாதி. கூறி அறிவிக்கப்படும்போதுதான் நற்செய்தியின் ஆற்றல் வெளிப்படுகின்றது. என்றோ ஒரு நாள் அல்ல, இந்த நாள், இன்றைய தினம் நற்செய்தி அறிவிக்கும் நாள்.

இந்த நாள் இனி நமது வாழ்க்கையில் வருவதேயில்லை. திரும்பக் கிடைக்காத இந்த விலையேறப்பெற்ற நாளை நாம் கடவுளுக்கென்று அவரோடு செலவிடுவோமா? தூக்குத் தண்டனை பெற்ற ஒரு கொலைக்காரன் தான் சாகும்போது இவ்வாறு கூறினானாம்: 'நான் மரிப்பது குறித்து எனக்குக் கவலையில்லை. ஆனால் எனக்கென்று தரப்பட்ட ஒரே ஒரு வாழ்க்கையை நான் நஷ்டமாக்கிவிட்டேன் என்று எண்ணும்போது என் உள்ளம் எனக்குள்ளே சித்திரவதையடைகிறது. ஒரே நாளில் இரண்டு நிமிடங்களுக்குள் நான் செய்த பாவம் என் வாழ்க்கை முழுவதையும் கறுப்பாக்கிவிட்டு இன்று என் உயிரையே குடிக்கிறது. இனி எனக்கு ஒருநாள் தரப்படுமானாலும் அதில் ஒரு சிறு இலாபத்தையாவது ஏற்படுத்தலாம். ஆனால், ஐயோ—அந்த நாள் வராதே . . . நான் வாழ்க்கையை நஷ்டப்படுத்திவிட்ட நிர்ப்பந்தமான மனிதனாய் சாகிறேன்.' அருமையானவர்களே, இந்த நாளில் ஆண்டவரின் சத்தத்தைக் கேட்போமாகில் நம் இருதயத்தைக் கடினப்படுத்தாதிருப்போமாக (எபி. 3:7,8).

ஜெபம்:

பரம தந்தையே! என் வாழ்நாட்களை வீண் நாட்களாக்கிவிட்டேன். இன்று உம் அருட் குரலைக் கேட்டு உம்மண்டை வருகிறேன். இந்த நாள் என்னைப் புது சிருஷ்டியாகவும், நற்செய்தியாளனாகவும் மாற்றும் சிறந்த நாளாக அமைந்திட அருள்புரியும்—ஆமென்.

10

இல்லறப் பயணம்

'எனக்குப் பேருதவி வரும் மாமலைகளுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்
இறேன். வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தரிடத்திலிருந்து இப்பேருதவி
வரும். உன் காலைத் தளரவிடார்,உன்னைக் காக்கிறவர் உறங்கார்.' (சங்.121:1—2)

ஒருநாள் என் கனவில் ஒரு மனிதனைக் கண்டேன். அவன்
எங்கேயோ நெடும்பயணம் செய்யும் ஒருவனைப்போல் காணப்
பட்டான். அவனது தலையில் ஒரு சுமையும், அவனது தோள்
களில் சிறு பைகளும் இருந்தன. சிலவேளை அவன் மகிழ்ச்சி
யுள்ளவன்போன்று காட்சியளித்து, தனக்குள் தானே
சிரித்துக்கொண்டே நடந்தான். சிலவேளை சுமைகளின் பாரத்
தாலும் மனதின் துக்கத்தாலும் சோர்ந்துபோய் மரத்தடி
களில் உட்காருவான். எனினும், அவனுடைய பயணத்திற்கு
ஒரு திட்டவட்டமான நோக்கம் இருந்தது என்பது வெளிப்
படையாய்த் தெரிந்தது. பின்பு அவன் வழியருகே இருந்த
ஒரு சிறு குடிலினுள் படுத்துத் தூங்கினான். சற்று நேரம் நான்
என் கனவில் அவனைக் காணவில்லை. மறுபடியும் கனவு
தொடர்ந்தது. அவனை அதிக உன்னிப்போடு பார்த்தேன்.
என்ன ஆச்சரியம்? இப்போது அவனோடு இன்னொரு பெண்மணி
யும் சேர்ந்து நடக்கிறாள். மகிழ்ச்சி வந்தபோது இருவரும்
ஏதோ உரையாடிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் சென்
றார்கள். அவன்மேலிருந்த சுமைகளில் ஒரு பகுதியை அவள்
வைத்திருந்தபடியால் அவன் அவ்வளவு துக்க முகமாகக்
காணப்படவில்லை. அவன் ஏதோ ஒரு புத்தகத்தைத் தன்
பையிலிருந்து எடுத்தான். ஆம், அது திருமறைதான். 121ம்
சங்கீதத்தை அவர்கள் பாடிக்கொண்டே துரிதமாக நடந்து

போனார்கள். தங்கள் இல்லறப் பயணத்தில் மிகவும் பொருத்தமாகப்பட்ட சில தொடர்களைத் திரும்பத் திரும்பப் பாடினார்கள்.

முதலாவதாக, இல்லறப் பயணத்தில் நமது பார்வை அனைத்தும் பேருதவி இறங்கிவரும் மாமலையை நோக்கி இருக்கின்றது எனப் பாடினார்கள். இறையுறவுதான் மகிழ்ச்சியின் ஊற்று. ஆண், பெண் அன்புறவில் மகிழ்ச்சி பன்மடங்காய் பெருகுகின்றது. அதோடு இறையுறவுகொள்ளும்போது மகிழ்ச்சி நிறைவுடையதாய் மாறுகின்றது. இதுபோன்றே ஒருவரையொருவர் சார்ந்து வாழும்போது வாழ்க்கை இனிக்கின்றது. இல்லறம் அனைத்தும் இறைவனைச் சார்ந்து வாழும்போது வாழ்க்கை அதிகப் பொருளுள்ளதாக அமைகின்றது. ஆழத்தில் வாழும் மீன்களும் அவ்வப்போது தண்ணீரின் மேல் மட்டத்தில் வந்து தங்கள் வாய்களைப் பிளந்து காற்றை சுவாசித்துப் புது ஆற்றல் பெருகின்றன. இவ்வாறு நாமும் அடிக்கடிப் பரத்துக்கு நேராக நமது கண்களை ஏறெடுப்பதும் ஆண்டவரிடமிருந்து வரும் பேருதவியைப் பெற்றுக்கொள்வதும் நமது இல்வாழ்க்கையை ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக மாற்றுகின்றது. பிரசித்திபெற்ற அருளுரையாளர் ஒருவர் தனது இல்லற வாழ்வு குறித்து இவ்வாறு கூறுகின்றார்: 'சில காரியங்களில் எனக்கும் என் துணைவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்படும்போது, "நாம் இதுபற்றித் தர்க்கித்தது போதும், ஆண்டவரிடம் காரியத்தை வைத்து அவர் தரும் ஆலோசனையைக் கேட்போம்" என்று கூறி முழங்கால்படியிட்டுவிடுவோம்.' எத்தனையோ குடும்பங்களில் ஆண்டாண்டுகளாகியும் தீராத பிரச்சினைகள், மனக்கசப்புக்கள், தவறான புரிந்துகொள்ளல்கள் உள்ளன. காரணம் என்ன? உதவி வரும் உன்னதங்களைப் பார்க்காதிருப்பதுதானே! நாம் தொடங்கியிருக்கும் இப்பயணம் வெற்றிபெற ஆண்டவரைச் சார்ந்திருப்பதும், அவருடைய உதவியை நாடுவதும் இன்றியமையாத இலட்சணங்களாம்.

இரண்டாவதாக, இல்லறப் பயணத்தில் கர்த்தர்தான் நமது வழிகாட்டி எனப் பாடினார்கள். இது காலமும் தூரமும் தெரியாத பயணம். அறியக்கூடாத எதிர்காலத்தை நோக்கி நடை

போடுகிறோம். ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்து
கொண்டு போவதுபோல, இஸ்ரவேல் மக்கள் கானான் வரும்
வரைக்கும், நடந்துவந்த வழிகளிலெல்லாம் கடவுளாகிய
கர்த்தர் அவர்களைச் சுமந்துகொண்டு வந்தது எவ்வளவு
பெரிய அனுபவம் (உபா. 1:31)! உலகப் பழக்கம் இல்லா
தவர் நமக்கு வழிகாட்டவில்லை. இந்த உலகில் மனிதனாகி
வாழ்ந்து எல்லாவற்றிலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்,
உலகத்தில் வெற்றியடைந்தவருமான ஆண்டவர் இயேசு
கிறிஸ்துவே நமக்கு வழிகாட்டியாக இருக்கிறார். சில நேரங்
களில் நாம் விரும்பாத இடங்களுக்கு நேராக நம்மை அவர்
வழிநடத்தலாம். கரடுமுரடான பாதைகளில் நம்மை நடக்க
வைக்கும்போது கெட்டியான காலணிகளை நமக்குத் தரு
கின்றார். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பி அலைந்து
அவனவன் தன் தன் வழியில் போனோம் (ஏசா. 53:6).
இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்மை மறுபடியும் பிறப்பித்து
செம்மையான பாதைகளில் அவர் நடத்துகிறார். இரு
பயணிகள் ஒரு பனிக்கட்டி மலையில் ஏறினார்கள். அது
கடினமான பாதை. முன்னே சென்றவனுக்குப் பனிக்கட்டி
ஏறிப் பழக்கம் உண்டு. எனவே, முன்னே சென்று, தான்
கால் வைக்கும் அதே இடத்தில் கால் வைக்கும்படி தன் நண்ப
னிடம் கூறினான். இதனால் முன்சென்றவன் கால் வைத்த
இடத்தில் ஏற்பட்ட சூடு, பின்னால் சென்றவன் ஏற பய
னுள்ளதாயிருந்தது. இதுபோன்று நமக்கு முன்னே இந்த
உலகில் பயணம் செய்துள்ள இயேசு அதிகப் பழக்கமுள்ளவர்.
எனவே அவருடைய காலடிகளையே பின்பற்றுவோம்.
சிலவேளை வழி நெருக்கமாக இருக்கிறது என்று அஞ்சவேண்
டாம். அதுதான் நித்திய ஜீவனுக்குச் செல்லும் வாசல் (மத்.
7:14). தூரத்தில் எங்கும் இருளாகத் தோன்றினும்,
காரிருளில் நம் நேச தீபமாகிய கர்த்தர் ஓர் அடி மட்டும்
நம்முன் காட்டினால் அது போதுமே.

மூன்றாவதாக, இல்லறப் பயணத்தில் கர்த்தர் பக்கத் துணையும்
பாதுகாவலருமாயிருக்கிறார் எனப் பாடினார்கள். அவர் நம்மை
எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் நம் போக்கை
யும் நம் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும்

காப்பார் (சங். 121:7,8). இல்வாழ்க்கையில் துன்பங்கள்,
நோய்கள், பண நெருக்கடிகள் ஆகியவை ஏற்படும். உலகத்
தாரின் பாதுகாப்பே இல்லாத சூழ்நிலைகளும் நேரும். அப்
போதும் நமது பயணத்தில் நமக்குத் துணைநின்று நம்மைப்
பாதுகாக்கின்ற ஆண்டவரின் பிரசன்னத்தை உணருவது அள
வில்லாத ஆறுதலைக் கொண்டுவரும். வீட்டுப் பாதுகாப்பிற்
காக வெளியில் கட்டிப்போட்டிருக்கும் ஒரு நாயின்மேல்
வைக்கும் நம்பிக்கையைக்கூட சிலர் கடவுளின்மேல் வைப்ப
தில்லை. விசுவாசம் என்பது நமது சிந்தனையில் எழும் யூகம்
அல்ல; அது வாழ்க்கை அனுபவம். சில பிள்ளைகள் அப்பாவின்
தோளில் இருந்துகொண்டும், அவரது கைகளைப் பிடித்து
நடந்துகொண்டும்கூட நாய், பூனை, பாம்பு இவற்றைக் கண்டு
அலறுவதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம், குழந்தை
தான் காண்பதில்தான் கவனத்தைச் செலுத்துகின்றதே
தவிர, தான் யாருடைய கையில் இருக்கிறது என்பதை
மறந்துவிடுகிறது. அப்போது அப்பா அசட்டுச் சிரிப்
புடன் 'நீ என் பிள்ளை அல்லவா? நீ என் கையில்தானே
இருக்கிறாய்' என்று குழந்தையைத் தேற்றுகிறார். ஆண்டவரின்
பாதுகாப்பு பயணம் முழுவதிலும் இருக்கிறபடியால் ஈசலிடும்
பூச்சிகளைக் கண்டோ, குரலெழுப்பும் விலங்குகளைக் கண்டோ
அஞ்சவேண்டாம். இல்லறப் பயணத்தில் நீங்காத் துணைவரா
யிருக்கும் நம் ஆண்டவரைக் காண நம் அகக்கண்கள் திறந்தே
யிருக்கட்டும்.

இதைக் கேட்கும் அருமையான கர்த்தரின் பிள்ளையே!
இல்லறப் பயணத்தை நீ அற்பமாய் எண்ணிக்கொண்டிருக்
கிறாயா? துன்பங்கள் கண்டு அஞ்சுகிறாயா? எதிர்காலத்தைப்
பற்றிய பயம் உன்னை உறுத்துகின்றதா? அஞ்சாதே. பேருதவி
வரும் மாமலையான ஆண்டவருக்கு நேராக உன் கண்களை
ஏறெடு. உன் பாதையைத் தெளிவாக்கும்படி வேண்டிக்
கொள். உன்னைப் பாதுகாக்கும்படி உன்னை அரவணைத்துக்
கொண்டிருக்கும் ஆண்டவரின் கரங்களை உணர்ந்துகொள்.
உன் இல்லறப் பயணத்திற்கு ஒரு குறிப்பிட்ட திட்டமுண்டு.
'அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலை
களையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்' (1 பே. 5:7).

பயப்படாதே, பயணப் பாடலை உன் உதடுகளில் பாடிக் கொண்டே முன்னேறிச் செல்.

ஜெபம்:

அருள் மிகுந்த தந்தையே! எங்கள் இல்லறத்தில் உமது திட்டத்தையும், பாதுகாப்பையும் உணர்ந்திட அருள்புரியும். எங்கள் பாதைகளிலெல்லாம் உயிர்த்தெழுந்த வழிப்போக்கராக உம்மை நாங்கள் சந்திக்கட்டும்—ஆமென்.

11

கேளுங்கள்—தேடுங்கள்—தட்டுங்கள்

'கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.'
(லூ. 11:9)

இறைவன் மனிதனை ஒரு பொம்மையைப்போன்று படைக்கவில்லை. அவனை சுதந்திர மனிதனாகப் படைத்தார். மனிதனுக்குக் கடவுள் கொடுத்த உரிமைகளை எந்த நெருக்கடி நிலையிலும் அவர் பறித்துவிடுவதில்லை. எனவே, தம்மை நோக்கிக் கூப்பிடவும், தம்மைத் தேடவும் அவர் ஏவுகிறார். கடவுளின் கடின கரங்களை அசைக்கும்படி நாம் வேண்டிக் கொள்ளவில்லை. ஏற்கெனவே அவர் கருணையுள்ளவராக இருக்கிறபடியால் நாம் வேண்டிக்கொள்ளுகிறோம்.

கடவுள் நம்பிக்கை என்பது ஒரு குழந்தைப் பற்று ஆகும். கேட்பதும், தேடுவதும், தட்டுவதும் நாம் கடவுளுடன் கொள்ளும் ஈடுபாட்டைக் குறிக்கின்றன. இந்த ஈடுபாட்டினால் நமது வாழ்க்கை மாற்றமடைகிறது. ஜெபம் கடவுளின் சித்தத்தை மாற்றுவதில்லை, கடவுளின் சித்தத்துக்கு ஏற்ப மனிதனை மாற்றுகிறது என்று சாது சுந்தர்சிங் கூறுகிறார். யாப்போக்கு ஆற்றங்கரையில் கடவுளுக்கும் யாக்கோபுக்கும் நடந்த போராட்டத்தின் பெரிய விளைவு, யாக்கோபின் வாழ்க்கை மாற்றப்பட்டதாகும். ஆம், இதுதான் வெற்றி. இவ்வித குழந்தைப் போராட்டம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தேவை. அப்போதுதான் கடவுளை மகிழ்ச்சி நிறைந்தவராகவும், நீதியின் சூரியனாகவும் காணமுடியும்.

கேளுங்கள்: விருப்பத்தோடு கேளுங்கள். ஆண்டவரின்
சித்தம் எது என்று கேளுங்கள். நாம் எதையாகிலும் அவ
ருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி
கொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்
டிருக்கிற தைரியம் (1 யோ. 5:14). ஜெபத்தில் நமது
வார்த்தைகளல்ல, வாஞ்சைதான் முக்கியம். மானானது
நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல நமது உள்ளம்
ஆண்டவரை வாஞ்சித்துக் கதறவேண்டும் (சங். 42:1).
கடமைக்காக ஜெபிக்கிறவர்கள் குறிப்பிட்ட நேரத்தில்
பழக்கப்பட்டுப்போன சில வார்த்தைகளை அலப்புவது ஆகா
யத்தில் சிலம்பம் அடிப்பதாகும். நமது மனம் ஒன்றுபட
வில்லையென்றால், புத்தகங்களிலிருந்து ஜெபங்களை வாசிப்பது
பொருளற்ற செயலாகும். நமது வாஞ்சையைப் பொறுத்தும்
விருப்பத்தைப் பொறுத்தும் அவர் நமக்கு அருளுகிறார்.
மேலும், நாம் பெற்றுக்கொள்ளும்வரை கேட்டுக்கொண்டே
யிருக்கவேண்டும். ஒரு சிறு பெண் தனது வீட்டருகே கடும்
வெயில் நேரத்தில் விளையாடிக்கொண்டிருந்தாள். அப்போது
அவளுக்குத் தாகம் வந்தது. வீட்டு வாசலில் ஓடோடி வந்து
'அம்மா தண்ணீர்' என்று கேட்டாள். அம்மா தண்ணீர்
கொண்டுவந்தார்கள். ஆனால், அந்தச் சிறு பெண்ணைக் காண
வில்லை. அவள் மறுபடியும் விளையாடப் போய்விட்டாள்.
உடனே, அந்த அம்மா தண்ணீரை எடுத்துக்கொண்டு வீட்டிற்
குள் போய்விட்டார்கள். இப்படியே மூன்று தடவை நடந்தது.
கடைசியில் அந்தச் சிறு பெண் தாகத்தைப் பொறுக்க
முடியாதவளாக 'அம்மா தண்ணீர்' என்று சோர்ந்த குரலில்
கேட்டுவிட்டு வாசல்படியில் விழுந்து கிடந்தாள். அம்மா
ஓடோடிவந்து அவளைத் தூக்கி மடியிலே போட்டு அவளுக்குத்
தண்ணீர் கொடுத்து அவளைத் தேற்றினார்கள். சிலருடைய
ஜெபங்களும் இப்படித்தான் இருக்கின்றன. ஏதோ ஒரு
கட்டத்தில் கடவுளிடம் எதையோ கேட்கிறார்கள். ஆனால்,
அவரிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெறுமுன் மறுபடியும்
பழைய வாழ்க்கைக்கு ஓடிவிடுகிறார்கள். இறுதியில் இறை
வனின் பாதத்தில் முழு மனதோடு சரணாகதி அடைகிற
வர்கள், அவரிடமிருந்து மேலான நன்மைகளையும் அழிவில்
லாத நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

தேடுங்கள்: நிச்சயத்தோடு தேடுங்கள். விடாமுயற்சியோடு தேடுங்கள். 'பெத்தேலைத் தேடாதேயுங்கள், கில்காலைச் சேராதேயுங்கள் . . . கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்' (ஆமோஸ் 5:5,6). ஆண்டவரைத் தேடுதல் என்பது ஆண்டவரைச் சேருதல் என்று பொருள்படும். காணாமல் போன வெள்ளிக்காசைத் தேடுவதற்காக விளக்கைக் கொளுத்தி வீட்டைப் பெருக்கின பெண்ணின் முயற்சி நமக்கும் வேண்டும். இயேசுவைப் பார்க்க வகை தேடிக்கொண்டிருந்த சகேயு அவரைக் காணுமுன் அவர் அவனைக் கண்டுவிட்டார். இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுமைந்தன் வந்திருக்கிறார் (லூ. 19:10). அவர் நம்மைத் தேடி வருகிறார் என்பதை உணராமல் வேறு எங்கேயோ ஓடுகிறவர்கள் அவரைக் கண்டுபிடிக்க முடியாது. மனிதனைத் தேடும் ஆண்டவரும், ஆண்டவரைத் தேடும் மனிதனும் ஒருவரையொருவர் சந்திக்கும்போது எத்தனை மகிழ்ச்சி! ஆம், இந்த மகிழ்ச்சியின் அனுபவம் ஜெப நேரத்தில் நமக்கு ஏற்படுகிறது; கலிலேயாவில் நமக்குமுன் நடந்துகொண்டிருக்கும் இயேசுவைக் கல்லறையண்டையில் தேடுவதில் பயனில்லை. அலங்காரம் நிறைந்த ஆலயத்தில் கடவுளைத் தேடி நின்ற யூதர்கள் அங்கு அவரைக் காணவில்லை. மாறாக பாவிகளின் நடுவில் கடவுளின் செயலை உணர்ந்த இயேசு கிறிஸ்து—அங்கே அவரை முழுமையாய்க் கண்டுகொண்டார்கள். தேவ வசனப் பாலின்மீது ஒரு தேட்டம் வேண்டும். வேத வசனங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்போது நமது அந்தரங்கத்தைக் காணும் தேவன் வெளியரங்கமாய்ப் பலனளிப்பதைக் காண்போம்.

தட்டுங்கள்: நம்பிக்கையோடு தட்டுங்கள். தட்டிக்கொண்டேயிருங்கள். நீடியபொறுமையுடன் தட்டுங்கள். ஆண்டவருடைய தட்டுதலுக்குத் தங்கள் உள்ளங்களைத் திறந்து பழக்கமுள்ளவர்கள்தான் இடைவிடாது தாங்களும் தட்டிக்கொண்டிருக்க முடியும். எவருடைய வீட்டையும் எவரும் எளிதாகச் சென்று தட்டிவிடமுடியாது. தட்டுதலில் உரிமை உண்டு. நாம் ஜெபத்தில் ஆண்டவரின் கதவைத் தட்டும்போது அவர் தமது உள்ளத்தை நமக்குத் திறந்து காட்டுகிறார். அவரிலிருக்கும்

சிந்தை நம்மில் பாய்ந்து வரும், அவருடைய பார்வை நமக்கு ஏற்படும். பலமுறை தட்டியும் சிலவேளை திறக்கப் படுவதில்லை. இதில் குற்றவாளி அவர் அல்ல, நாம்தான். இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. நம்முடைய அக்கிரமங்களே அவருக்கும் நமக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகின்றன (ஏசா. 59:1,2). வானத்திலிருந்து தேவ ஆசீர்வாதத்தை வர வழைப்பது மக்களின் தாழ்மையும் தூய்மையான வாழ்வு மாகும். ஆண்டவர் கதவைச் சீக்கிரம் திறப்பதற்கு ஒரே வழி, உருகிய உள்ளங்களிலிருந்து எழும் பாவ அறிக்கை யாகும். பெருமை பாராட்டிய பரிசேயனுடைய விண்ணப்பம் நீதிபரரின் உள்ளத்தைத் தட்டவில்லை. ஏழை ஆயக்காரனின் 'தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்' என்னும் வார்த்தைகள் ஆண்டவரின் கரங்களை இயங்கவைத்தன. அவன் அந்நேரமே நீதிமானாக்கப்பட்டான். நாம் எந்த இடத்தில், எந்த வேலையிலிருந்தாலும் நமது சிந்தை விண்ணப்ப ஆவியால் ஆட்கொள்ளப்பட்டிருக்குமானால் பரலோகம் நமக்குத் திறக்கப்பட்ட பொக்கிஷமாகவே யிருக்குமாம்.

கேட்பதும் தேடுவதும் தட்டுவதும் ஒரே நேரத்தில் நடந்து கொண்டேயிருக்கவேண்டும். 'கர்த்தர் பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்க்குமட்டும், என் கண் இடைவிடாமல் ஓய் வின்றிச் சொரிகிறது' என்று பக்தன் பாடுகிறார் (புல. 3:49, 50). சில வேளைகளில் நமது பொறுமை சோதிக்கப்படலாம். நாம் நினைப்பதற்கு மேலான ஒன்றை நமக்குச் செய்யும்படி ஆண்டவர் சமயம்பார்த்துக்கொண்டிருக்கலாம். அப்போதும் நமது குரல்கள் ஓயவேண்டாம். நம் பெருமூச்சுக்கும் நம் கூப்பிடுதலுக்கும் தேவன் தமது செவியை அடைத்துக்கொள் ளாமல் நமக்கு உதவி செய்கிறார் (புல. 3:56,57). அன்னாளின் கண்ணீரும், ஆகாரின் அழுகையும், யோனாவின் வேண்டுத லும், எரேமியாவின் பெருமூச்சும் ஆண்டவர் சமுகத்தில் வல்லமை மிகுந்த கரங்களாக தட்டிக்கொண்டிருக்கின்றன. 'உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே' என்று

தாவீதோடு சேர்ந்து நமது இருதயமும் சொல்லட்டும் (சங். 27:9).

ஜெபம்:

ஆண்டவரே, உமது ஆசீர்வாதங்களையே கேட்டுவிட்டு உம்மைக் கேட்கா திருக்கும் மதிகேட்டிலிருந்து எங்களை விடுவியும். உமது திருமுகத்தின் பிரகாசத் தையும், திருவுள்ளத்தின் சித்தத்தையும் எங்கள் அகக் கண்கள் கண்டுகொண்டே யிருப்பதாக—ஆமென்.

12

நல்ல தலைவன்

'உங்களில் எவனாவது தலைவனாக இருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் (மா. 10:43)
பணியாளாக இருக்கட்டும்.'

'உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வசிக் (2 தீமோ. 1:14)
கின்ற தூய ஆவியானவரால் காத்துக்கொள்.'

மனித வாழ்க்கையில் மிகவும் விரும்பப்படுவது தலைமைப்
பதவி. இந்த விருப்பம் எல்லாத் துறையினருக்கும் பொதுவான
ஒன்றாகும். இந்த விருப்பத்தை நமது ஆண்டவர் முறியடிக்க
வில்லை. ஆனால் அதனைக் கடினமான ஒன்றாக மாற்றினார்.
தலைவர்களாக விரும்புகின்றவர்கள் தங்கள் ஆசனங்களின்
அழகையும், தங்கள் கையெழுத்துக்களின் பெருமையை
யும் கனவு காணாமல் பணிகளில் தாழ்விடத்தையும் பாடுகளில்
முதலிடத்தையும் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று போதித்
தார். தலைவன்பற்றிய அன்றைய அரசியல், சமய எண்ணங்
களுக்கு இயேசுவின் கருத்து புரட்சிகரமானதாகக் காணப்
பட்டது. அவர் சொல்லிமட்டுமா காட்டினார்? இல்லை.
அவரே பணிகொள்ளும்படி வராமல் பணி செய்யவும் பலருக்
காகத் தன் உயிரைக் கொடுக்கவும் வந்தார் (மா. 10:45).
காடு, பணிவிடை, தாழ்மை ஆகியவற்றில்தான் அவரில்
விளங்கின தெய்வீக ஆற்றலைக் காண முடிகின்றது. இயேசு
கிறிஸ்துவை இலட்சியத் தலைவராகக்கொள்ளும் நாம் ஏழு
பவளங்கள் உடைய ஒரு மாலையை அணியவேண்டுமென்று
திருமறை அறிவுறுத்துகின்றது. அந்த ஏழு பவளங்களும் ஏழு
பிரமாணங்களாம்.

நிதானப் புத்தியுள்ளவர்களாயிருங்கள்: கடவுள் நமக்குப் பல
மும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்
திருக்கிறார் (2 தீமோ. 1:7). பேதுருவைப்போன்று அவசரத்
தீர்ப்பு செய்கின்றவர்கள் தங்கள் பணிகளில் வெற்றியடைய
முடியாது. உணர்ச்சிவசம், பரவசம் ஆகியவைகளுக்கு ஒரு
நல்ல தலைவன் அடிமையாகமாட்டான். பிரச்சினைகள் வரும்
போது இரு பக்கத்தையும் தீர விசாரிக்குமுன் தீர்ப்புக் கூறக்
கூடாது. விபச்சாரக் குற்றத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணைக்
கல்லெறிய யூதர்கள் முயன்றபோது இயேசுவின் முடிவு
உடனடியாகக் கூறப்படவில்லை. அவர் தரையிலே குனிந்து
எழுதினார். அவரது அறிவுக் கூர்மை வேகமாகச் செயல்
பட்டது. நிதானமாகக் கொடுக்கப்பட்ட பதில் அந்தக்
குற்றஞ்சாட்டிகளுக்கு ஒரு சாட்டையடியாயிற்று. எனவே
நல்ல தலைவனுக்கு நிதானப் புத்தி மிகவும் முக்கியம்.

நியாயஞ்செய்யுங்கள்: 'பட்சபாதமுள்ளவர்கள் பாவஞ்செய்து
மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவார்
கள்' (யாக். 2:9). உடை, நகை, பெருமை இவைகளுக்குத்
தக்கபடி மனிதர்களை நடத்தக்கூடாது என்று அப்போஸ்தலன்
யாக்கோபு ஆலோசனை கூறுகிறார். வறுமையால் பாதிக்கப்
படும் குடியானவனும், செல்வாக்குடைய சபைக் குழு உறுப்
பினரும், ஒரு கிறிஸ்தவப் போதகரின் பார்வையில்
சமமாக எண்ணப்படுவார்களானால், இன்று திருச்சபையில்
எத்தனையோ பிரச்சினைகள் எழாதிருக்குமல்லவா? 'தோற்றத்
தின்படி தீர்ப்புச் செய்யாமல் நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்
கள்' என்கிறார் இயேசு (யோ. 7:24). நியாயத்திலே முகதாட்
சணியம் பாராமல் பெரியவனுக்குச் செவிகொடுப்பதுபோல
சிறியவனுக்கும் செவிகொடுங்கள். மனிதனின் முகத்திற்குப்
பயப்படவேண்டாம்; நியாயத்தீர்ப்பு கடவுளுடையது
(உபா. 1:17).

மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் (1 பே. 5:5):
'உங்களிடத்திலுள்ள கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்து,
கட்டாயமாயல்ல. மனப்பூர்வமாயும்; கேடான இலாபத்திற்
காக அல்ல, உற்சாக மனதோடும்: சுதந்திரத்தை இறுமாப்
பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும்

கண்காணிப்புச் செய்யுங்கள்' (1 பே. 5:2,3). தாழ்மை என்பது வாயினால் சொல்லிக் காட்டுவதல்ல. அது மாயமான தாழ்மையாகும். மனத்தாழ்மை என்பது தனக்கே தெரியாத வகையில் நமது சுபாவத்தோடு கலக்கக்கூடிய ஒன்று. கிறிஸ்தவத் தலைவர்கள் ஆளோட்டிகளல்ல. மந்தையோடு நடக்கவேண்டியவர்கள். பட்டங்கள், பதவிகள் இவைகளை வைத்துப் பெருமைகொள்ளும் கிறிஸ்தவத் தலைவன் திருச்சபையை நாற்றமெடுக்கச் செய்யும் செத்த ஈ ஆவான்.

பேச்சுக்கேற்ற செய்கையுடையவர்களாயிருங்கள்: வேதபாரகரும், பரிசேயரும் சொல்லியும் செய்யாதிருக்கிற மாய்மாலத்தை இயேசு வன்மையாகக் கண்டித்தார் (மத். 23:3). 'அவர் எதைப் பேசினாரோ அதைச் செய்தார்; அவர் எதைச் செய்தாரோ அதைப் பேசினார்' என்று மகாத்மா காந்தியைப் பற்றிக் கூறப்படுவதுண்டு. நடைமுறைக்கு ஒவ்வாத செயல்களைப் பெருமையாகச் சொல்லி பிரசங்க பீடத்தில் நின்றுகொண்டு நேரத்தை வீணாக்குகின்றவர்கள் ஆகாயத்தில் சிலம்பம் வீசுகிறார்கள். நமது பிரசங்க பீடம் நமது வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் நடமாடும் ஒன்றாக இருக்குமானால் நாமும் ஆற்றலுள்ள அருளுரைஞர்கள் ஆகக்கூடுமே!

கடின உழைப்பாளிகளாயிருங்கள்: சோம்பேறித் தலைவர்களும், கோழை பக்தர்களும் திருச்சபைக்குப் பெருத்த நஷ்டம் ஆவர். மூன்று வருட காலம், தான் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருக்கும்படி பவுல் எபேசு சபையின் மூப்பர்களை வேண்டுகிறார் (அப். 20:31). நல்ல தலைவனின் படுக்கைகூட திட்டமிடும் பணிக்களமாக அமையும். மக்களைப்பற்றிய இதய பாரத்தைத் தூக்கம்கூட அழிக்க முடியாது. இந்தக் கடின உழைப்பை முறுமுறுப்போடு அல்ல, அன்போடும், புன்முறுவலோடும் செய்ய அழைக்கப்படுகிறோம்.

தருணத்தைத் தப்பவிடாதிருங்கள்: 'நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்

(எபே. 5:16). நமது வாழ்வில் மிக நல்ல சமயம் என ஒரு பருவம் இருக்கும். அந்த உயர்ந்த தாலந்தை நன்றாகப் பயன்படுத்த வேண்டும். நல்ல நல்ல காலங்களை விளையாடித் தொலைத்துவிட்டு சாகப்போகும் காலத்தில் 'இயேசுவை ஏற்றுக்கொண்டேன்' என்று கூறப்படும் சாட்சி நமக்கு ரொம்ப மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை. வாய்ப்புக்களை நழுவவிடாமல் அதிக விழிப்புள்ளவர்களாயிருப்போம்.

கண்ட, கேட்ட, உரையாடின எல்லாவற்றையும் விளம்பரம் செய்யாதிருங்கள்: அநீதி நிறைந்ததும், அக்கினியுமான நாவு நமது முழு உடலையும் கறைபடுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடாதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டுமாம் (யாக். 3:6). யார் என்ன சொன்னாலும் அதை இன்னொரு இடத்தில் அப்படியே கொட்டிவிடும் ஓட்டைவாயர்களான போதகர்கள் உருவாக்கும் பிரச்சினைகளுக்கு அளவே இல்லை. நமது ஒரு கண் குருடாகவும், ஒரு காது செவிடாகவுமிருந்தால், தேவையற்ற காரியங்களுக்கு நேராக அவைகளைத் திருப்பிக்கொள்ளலாம்.

இன்னும் எத்தனையோ பவளங்களை இந்த மாலையில் சேர்க்கலாம்! ஆனால் ஏழுக்கும் குறைவாக இருந்தால் அது குறைவுபட்ட ஒன்றாகும். அநேக தலைவர்கள் இன்று அணிந்திருக்கும் மாலைகளில் இந்த ஏழு பிரமாணப் பவளங்களும் இல்லை. இடையிடையே கோர்க்கப்பட்டிருக்கும் கரித் துண்டுகள், தலைவர்களின் அழகை உருக்குலைக்கின்றன அல்லவா? பிறருடைய கழுத்துக்களைப் பார்த்துக் காலத்தைக் கழிக்கவேண்டாம். இன்று எனக்கும் உனக்கும் இந்த மாலை முழுமையுடன் காணப்படுகிறதா என்று சிந்திப்போம்.

ஜெபம்:

அன்புத் தலைவராம் ஆண்டவரே, தாழ்மையை உயர் படியாகக்கொண்ட உம் தலைமையை ஏற்கும் எங்களுக்கு உம்மிலிருக்கும் சிந்தையைத் தாரும். இல்லாதவைகளுக்காகக் கவலைப்படாமலும். இருப்பவைகளுக்காகப் பெருமைப் படாமலுமிருந்து நீர் தரும் பொறுப்புக்களை உண்மையுடன் நிறைவேற்ற ஆற்றல் தாரும்—ஆமென்.

13

தகுதியும் தகுதியின்மையும்

'இவைகளை நடப்பிக்கிறதற்குத் தகுதியுள்ளவன் யார்?' (2 கொ. 2:16)

'நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி கடவுளால் உண்டாயிருக்கிறது. புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினர்.' (2 கொ. 3:5,6)

ஒரு பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர்கள் சுற்றுலா சென்றனர். இயற்கை வனப்புகளைக் கண்டு மகிழ காட்டுப் பகுதிகளுக்குச் சென்றனர். அப்போது ஒரு மூங்கில் காடு அவர்களது கண்களுக்குப் பட்டது. அதிலிருந்து பெரிய மூங்கில்களையெல்லாம் முறித்துத் தனியே எடுத்துவிட்டு சிறு சிறு குச்சிகளையெல்லாம் அங்குள்ள மக்கள் குப்பை மேடாகக் கூட்டியிருந்தார்கள். அந்த மாணவர்களில் ஒருவன் சில குச்சிகளை எடுத்துக்கொண்டான். அவன் அவற்றைக் கட்டித் தோளின்மேல் வைத்து, சுமந்துகொண்டு வந்தான். கூட வந்த இதர மாணவர்களுக்கு இந்தச் செயலுக்கான காரணம் புரியவில்லை. சிலர் பரிகாசம் பண்ணினர்கள். சுற்றுலா முடிந்தது. எல்லோரும் வீடுகளுக்குச் சென்றனர். சிறிய மூங்கில்களைச் சுமந்துவந்த அம்மாணவன், நிதானமாய் உட்கார்ந்து, அவைகளைக் குறிப்பிட்ட அளவில் துண்டுகளாக்கி, துவாரங்களும் போட்டான். இப்போது அவைகள் புல்லாங்குழல்களாக மாறிவிட்டன. என்ன இசை? அவற்றின் இனிய நாதங்களைக் கேட்ட இதர மாணவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். பலரும் பணம் கொடுத்து புல்லாங்குழல்களை வாங்கினர்கள். அவற்றின் இசை மணம் பெரும் மேடைகளையும், பெருங்கூட்டங்களையும் கவர்ந்துவிட்டன. இறை

வனின் அற்புதச் செயல்களில் ஒன்று, அவர் தகுதியற்றவர்களையும், பலவீனமானவர்களையும்கொண்டு பெரிய பணிகளை நடப்பிப்பதாகும். இதன் இரகசியம் என்ன தெரியுமா?

தகுதியின்மையில் தகுதியை வெளிக்காட்டுவது கடவுளின் சித்தத்தோடு இசைந்த ஒன்றாகும்: அவருடைய சித்தம் நமக்கு அடிக்கடி ஆச்சரியமாகத் தோன்றுகிறது. தான் கொலைகாரன் என்று கேள்விப்பட்டிருந்த சவுலை, ஆண்டவர் அவன் புறஜாதிகளுக்கும் இராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அவருடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக அவர் தெரிந்துகொண்ட பாத்திரம் என்று சொன்னபோது அனனியாவின் உள்ளம் எவ்வளவு விந்தைக்குள் மூழ்கியிருக்கும் (அப்:— 9.13:15)? ஆம், கடவுளின் சித்தம் மனிதர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள் இவைகளைத் தாண்டிச் செல்கின்றது. அவர் அழைத்து, தேர்ந்தெடுத்து, ஆயத்தப்படுத்தி, அனுப்பி, நம்மைப் பயன்படுத்துகிறார் என்பதில்தான் நமது நம்பிக்கை உறுதிப்படுகின்றது. அமத்சியா போன்ற பிரதான ஆசாரியர்களைவிடவும் அத்தித் தோப்பைக் காவல்செய்யும் ஆமோஸ் போன்ற குடியானவர்களே தீர்க்கதரிசன முழக்கம் செய்வது கடவுளுடைய சித்தமாயிருந்தது. உலகத்தைக் கலக்குகிறவர்கள் என்று பெயர் பெற்ற சீடர்கள், கடலோரவாசிகளான சாதாரண மனிதர்கள் என்பது நமக்கு அதிசயமாகத் தோன்றவில்லையா?

சில வேளைகளில் 'ஆண்டவர் என்னை இன்னவிதமாய் வைத்திருந்தால் நான் இப்படியெல்லாம் அவருக்குத் தொண்டு செய்திருப்பேன்' என்று சொல்லுகிறவர்களைப் பார்த்திருக்கிறேன். இதில் அறியாமைதான் விளங்குகிறது. நாம் எந்த நிலையிலிருந்தாலும், அவருடைய சித்தத்திற்குட்பட்டிருக்கும்போது நம்மை அபரிமிதமாய்ப் பயன்படுத்துவார் என்பதில் ஐயமில்லை.

கடவுள் நமக்கு அளிக்கும் தகுதி நமது திறமையிலும் பலத்திலும் அல்ல. நமது பலவீனங்களில் வெளிப்படுகிறது: 'இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், கடவுளால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப்

பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்'
என்ற அறிக்கை பக்தனின் வாழ்க்கை அனுபவத்திலிருந்து
எழுவதாகும் (2 கொ. 4:7). இந்த அடிப்படையில்தான்
நாம் சிலுவையையும் புரிந்துகொள்ள முடிகிறது. சாபத்தின்
அளவுகோலாகக் குறிக்கப்படும் நிந்தையும், இழப்பும்
நிறைந்த அந்தச் சிலுவை மரம் கடவுளின் மீட்பிற்கு ஒரு
கருவியாக மாறிவிட்ட மகிமை பெரும் புதிரல்லவா? 'என்
தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்ற
ஓலத்தில் விளங்கும் தெய்வீக அன்பின் ஆழத்தை அநேக
மனிதர்களின் உள்ளங்கள் உணர்ந்து கிறிஸ்துவுக்குச் சொந்த
மாகியுள்ளன. நமது பலம், அறிவு, செல்வாக்கு இவை
களில் நாம் சார்ந்து நிற்போமானால், ஆண்டவர் செய்யும்
மாபெரும் அற்புதங்களை நமது பணிகளில் காண முடியாது.
'பலவீனத்தில் என் பலம் முழுமையாய் விளங்கும்' என்று
ஆண்டவர் சொன்னதால் கிறிஸ்துவின் வல்லமை தன்மேல்
தங்கும்படி தனது பலவீனங்களைக் குறித்து மேன்மை
பாராட்டுகிறார் பவுல் (2 கொ. 12:9). சுற்றி நிற்கும் பெருந்
திரளைக் கண்டு அஞ்சாதே. உன் கையிலிருக்கும் அப்பத்தை
யும் மீனையும் அவர் கையில் முழுவதும் கொடுத்துவிடு.
அற்புதம் நிகழுவதைப் பொறுமையாக நின்று பார்.

பயத்தோடும் நடுக்கத்தோடும் பணிவிடை செய்யச் செல்வதில்
தான் நமது தகுதியின்மை விளங்குகிறது: தனது தகுதி
யின்மையைப் பகிரங்கமாக அறிக்கையிட்டுக் கடவுளோடு
போராடுவதில் மோசேயைப் போன்ற மனிதர்கள் இருப்பது
மிகவும் அரிது. தனது குறைந்த செல்வாக்கு, குறைந்த
அறிவு, குறைந்த திறமை இவை எல்லாவற்றையும் வைத்து
ஆண்டவரோடு வழக்காடும் மோசே, இஸ்ரவேல் வரலாற்றில்
தன்னிகரற்ற விடுதலை வீரனாகத் திகழ்ந்தான் (யாத். 3:11—
4:17). 'நான் எல்லாரிலும் சிறியவன்' என்கிற கிதியோனும்,
'ஐயோ, அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள
மனுஷன்' என்கிற ஏசாயாவும், 'நான் சிறுபிள்ளையாயிருக்
கிறேன், பேச அறியேன்' என்கிற எரேமியாவும், 'ஆண்டவரே,
நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போக
வேண்டும்' என்கிற பேதுருவும் இடும் தகுதியின்மையின்

குரல்கள்—நம்மிலிருந்தும் ஒலிக்குமா (நியா. 6:15; ஏசா.
6:5; எரே. 1:6; லூ. 5:8)? கோலியாத்தின் படைக்கலங்களை
விடவும் தாவீதின் கூழாங்கற்கள் அதிக ஆற்றல் நிறைந்தவை
என்பதை நாம் உணருகிறோமா?

நம்மிடம் ஒரே ஒரு தகுதியைத்தான் ஆண்டவர் எதிர்
பார்க்கிறார். அது நமது தகுதியின்மையை ஒத்துக்கொள்வ
தாகும். 'இந்தியாவின் பவுல் அப்போஸ்தலன்' என்று
அழைக்கப்படும் சாது சுந்தர்சிங்கின் சில குணங்களை இங்கு
அறிமுகம் செய்ய விரும்புகிறேன். அவர் முதலில் குண
மாக்கும் வரமுடையவர். தனது கையினால் திருமறையைக்
கிழித்தெறிந்தபடியால் அதே கைகளை யாருடைய தலையிலும்
வைத்து ஜெபிக்க விரும்பமாட்டார். அவர் இலங்கை
சென்றிருந்தபோது மரணப் படுக்கையிலிருந்த ஒரு சிறுவனுக்
காக ஜெபித்து அவன் பிழைத்துக்கொண்டானாம். உடனே
அவர் இருந்த அறையில் திரளான மக்கள் சூழ்ந்துகொள்ளத்
தொடங்கினார்களாம். அவருடைய பெயர் எங்கும் பரவியது.
அப்போது அவர் என்ன கூறினார் தெரியுமா? 'ஆண்டவரே,
எல்லாச் சிலுவைகளையும் சுமப்பேன். ஆனால் இந்தச்
சிலுவையைச் சுமக்க என்னால் முடியாது. எனவே, என்னை
மறைத்து உம்மைப் பெருமைப்படுத்தும்; இந்தக் குணமாக்கும்
வரத்தை இன்றுமுதல் விட்டுவிடுகிறேன்' என்று கூறினார்.
அன்பு நண்பரே! இந்த நூற்றாண்டில் நீர் கடவுளால் அதிகம்
பயன்படுத்தப்படவேண்டுமானால், முதலில் உமது தகுதி
யின்மையையும், ஒன்றுமில்லாமையையும் கண்டுபிடியும்.
அப்போதுதான் வானத்தின் அற்புத மழை உம்மை ஆச்சரியத்
தில் வீழ்த்தும்.

ஜெபம்:

பரம தந்தையே, என் கையில் நான் இருந்தால் நான் எண்ணெயற்ற தீபம்'
உம் கையில் என்னைத் தருகிறேன், ஐந்தப்பம்போலாக்கும். என் தகுதியின்மை
யில் விளங்கும் உமது ஆற்றலை நான் உணரட்டும்—ஆமென்.

14

சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்

'தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே உமது கிருபையைச் சிந்தித்துக்
கொண்டிருக்கிறோம்.' (சங். 48:9)

'. . . ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறு
மலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்.' (சங். 42:6)

நீரூற்றுகள் சில பிள்ளைகளுக்குச் சிறந்த விளையாட்டு
இடம். சுனைகளிலிருந்து வரும் தண்ணீரை ஒழுங்காகப்
பயன்படுத்தாவிட்டால் அந்த இடம் சீக்கிரத்தில் அசுத்த
மாகும். இதனால் சில பிள்ளைகள் தண்ணீரை நிறுத்துவதற்
காக ஊற்றின் கண்களைக் கை வைத்து அடைப்பார்கள். ஆனால்
தண்ணீர் நிற்காது. பதிலாக தண்ணீர் இன்னும் அசுத்தமாக
மாறும். ஆக, தண்ணீரை அடைத்து நிறுத்தி பயனை எதிர்
பார்ப்பதைவிட, அந்த இடத்தைச் சுத்தமாக்கி, சுத்தமான
தண்ணீராகப் பெற்று அதனைப் பயன்படுத்துவதே அறி
வுடைமை. மனிதனின் சிந்தனை நீரூற்றுப் போன்றது.
அவனது மனதில் எப்பொழுதும் சிந்தனை சுரந்துகொண்டே
யிருக்கும். சிலர் சிந்தனைகளைக் கட்டுப்படுத்தினால் வாழ்க்கை
சுத்தமாகும் எனக் கூறுவர். ஆனால் இது முழு உண்மையல்ல.
மனித சிந்தனை கட்டுக்கடங்காதது. ஒன்று செய்யலாம்.
இந்தச் சிந்தனையைப் பயனுள்ள, தூய சிந்தனையாக மாற்ற
லாம். கடவுளை எப்போதும் மனத்திரையில் நிறுத்திச்
சிந்திக்கும்போது, தெய்வீகக் குணங்கள் பெருகுவதோடு
தூய்மையான செயல்களுக்கு நேராகவும் உந்தப்படுவோம்.
சங்கீதக்காரர்களும், இதர பக்தர்களும் இந்தத் தெய்வீகச்
சிந்தனைக்கு அவர்களோடுகூட நம்மையும் அழைக்கிறார்கள்,

சிந்தனை செய்யும் இடத்தைப் பார்க்கவேண்டும்: நாம்
சிந்தனைக்காகத் தெரிந்துகொண்ட வசனங்களில் முதல்
வசனத்தில் 'ஆலயத்தில் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்'
என்றும், இரண்டாம் வசனத்தில் 'மலையிலிருந்து உம்மை
நினைக்கிறேன்' என்றும் கூறப்பட்டுள்ளன. முந்தியது பன்மை
யிலும், பிந்தியது ஒருமையிலும் காணப்படுகின்றன. முதல்
வசனம் கூட்டுச் சிந்தனையையும், இரண்டாம் வசனம் தனிச்
சிந்தனையையும் குறிப்பிடுகின்றன. ஆலயத்தில் நாம் கூடி
தொழுகை செய்வதினால் ஓர் ஐக்கியத்திற்குள் இருந்து
கொண்டு ஒருமனதுடன் கடவுளை நினைக்கிறோம். கடவுள்
பக்தியில் மனித ஒருமைப்பாட்டின் உயரிய நிலை இங்கு வெளிப்
படுகிறது. பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது
அவர்களெல்லாம் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்த
படியால் தூய ஆவியானவரின் ஆற்றலைப் பெற்றார்கள்
(அப். 2:1). இப்படிப்பட்ட 'ஒருமனம்' ஏற்படுவதற்கு
ஆலயத்திலோ வேறொரு குறிப்பிட்ட இடத்திலோ ஒன்று
கூடுவது பயனுடையதாயிருக்கலாம். ஆனால் இறைச்
சிந்தனை ஆலயத்தோடு முடிந்துபோவதல்ல. கிறிஸ்தவர்
களில் சிலர் இப்படியே செய்துவிடுகிறார்கள். தொடர்ந்து
பக்தன், தான் மலையிலிருந்துகொண்டு நினைப்பதாகக் கூறு
கிறார். படிப்பறை முதல் குளியலறை வரையும், பஸ்ஸ்டாண்டு
முதல் ஆபீஸ் வரையும் எல்லா இடங்களும் இறைச் சிந்தனை
யின் இடங்களாக மாறுமானால் என்ன ஆனந்தம்? நமது
வாழ்க்கையில் இந்த அனுபவம் செயல்படுகிறதா என்பதை
இன்று சிந்திப்போம்.

சிந்தனையின் பொருளைப் பார்க்கவேண்டும்: 'உமது கிருபை
யைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்.' இந்தக் கிருபையின்
விளக்கம் 136ம் சங்கீதத்தில் தரப்பட்டுள்ளது. அங்கு இஸ்ர
வேலரின் வரலாற்றில் கடவுள் நிறைவேற்றிய விடுதலைப்
பணி நினைவுகூரப்படுகிறது. இந்த விடுதலையை எந்த ஒரு
இஸ்ரவேலனும் மறக்கவேமாட்டான். தனது சந்ததிக்கும்
இதனை அறிவிக்கும்படி அவன் கட்டளை பெற்றுள்ளான்.
எனவே நமது சிந்தனையின் முக்கிய பொருள் மீட்பு ஆகும்.
இயேசுகிறிஸ்து நமக்கு வழங்கின மீட்பை நாம்

சிந்திக்கும்போதெல்லாம் அது நமக்குப் புத்துயிரூட்டுகிறது. சிந்திக்குந்தோறும் அதன் ஆழத்தைப் புரிந்துகொள்ளுகிறோம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார் என்று நினைக்கும்போது நமக்கு அதிக மகிழ்ச்சி ஏற்படுகிறது (சங். 126:3). அவர் செய்த சகல உபகாரங்களையும் நாம் மறக்கக்கூடாது (சங். 103:2). உடல் அளவிலும், ஆன்மீக அளவிலும் அவர் நமக்குத் தமது ஆசீர்வாதங்களை ஏராளமாகப் பொழிந்திருக்கிறார். இவைகளையெல்லாம் நினைந்து நினைந்து அவரை தோத்திரிக்கவேண்டும். தூய்மையான சிந்தனையில் நாம் பழகவில்லையானால் தீய சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும். 'துன்மார்க்கன் தன் கர்வத்தினால் கடவுளைத் தேடான்; அவன் நினைவுகளெல்லாம் கடவுள் இல்லை என்பதே' (சங். 10:4). 'அவன் தன் படுக்கையின்மேல் அக்கிரமத்தை யோசித்து, நல்லதல்லாத வழியில் நிலைத்து பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான்' (சங். 36:4). படுக்கையில் ஆண்டவரை நினைத்து நள்ளிரவிலும் அவரைத் தியானிக்கும் தாவீதின் சிந்தனை நமக்கிருந்தால் எத்தனை நலமாயிருக்கும் (சங். 63:6)? ஒரு கிறிஸ்தவனுடைய சிந்தனைப் பொருளுக்கான அளவுகோலை பவுல் பிலிப்பியர் 4:8ல் தருகிறார். 'கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகள், ஒழுக்கமுள்ளவைகள், நீதியுள்ளவைகள், கற்புள்ளவைகள், அன்புள்ளவைகள், நற்கீர்த்தியுள்ளவைகள், புண்ணியம், புகழ் ஆகியவை எவைகளோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.'

சிந்தனையின் பலனைப் பார்க்கவேண்டும்: ஆண்டவரின் கிருபைகளையும் அவரது மீட்பையும் சிந்திக்கும்போது நம்மை அறியாமலே அவரை எக்காலத்திலும் தோத்திரிப்போம்; அவர் துதி எப்போதும் நம் வாயிலிருக்கும் (சங். 34:1). அவருக்கு நாம் நன்றியுடையவர்களாய் வாழ முற்படுவோம். கடவுள் விரும்பாததை என் வாழ்வில் செய்யக்கூடாது என்று நான் பண்ணும் தீர்மானம்தான் நான் அவருக்குக் காட்டும் நன்றியுணர்வு. அதோடு அவரைப்பற்றிய சிந்தனையின் பயனாக நாம் மகிழ்ச்சியோடே அவருக்குச் சேவைசெய்வோம். 'கர்த்தர் செய்த உபகாரங்களுக்காக நான் என்னத்தைச் செலுத்துவேன்? இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு அவரது நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்' (சங். 116:13). இந்தச் சிந்தனையோடு அவரைப் பின்சென்றால் இன்றைய உலகுக்கு நாம் செய்யவேண்டிய பல பணிகளை அவர் காட்டுவார். மேலும் சிந்தனையின் பலனாக நம்பிக்கை பெருகுகிறது. 'இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நமது தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்' (சங். 48:14).

இன்று என்னோடு சேர்ந்து, கடவுளின் அருட் செயல்களைச் சிந்திக்கும் நண்பரே! உம் சிந்தனையைக் கட்டுப்படுத்தவேண்டாம். அதனைத் தூய்மைக்கு நேராகத் திருப்பவும். உம் சிந்தனைதான் உம் செய்கையைத் தீர்மானிக்கவேண்டும். தெய்வீகச் சிந்தனைக்குக் குறிப்பிட்ட காலம், இடம் குறிக்க வேண்டாம். எப்போது, எங்கு இருந்தாலும் உம் அருகில் இருப்பவராக அவரை நினைத்துக்கொள்ளும்.

ஜெபம்:

கடவுளே! எங்களைச் சிந்தனையாளர்களாகப் படைத்ததற்காக நன்றி. எங்களையும் உலகத்தையும் மையமாக வைத்துச் சிந்திக்கும் சோதனையில் நாங்கள் விழாதபடி காத்துக்கொள்ளும். நீரும உமது அருட் செயல்களும் எங்கள் சிந்தனை முழுவதிலும் குடிகொள்ளும்படி அருள்புரியும்—ஆமென்.

15

மேலும் மேலும்

'மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும் பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று.' *(ரோ. 5:20)*

சுய சரிதை எழுதுகின்றவர்கள் முதலாவதாகத் தங்கள் வாழ்க்கையைச் சில முக்கியப் பகுதிகளாகப் பிரிப்பார்கள். வேகமான வளர்ச்சி நிறைந்த பருவங்கள் தங்கள் எழுத்துக்கு அதிக உற்சாகத்தைக் கொடுக்கும். புனித பவுல் அடிகளார் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து தமது சுய சரிதையை எழுதுவதாக இன்று நாம் கற்பனை செய்து கொள்வோம். அவர் தமது வாழ்க்கையை நான்கு பருவ காலங்களாகப் பிரிப்பார். அவை பாவத்தில் வாழ்ந்த ஒரு காலம், இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்ட அபரிமிதமான கிருபையினால் மீட்படைந்து திருப்பணிக்கு வந்த ஒரு காலம், பல போராட்டங்கள் சோதனைகளில் நல்ல வெற்றிகள் அடைந்து முன்னேறின காலம், இறுதியில் மகிமையடைந்த தோடு நித்திய மகிமையின் நம்பிக்கையிலிருக்கும் ஒரு காலம் என்பவையாகும். கிறிஸ்தவ வாழ்க்கையில் இந்த நான்கு பருவங்களும் மிக முக்கியமானவை. ஒருவேளை காலம் முழுவதும் குழந்தையாகவே இருக்கிறவர்கள் இந்த வளர்ச்சிகளைக் கூறமுடியாது. ஆனால் வளர்ந்து செல்லுகின்றவர்கள் இக் காலக்கட்டங்களின் முக்கியத்துவத்தை உணருவார்கள்.

பாவத்தின்மேல் பாவம் பெருகும் காலம்: நமக்குப் பாவமில்லை என்று சொல்வோமானால் அதன் மூலம் இன்னும் பாவத்தைப் பெருக்குகிறோம் (1 யோ. 1:8). மனிதன் பாவம் செய்கிறபடியால் அவன் பாவியல்ல, அவன் பாவத் தன்மை

யுடையவனாக இருக்கிறபடியால் பாவம் செய்கிறான். சிலர் சில தீயச் செயல்களைச் செய்யாமலிருப்பதுதான் பரிசுத்தம் என நினைக்கிறார்கள். இது கிறிஸ்தவக் கருத்து அல்ல. கசப்பான பழங்களைத் தரும் மரத்தின் அந்தப் பழங்களைப் பறித்துத் தூர எறிந்துவிட்டால் மரம் சுத்தமாகிவிடுமா? பயனற்ற புல்செடிகள் போன்று பாவம் வேகமாகப் பற்றிப் படரும் தன்மையுடையது. அது புற்று நோய்போன்றும் அரிப்பிளவை போன்றும் படரும். ஆதாம், காயீன் என்று அது சந்ததி சந்ததிகளாகப் பரவும். எண்ணம், கற்பனை, சதி, செயல் என்று அது மனிதனின் முழு ஆள் தத்துவத்தையும் கறைப்படுத்தும். யூதர், புறஜாதியார், பக்தர், பாமரர் என்றில்லாமல் எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப் போனோம் (ரோ. 3:12). பவுல் ஒரு சிறந்த பக்தன்; பரிசேயன்; ஆனால் பாவத்திற்கு அப்பாற்பட்டவரல்ல. அவர் நம்பின நியாயப்பிரமாணம் அவருடைய பாவத்தைக் குறைக்கவில்லை; மாறாக இன்னும் பன்மடங்காக்கிற்று. நாம் எல்லாருமே இப்பருவத்தில் நிர்ப்பந்தமான மனிதர்கள்தான். இதை முதலில் ஒத்துக்கொள்பவர்கள் அடுத்த பருவத்திற்குக் கடந்து வரலாம்.

கிருபையின்மேல் கிருபை பெருகும் காலம்: 'இயேசு கிறிஸ்துவினுடைய பரிபூரணத்தினாலே நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்' (யோ. 1:16). நல்ல சூழ்நிலை இருந்தால் பாவம் செய்ய முடியாது என்று சிலர் மேலோட்டமாய் கூறுவர். நல்ல சூழ்நிலை ஒருவேளை பாவத்தின் ஆற்றலை மட்டுப்படுத்த முடியுமே தவிர பாவப் பிரச்சினைக்குத் தீர்வு தரமுடியாது. அதற்கு ஒரே ஒரு வழி பாவியை நீதிமானாக்கும் கடவுளின் கிருபைதான். இந்தக் கிருபை இயேசுகிறிஸ்துவின்மூலம் நமக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கிறது. இந்தக் கிருபையின் அனுபவத்திற்குள் வந்த பின் பவுலின் வாழ்க்கை முழுதும் கிருபையின் அடித்தளத்தில் கட்டப்பட்டிருப்பதைக் கண்டார். தாயின் வயிற்றிலிருந்தே தேவ கிருபையினால் அவர் பிரித்தெடுக்கப்பட்டார் (கலா. 1:15). அவரடைந்த மீட்பு கிருபையினாலே கிடைத்த ஒன்று (எபே. 2:8). அவர் பிழைத்திருப்பதும் கிறிஸ்துவினுடைய

கிருபையினாலேயே (கலா. 2:20,21). அவர் இருப்பதும் உழைப்பதும்கூட அந்தக் கிருபையினாலேதான் (1 கொ. 15:10). கிருபை ஐசுவரியமானது. அதன் பரிபூரணம் நித்திய ஜீவனைப்பற்றிய நிச்சயத்தை நமக்கு அளிக்கிறது (ரோ. 5:17). இன்றும் அருள்மாரியின் பெருக்கம் உண்டு. அதனுள் கடந்து வருவோர் யார்?

'அருள் ஏராளமாய் பெய்யும்
அருள் ஏராளம், அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாயல்ல
திரளாய் பெய்யட்டுமே.'

வெற்றியின்மேல் வெற்றி பெரும் காலம்: 'கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றிலும் வெற்றிகொள்கிறவர்களாயிருக்கிறோம்' (ரோ. 8:36,37). இங்கு எந்தச் சூழ்நிலையிலும் கிறிஸ்துவின்மேலுள்ள அன்பில் உறுதியாயிருப்பது பெரியதொரு வெற்றியாகக் கூறப்படுகிறது' மேலும் எல்லா இடங்களிலேயும் நம்மைக்கொண்டு கடவுளை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற கடவுள் இந்தப் பணி மூலம் நம்மை வெற்றி சிறக்கப்பண்ணுகிறார் (2 கொ. 2:14). சிலுவை ஓர் இழப்பு போன்று தோன்றினாலும், துன்புறும் கடவுளின் உள்ளத்தை அது உலகுக்கு அறிவித்துக்கொண்டிருக்கிறபடியால் அது ஒரு வெற்றியின் சின்னம் ஆகும். உலகத்தில் கொடிதான ஒன்றாக எண்ணப்படும் மரணம் இயேசுவின் உயிர்த்தெழுதலினால் வெற்றியாக விழுங்கப்பட்டது. கிறிஸ்துவின்மூலம் நாம் அடையும் வெற்றி பாதாளத்தின் அற்பநேர வெற்றியையும் முறியடிக்கிறது (1 கொ. 15:54–57).

மகிமையின்மேல் மகிமையடையும் காலம்: 'நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியில் காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து

மறுரூபப்படுகிறோம்' (2 கொ. 3:18). நாம் அடையப்போகும் மகிமையை மனித வார்த்தைகளால் விளக்க முடியாது. அந்த மகிமையின் நம்பிக்கையிருக்குமானால் இக்காலத்துப் பாடுகளை நாம் பெரிதாக எண்ணமாட்டோம் (ரோ. 8:18). இன்று நாம் அடைகிற மகிமை இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு நாம் அனுபவிக்கும் பாடுகளாகும். கிறிஸ்தவனின் மகிமை மரணத்திற்குப்பின் ஏற்படுவது மட்டுமல்ல, அது இங்கேயே ஆரம்பிக்கிறது. 'இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்' (1 கொ. 13:12). இந்த மகிமையின் நம்பிக்கை கல்லறைத் தோட்டத்திலும் இருக்க வேண்டும். அங்கே நமது அற்பமான உடல், மகிமையான உடலாக மாறும் என்று நம்பி மண்ணுக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

உலக வாழ்க்கையில் நமக்குக் கொடுக்கப்படும் ஆற்றலும், அழகும் நிறைந்த பருவ காலங்களைக் குறித்துப் பெருமையடைகிறோம். நம் ஆன்மீக வாழ்க்கைப் பருவத்தைக் கணக்கிடும்படி ஆண்டவர் நம்மை அழைக்கிறார். முற்கால அனுபவங்களை மாத்திரம் வைத்து நம் தற்காலத்தை நிச்சயப்படுத்தக்கூடாது. நாம் இருக்கும் பருவம் போதுமென்றும் எண்ணக்கூடாது. நாளுக்கு நாள் வளர்ச்சிப்படியில் கடந்துபோகும்போது சில வேளைகளில் நாம் விழுந்துவிடலாம். ஆனால் விழுந்த இடத்திலேயே கிடந்து அழுதுகொண்டிருக்கும் குழந்தையைப்போல நாம் இருக்கவேண்டாம். துரிதமாய் எழுந்து புறப்படுவோம். நம் காலங்கள் வேகமாய்க் கடந்துபோகின்றன. ஒளிமயமான எதிர்காலத்தை எண்ணி மகிழ்ச்சியோடு நடைபோடுவோம். நீதியின் சூரியன் நம்மேல் உதிப்பாராக.

ஜெபம்:

அருள்மாரியான ஆண்டவரே! உமது அருள் மழையில் நாங்கள் நனையும்படி செய்யும். எங்கள் வாழ்வில், பணியில், சிந்தனையில் தேக்கம் காணாதபடி வேகமாய் வளர தூய ஆவியின் ஊட்டச்சத்தினை ஏராளமாய் வழங்கும் சுவாமி—ஆமென்.

16

அர்ப்பணமும் ஆயத்தமும்

'. . .அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று?' *(மா. 9:28)*

'. . .உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்.' *(யோசு. 3:5)*

உலக நடப்புக்களைப்பற்றிய விழிப்புணர்ச்சி நமக்கு இருக்கிறதா? எந்த நேரத்தில் போர் மூண்டுவிடுமோ என்று அஞ்சிக்கொண்டிருக்கும் நாடுகள் உள்ளன. நாடுகளுக்குள் சமாதானம் ஏற்பட நூதனமான முயற்சிகள் நடைபெறுகின்றன. வறுமையால் வாடிக் கிடக்கும் மக்கள், அவர்கள் உதிரத்தை உறிஞ்சி வாழும் விஷ அட்டைகளான பணக்காரர்கள், வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுத் தற்கொலை செய்ய விரும்பும் உள்ளங்கள், உடைந்துபோன குடும்பங்கள், துர்நாற்றம் வீசும் மனிதர்கள், கறைபட்ட சமுதாயம்—இந்தக் காட்சிகளுக்கெல்லாம் நம் கண்களை மூடிவிட முடியாது. ஏனென்றால் நாம் உலகத்திற்குள் அனுப்பப்பட்டிருக்கின்ற நற்பணியர்கள். நாளைய உலகத்தின் நன்மை இன்றைய நமது முயற்சியைச் சார்ந்திருக்கிறது. ஆற்றல் நிறைந்த பணிகளை ஏன் செய்ய முடியவில்லை என்று சீடர்கள் கேள்வி கேட்கின்றனர். சித்தீமிலிருந்து பயணப்பட்டு வந்த இஸ்ரவேலர் யோர்தானின் வெள்ளப் பெருக்கைக் கண்டு ஸ்தம்பித்து நிற்கின்றனர். அற்புதம் செய்ய கடவுளுக்குத் தடையில்லை. நமக்கு முன் வைக்கப்படும் வேண்டுகோள், 'இன்று உங்களை அர்ப்பணம் செய்து ஆயத்தப்படுத்துங்கள், நாளைக்கு கடவுள் உங்கள் நடுவில் அற்புதங்கள் செய்வார்" என்பதேயாகும்.

'எத்தனையோ அருளுரைகள் ஆற்றினேன், பயனில்லை. எத்தனையோ அறிவுரைகள் கொடுத்தேன், கேட்பாரில்லை. எத்தனையோ முயற்சிகள் எடுத்தேன், சித்தி இல்லை. எத்தனையோ பணிகள் செய்தேன், ஒரு பயனும் இல்லை" என்கின்ற குரல்களை ஊழியக்களங்களில் நாம் அடிக்கடி கேட்கிறோம். ஏன் கூடாமற்போயிற்று? முறை தவறா? முயற்சி குறைவா? பயிற்சி போதாதா? மனித நிலையின் மோசமா? எதுவானாலும் இருக்கட்டும். புதிய அழைப்பு வந்திருக்கிறது. புதிய ஏற்பாடு துவங்கப் போகிறது. மாற்றங்களைக் காண நம்மை அர்ப்பணிப்போம்.

வெற்றியுள்ள ஊழியத்திற்குத் தேவைப்படுபவை இரண்டாகும்: *(1)* அர்ப்பணிக்கப்பட்ட ஆள் தத்துவம் (consecrated Personality). *(2)* பயிற்சியுள்ள தலைமை (Trained Leadership). ஊழியக் களத்தில் சிலர் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆட்கள்; வைராக்கியம், பக்தி நிறைந்தவர்கள்; ஆனால் பயிற்சியுடையவர்கள் அல்ல. ஒரு சிறு பையனைப்பற்றியும் அவனுடைய அத்தையைப்பற்றியும் ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. தங்கள் சிறு பையனை அத்தையிடம் ஒப்படைத்துவிட்டு பெற்றோர் அலுவல்களுக்குச் சென்றுவிட்டனர். பிள்ளையிடம் தன் அன்பைக் கொட்டித்தள்ள இதுதான் தக்க சமயம் என்று எண்ணி வீட்டிலிருந்த ஜாம், மிட்டாய்கள் எல்லாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக அந்த அத்தை எடுத்துக் கொடுத்தார்களாம். 'என் அப்பாவையும் அம்மாவையும்விட அத்தைதான் ரொம்ப நல்லவர்கள்' என்று அந்தப் பையன் கூறினான். பெருமையடைந்த அத்தை இன்னும் கடையிலிருந்து ஏராளம் இனிப்பு வகைகளை வாங்கிப் பையனுக்குத் தந்தார்கள். இவைகளைத் தவிர அன்று பையன் வேறு எதையும் சாப்பிடவில்லை. பையனுக்கு ஒரே வயிற்று வலி வந்துவிட்டது. படுத்துவிட்டான். பெற்றோர் வந்து நடந்தவைகளை அறிந்து அந்த அத்தையைத் திட்டினார்கள். 'எனக்குப் பையன் மேல் எவ்வளவு அன்பு என்பதை ஆண்டவர் அறிவார்" என்று கூறி அவ்வம்மையார் மகிழ்ந்தார்களாம். தகுந்த பயிற்சியில்லாமல் இயேசு நேசருக்காகத் தொண்டு செய்கிறேன் என்கிற பக்தர்களின் நிலையும் இப்படித்தான்.

இனி, சிலர் பெரிய அறிவாளிகள். நன்கு பயிற்சி பெற்றவர்கள். இறையியல் கற்றவர்கள். ஆனால் தங்கள் வாழ்க்கையை முழுவதுமாய் அர்ப்பணம் செய்யாதவர்கள். அருமையான பிரசித்தி பெற்ற பிரசங்கி, ஆனால் மாம்ச பலவீனம் உள்ளவர். பிரபலமான போதகர், ஆனால் இரகசியமாய்க் கொஞ்சம் குடிகாரர். திறமையுள்ள ஆசிரியர், ஆனால் அவரிடத்தில் உண்மை கிடையாது. கெட்டிக்கார வைத்தியர், ஆனால் திடீரெனக் கோபம் கொள்வார். இப்படிப்பட்டவர்கள் அருட்பணி ஆசனங்களில் உட்கார முனைவது ஓட்டப் பந்தயத்திற்கு முடவன் பெயர் கொடுப்பதற்கும், படம் பார்க்க குருடன் டிக்கெட் வாங்குவதற்கும், நீச்சல் தெரியாதவன் மீன் பிடிக்க வலையை வீசுவதற்கும் சமமானதாகும். 'மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்' என்கிறார் பவுல் (1 கொ. 9:27).

முதலில் உங்களை கடவுளுக்கு அர்ப்பணம் செய்யுங்கள். நம்மை அழைத்தவர் பரிசுத்தரானபடியால் நாமும் பரிசுத்தர்களாக இருக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறோம் (1 பே. 1:15,16). கடவுளுக்குத் தன்னை ஒப்படைக்கும்போது மனிதனின் சித்தம் திருப்பப்படுகிறது. தங்களைப் பரிசுத்தம் பண்ணுதல் என்னும்போது, ஒருவித சன்மார்க்க வாழ்க்கை வாழ்வதல்ல, கடவுளே தமக்கேற்ற கருவியாக நம்மை ஆக்கும்படி அவரிடம் நம்மைத் தந்துவிடுவதாகும். 'கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்' (யோ. 15:2). நம்மைப் பற்றி நமக்குத் தெரிவதைவிட நம்மைப்பற்றி ஆண்டவருக்கு அதிகம் தெரியும். 'கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர், வேதனை உண்டாக்கும் வழி என்னில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்' என்று சொல்லுவோமாக (சங். 139:1,24). அப்பொழுது நம்மைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரை நாம் சந்திப்போம் (லேவி. 21:23). ஏசாயாவைப்போன்று அனுதினமும் நம்மைப் பலிபீடத்தில் வைக்கும்போது அவர் தமது தூய்மை என்னும் அக்கினித் தழலால் நம்மைச் சுத்தமாக்குவார் (ஏசா. 6:6,7).

இனி நாம் 'இதோ அடியேன், என்னை அனுப்பும்' என்று தைரியமாய்க் கூறலாமல்லவா?

அடுத்து நமக்குப் பயிற்சி தேவை. இன்று எல்லாத் துறைகளிலும் பயிற்சி உண்டு. மருத்துவம், கல்வி, தொழில் நுட்பம், போக்குவரத்து போன்ற எல்லாவற்றிலும் பயிற்சி முக்கியமாகக் கருதப்படுகிறது. ஆனால் திருமறையைத் தூக்கிக்கொண்டு திருப்பணி செய்ய வருபவர்கள்தான் பயிற்சியைப்பற்றிக் கவலைப்படுவதேயில்லை. இது கடவுளையும் அவருடைய வார்த்தையையும் அவமதிக்கும் ஒரு செயலாகும், இதற்கென்று ஓர் ஆர்வம்வேண்டும். இயேசுகிறிஸ்து தமது சீடர்களை மூன்று ஆண்டுக் காலம் பயிற்றுவித்தார். ஜெபம்பண்ணக் கற்றுக்கொடுத்தார். பிரசங்கம்பண்ணக் கற்றுக்கொடுத்தார். பதில் சொல்லக் கற்றுக்கொடுத்தார். வீடு சந்திக்கக் கற்றுக்கொடுத்தார். விருந்து வீட்டிலோ, கல்யாண வீட்டிலோ சென்றால் எங்கே உட்காரவேண்டும் என்றுகூடக் கற்றுக்கொடுத்தார். இவைகளை அற்பமாக எண்ணுகிறவர்கள் ஊழியத்தில் எரிந்து பிரகாசிக்கமுடியாது. பயிற்சி பெறத்தக்க தாழ்மையான சிந்தை நம்மிடமிருந்தால் அந்த வாய்ப்பு பல வழிகளிலும் நமக்குக் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

'நீங்கள் அமர்ந்திருந்து நானே கடவுள் என்று அறிந்துகொள்ளுங்கள்' (சங். 46:10). 'கடவுளுக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப் பெலனடைந்து கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்' (ஏசா. 40:31). 'கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்' (1 பே. 3:15). அப்போது வாழ்க்கை முழுவதும் பரிசுத்தமாகும். 'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்' (மத். 11:29). இவைகளையெல்லாம் இன்றைக்கே செய்ய ஆரம்பியுங்கள். நாளைக்கு ஆண்டவரின் ஆற்றல்

நிறைந்த செயல்களை உங்கள் வாழ்க்கையிலும் பணியிலும் காண்பீர்கள்.

ஜெபம்:

ஆண்டவரே, திவட்டியில் எண்ணெய் இல்லாதிருந்தாலும் மற்ற கன்னிகைகளைப்போல நானும் ஒரு கன்னிகை என்று நடித்து உலகத்தை ஏமாற்றும் மாய்மாலத்திலிருந்து என்னை விடுவியும். உமக்கு என்னை அர்ப்பணிக்கும் முழு மனதையும், உம்மிடத்தில் கற்றுக்கொள்ளும் தாழ்மையையும் எனக்குத் தாரும். உமது அற்புதச் செயல்களைக்காணும்படி என் கண்களைத் திறந்தருளும்.—ஆமென்.

17

செத்த ஈக்கள்

'செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக் கெட்டுப்போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்.' *(பிர. 10:1)*

எனக்கு ஓர் அம்மாவைத் தெரியும். அவர்கள் மிகவும் திறமையுள்ளவர்கள். நான் அவர்களைச் சந்திக்கச் செல்லும் போது மிகவும் அன்பாகப் பேசுவார்கள். நன்றாக உபசரிப்பார்கள். நல்ல ஜெப வாழ்வு உடையவர்கள். சபைக் காரியங்களில் முன் நின்று ஒத்துழைப்பார்கள். ஆனால் அந்தச் சபையிலுள்ள ஏனையோர் இந்த அம்மாவை மிகவும் நல்லவர் என்று கூறுவதில்லை. காரணம், கோள்சொல்லிப் புறங் கூறவதில் இவர்கள் கைதேர்ந்தவர்களாம். யாரும் நம்பிக்கையுடன் ஒரு காரியத்தை இவர்களிடம் கூறமுடியாதாம். கடைசியில் நானே இந்தச் சங்கடத்தை அனுபவிக்க நேர்ந்தது. அதற்குப்பின் இந்த அம்மா என்றால் நான் மிகவும் எச்சரிக்கையாயிருப்பேன். இவர்களை நினைக்கும்போதெல்லாம் எனக்குப் பிரசங்கி 10:1தான் நினைவுக்கு வரும். ஒரு வேளை பெரிய பாவமாயிருந்தால் விட்டுவிடலாம். ஆனால் இந்தச் சொற்ப மதியீனத்தை, ஒரு செத்த ஈயை விலக்குவது சிலருக்கு வாழ்க்கையிலே கடினமாகப் போய்விடுகிறது. நாம் பெற்றிருக்கும் பெரிய தாலந்துகளை நஷ்டமாக்குவதற்கு ஒரு செத்த ஈ போதுமானது. வாழ்க்கையில் சிறு காரியங்களிலும் நாம் அதிக விழிப்புள்ளவர்களாய் இருக்க இந்த வசனம் அறிவுறுத்துகிறது.

முதலாவது, தைலக்குப்பியை மூடிப் பாதுகாப்பதில் நாம் அதிக விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும்: திறப்பு எங்கே இருக்கிறது என்று சாத்தான் தேடி நடக்கிறான். கிறிஸ்தவ வாழ்க்கை சுயாதீனமானது என்று நினைத்து நிர்விசாரமாய் வாழ்வது அபாயகரமானது. நம்மிடத்தில் அதிகம் கொடுக்கப்பட்டால் அதிகம் கேட்கப்படும் என்று ஆண்டவர் கூறினார் (லூ. 12:48). எனவே சுயாதீனம் மிகவும் பொறுப்பான வாழ்க்கைக்கு நம்மை நடத்தவேண்டும். 'உன்னைக் குறித்தும் உன் போதனையைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு' என்று தீமோத்தேயுவுக்குப் பவுல் புத்தி சொல்லுகிறார் (1 தீமோ. 4:16). இந்த புத்திமதி எல்லாருக்கும் உரியதாகும். எல்லாக் காவலோடும் நம் இருதயத்தைக் காத்துக்கொள்ளும்போது நச்சுச் சிந்தனைகளான செத்த ஈக்களுக்கு நம் சிந்தனைகள் தப்பித்துக்கொள்ளும். நமது உடல் ஓர் இயந்திரம்போன்றது. அதன் ஒவ்வொரு உறுப்பும் வேகமான இயக்கம் கொண்டதாகும். அவைகளின் செயல்பாடு நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்போது நமது உடலைப் பரிசுத்த ஆவியின் ஆலயமாகப் பாதுகாத்துக்கொள்ளலாம். குறிப்பாக, நாவு நமது உடலில் ஒரு சிறு அவயவமாக இருந்தும் அது நமது முழு உடலையும் கறைப்படுத்தி, வாழ்க்கைச் சக்கரத்தையே கொளுத்தி நாசமாக்கும் தன்மையுள்ளது (யாக். 3:5,6). ஒரே ஒரு தகாத வார்த்தையினால் எத்தனையோ சண்டைகள்! பிரிவினைகள்! நாம் நமது தைலக்குப்பியாகிய உடல், உள்ளம், ஆவி அனைத்தையும் அதிக விழிப்புடன் காத்துக்கொள்வோமாக. விழிப்புணர்ச்சி இல்லாத பேதுரு கெத்சமனேயில் பதில் சொல்ல முடியாமல் தள்ளாடுவதும், திடீர் வேகத்தில் பட்டயம் எடுப்பதும் நமக்கு வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

இரண்டாவது, பரிமள தைலத்தின் உயர்வையும் விலையையும் உணர்ந்து நாம் விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும்: பரிமள தைலம் என்பது பலவிதமான வாசனைத் திரவியங்கள் கலந்த ஒன்றாகும். கூட்டங்களில் பிறர் முகர்ந்து மகிழ்ச்சியடையும்படி சிறப்பு நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் இது பயன்படுத்தப்படும். உன்னதப்பாட்டில் வரும் காதல் வருணனைகளில்

பரிமள தைலம் இடம் பெறுகிறது. மகிழ்ச்சி, பாசம் இவைகளுக்கு அது அடையாளமாயிருக்கிறது. 'உமது பரிமள தைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்; உமது நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்போலிருக்கிறது; ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்' (உன். 1:3). நாம் தெரிந்துகொண்ட வேதப் பகுதியில் ஞானம், செல்வாக்கு ஆகியவைகளைப் பரிமள தைலத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார் பிரசங்கி. நமக்குக் கிடைக்கின்ற அறிவு, செல்வம், செல்வாக்கு, பட்டம், பதவி அனைத்தும் உயரிய நோக்கங்களுடன் கடவுள் தரும் அருட் கொடைகளாகும். எனவே அந்தந்த நோக்கம் நிறைவேறும்படி அவைகளை மதிப்புடன் காத்துக்கொள்ளவேண்டும். பெரிய மாடி வீடு ஒன்றைக் கட்டி வைத்துவிட்டு, குப்பைக்கூளங்களை முன் வாசற்படியில் கொட்டி வைத்தால் அது அந்த வீட்டின் அழகையும் மதிப்பையும் கெடுத்துவிடும். அதனால் அந்த வீட்டுக்காரன் ஏளனம் பண்ணப்படுவான். நாம் இகழப்படும்போது கடவுளும் இகழப்படுகிறார். கிறிஸ்தவன் என்கிற பெயரைத் தரித்துக்கொண்டு தகாத செயல்களில் ஈடுபட்டால் நாம் கிறிஸ்துவை இன்னும் ஆணி அடிக்கிறோம் என்பதுதானே பொருள்?

மூன்றாவது நம்மைச் சுற்றிப் பறந்துவரும் ஈக்களைப்பற்றி நாம் விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும்: அதிக துர்நாற்றம் உள்ள இடங்களிலும் அதிக நறுமணம் உள்ள இடங்களிலும் ஈக்களின் வேலை அதிகம். முதலில் பறந்துவரும். பின் தைலத்தை மொய்த்துவிட்டுப் போய்விடும். இப்படிப் பல தடவை செய்வதால் அது இறுதியில் பறந்துபோய்விடும் என்று நினைப்போம். இல்லை, அது தைலத்தில் விழுந்துவிடுகிறது. உயிருள்ள ஈ, செத்த ஈயாக மாறுகிறது. அதன்பின் அது தப்பிவிடாது. தைலத்தை முழுதும் நாறவைப்பது தான் அதன் வேலை. சமுதாயத்தில் பொதுவாகத் தீமையானது என்று கருதப்படும் சில கெட்ட பழக்கங்களைக் கிறிஸ்தவர்கள், அதிலும் முன்னணியில் இருப்பவர்கள் கடைப்பிடிப்பது என் மனதை வேதனைப்படுத்தும் செயல்களில் ஒன்று. தட்டிக்கேட்டால் எதிர்வாதம் பல கோணங்களில் வரும். 'இதெல்லாம் எங்களைக் கறைப்படுத்தாது. சந்தர்ப்

பத்திற்கேற்பப் பயன்படுத்துவதில் தவறில்லை' என்பார்கள். உண்மைதான்; முதலில் அது உயிருள்ள ஈயாகப் பறந்துவந்து விட்டுத்தான் செல்லும். ஆனால் சிலருடைய வாழ்வில் அது செத்த ஈயாக மாறி, அந்தப் பழக்கத்தில் அடிமைப்பட்டு அதிலிருந்து மீளமுடியாதபடி செய்துவிடும். உலகில் பொருட்களை அனுபவிப்பதற்கு ஒரே ஒரு பிரமாணம்தான் தெளிவாக உள்ளது. 'எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு உரிமையுண்டு. ஆனால் எல்லாம் பயனுடையதாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு உரிமை உண்டு; ஆனால் ஒன்றுக்கும் நான் அடிமைப்படமாட்டேன்' *(1 கொ. 6:12).*

எனக்கு நினைவுக்கு வருகின்ற ஒரு நிகழ்ச்சியைக்கூறி முடிக்க ஆசைப்படுகிறேன். ஒரு பெரிய ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. அதன் நடுவே ஒரு யானை மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டு மணி ஓசையுடன் சென்றுகொண்டிருந்தது. அது ஒரு கோயில் யானை. ஓர் இடத்திற்கு வந்தவுடன் கூட்டத்தார் அனைவரும் 'கொல்' என்று சிரித்தார்கள். என்னவென்று விசாரித்தேன். அந்த யானை அந்த இடத்தில் வந்தபோது பக்கத்தில் கிடந்த ஒரு காய்ந்த பழத்தோலை எடுக்க தனது நடைத்திசையை விட்டுத் திரும்பினதாம். நாமும் சிரிக்கலாம். ஆனால் நம்மைப் பார்த்துச் சிரிப்பவர்களும் பலர். இயேசுகிறிஸ்துவின் புகழ்ச்சிக்காகவும், நாம் கூறும் வார்த்தைகள் எல்லா நம்பிக்கையோடும் ஏற்றுக்கொள்ளப்படவும் நாம் நம்மிடத்தில் குடிகொண்டிருக்கும் சில பழக்கங்களை, சுபாவங்களை விட்டுவிட ஆயத்தப்படுவோமா? பவுல் அப்போஸ்தலனின் வீரமுள்ள சாட்சியைப் பாருங்கள். 'இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும் நாங்கள் கிறிஸ்துவின் நற்சுகந்தமாயும், ஜீவ வாசனையாகவுமிருக்கிறோம்' *(2 கொ. 2:16,17).*

ஜெபம்:

ஆண்டவரே, என்னை ஆராய்ந்து பாரும். என்னை நாறப்பண்ணும் தீய பழக்கங்கள், குணங்களிலிருந்து விடுவித்துச் சுத்தமாக்கும். பற்றிவரும் சோதனைகள் படிப்படியாய் என் வாழ்வை அடிமைத்தனத்திற்குள்ளாக்காமலிருக்க விழிப்புள்ள வாழ்வைத் தாரும்.—ஆமென்.

18

சில விளக்குகள்

'உலகத்தில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.' *(யோ. 1:9)*

'மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.' *(மத். 5:16)*

கடவுளை ஒளியாக எல்லாச் சமயங்களும் எடுத்துக் கூறும். ஆனால், மனிதனும் ஓர் ஒளி விளக்காக இருக்கமுடியும் என்பதைத் திருமறை சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. இருள் சூழும் உலகில், இருள் சூழும் சந்தர்ப்பங்களில் கடவுளின் பிள்ளை தன் தந்தையைப்போல இருளின் பயங்கரத்தை முறியடித்து ஒளியூட்ட அழைக்கப்படுகிறான். வாழ்க்கை தன்னில்தானே விளக்காக இருக்கமுடியாது. அது மக்கள் நடுவில் நற்செயல்களாகச் செயல்படும்போது விளக்காக மாறுகிறது. உலகில் மனிதனுக்கு ஒரே ஒரு வாழ்க்கைதான் அனுமதிக்கப்பட்டுள்ளது. பிறந்துவிட்டோமே என்பதற்காக எப்படியோ வாழ்க்கை ஓட்டத்தை ஓடி முடித்துவிடவேண்டுமென்று நினைக்கக்கூடாது. எந்த மானிடனையும் ஒளியுள்ள விளக்காக மாற்ற இயேசுகிறிஸ்து ஆற்றல் பெற்றிருக்கிறார். இவ்வாறு இந்த ஒளி விளக்கு ஊடுருவும் தன்மையுடையது. இந்த ஊடுருவல் உறவின்மூலம் நிகழுகிறது. இந்த உறவை இயேசுகிறிஸ்துவோடும் சகமனிதர்களோடும் வைத்துக்கொள்ளும்போது நாம் ஒளி விளக்காகத் திகழமுடியும். மனிதர்கள் அனைவரையும் விளக்கு என்ற அடிப்படையில் பிரித்தால், இந்த உலகில் பலவிதமான விளக்குகள் இருப்பதாகத் திருமறை கூறுகிறது.

கொளுத்தமுடியாத விளக்கைப்பற்றிச் சிந்திப்போம்: பத்து கன்னிகைகளின் உவமையில் வரும் புத்தியில்லாத ஐந்து கன்னிகைகள் தங்கள் விளக்குகளைக் கொளுத்த முயன்றும் முடியவில்லை (மத். 25:3). இதற்குக் காரணம் அவர்களின் விளக்குகளில் எண்ணெய் இல்லாதிருந்ததாகும். மணவாளனைச் சந்திக்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. அதற்காகப் புறப்படவும் செய்தார்கள். ஆனால், நெருக்கடியான நிலையில் அவர்கள் விளக்குகளைக் கொளுத்த முடியவில்லை. உலகத்திற்கு நன்மைசெய்ய வேண்டுமென்று பலர் முன்வருகிறார்கள். சமுதாயப் பணிசெய்ய வேண்டுமென்று ஆசையும் உண்டு. ஆளையும் ஆர்வத்தையும் கண்டு உலகமும் அவர்களை நம்பி வரவேற்கிறது. அருஞ்செயல்களை அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. ஆனால், நெருக்கடியான ஒரு கட்டத்தில் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஈரமற்ற வாழ்க்கை, துணிவற்ற ஆர்வம்—இவைகளால் பயனில்லை. இப்படிப்பட்டவர்களை இன்று அரசியலிலும் திருச்சபையிலும் அதிகமாகக் காணமுடிகிறது. தான் ஒளி கொடுக்க முடியாத நிலையில் விளக்குத்தண்டு அகற்றப்படும் என்ற எச்சரிக்கை எபேசு சபைக்குக் கொடுக்கப்படுகிறது (தரி. 2:4). தன்னிலேயே ஒளி இல்லாமல் ஊருக்கு ஒளியூட்டப் போகிறேன் என்று சபதம் ஏற்பது உலகை ஏமாற்றும் இழி செயலாகும்.

மங்கி எரிகிற விளக்கைப்பற்றிச் சிந்திப்போம்: ஒருநாள் நாங்கள் இரண்டு மூன்று பேராக ஓர் இடத்திற்குப் போய்க்கொண்டிருந்தோம். இரவு நேரம். சிறு நிலவு ஒளியும் இருந்தது. அப்போது எங்களோடு வந்த ஒருவர் டார்ச்சு விளக்கு வைத்திருந்தார். அவர் விளக்கைப் போட்டு எங்கள் எல்லாருக்கும் உதவிசெய்ய முயன்றார். ஆனால், அந்த வெளிச்சம் பெரும் இடறலை உண்டுபண்ணியது. அந்த விளக்கின் வெளிச்சம் மிகவும் மங்கலாக இருந்தபடியால் ஏற்கெனவே இருந்த நிலவு வெளிச்சத்தினையும் பார்க்கமுடியாமல் ஆகிவிட்டது. எனவே, அந்த சகோதரனிடம், 'நீங்கள் இனி விளக்கைப் போடவே வேண்டாம், ஏன் இருக்கிறதையும் கெடுக்கிறீர்கள்' என்று கூறியபோது அவர் வெட்கப்பட்டார். அநேகருடைய

வாழ்க்கையில் இது மிகவும் உண்மையாயிருக்கிறது. சில நேரங்களில் இவர்கள் கொஞ்சம் உதவியாக இருக்கலாம். ஆனால், அது போதாது. ஓரளவில் இப்படிப்பட்டவர்கள் நஷ்டத்தை வருவிக்கிறார்கள். அவர்களது இடம் காலியாக்கப்பட்டு இன்னொருவர் வந்தால் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படலாம். திருச்சபையில் புது மலர்ச்சி உண்டாக்குவோம் என்று எக்காள முழக்கமிட்ட பலர் இன்று எங்கேயோ இருந்து மங்கி எரிந்துகொண்டிருக்கிறார்கள். நாம் மங்கி எரிகிற விளக்குகளாய் இருந்தால் வெட்கப்படாமல் உடனே ஆண்டவரை அண்டுவோம். 'அவர் நெரிந்த நாணலை முறிப்பவரல்ல; மங்கி எரிகிற திரியை அணைப்பவரல்ல' (ஏசா. 42:3; மத். 12:20). எந்த மனிதனையும் அவர் பிரகாசிக்கச் செய்கிறார்.

மறைக்கப்பட்ட விளக்கைப்பற்றிச் சிந்திப்போம்: விளக்கைக் கொளுத்தி மரக்கலால் மூடி வைக்கிறவர்கள் வீடு முழுவதற்கும் வெளிச்சம் கொடுக்க முடியாது (மத். 5:15). இது புத்தியீனமான ஒரு செயல்போலத் தோன்றுகிறது. விரிவான அளவில் ஒளி கொடுக்கவேண்டிய விளக்கு இப்போது ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடக்கி வைக்கப்பட்டுள்ளது. சிலர் நினைத்தால் வாழ்க்கையில் நன்றாகப் பிரகாசிக்கமுடியும். ஆனால் சுயநலம், பண ஆசை போன்றவை மரக்காலாக தங்கள் வாழ்க்கையை மூடிக்கொண்டிருக்கும். திருச்சபையை ஆண்டவர் ஸ்தாபித்தபோது அது உலக முழுவதிற்கும் இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்தும் விளக்காக இருக்க எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது இன்று தன்னைச் சுற்றிப் பலமான கோட்டைச் சுவர்களை எழுப்பி, தனது திருப்பணியாளரையும் தன் எல்கைக்குள் கைதுசெய்து சிறை வைத்திருப்பது எவ்வளவு பரிதாபம்! இயற்கையாகக் கடவுள் தரும் சூரிய ஒளி நல்லோர் கெட்டோர் என்று பாராமல் எங்கும், யாவருக்கும் ஒளி கொடுப்பது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? இன்னும் சிலர் எரிந்துகொண்டிருக்கும் பிற விளக்குகளில் மரக்காலை மூடிவிடப் பார்ப்பார்கள். பிறருடைய ஒளி உலகில் வீசிவிடக்கூடாது என்ற எண்ணமுடையவர்களும் இருக்கிறார்கள். நமது வாழ்க்கையை மூடியிருக்கும் மரக்கால் எது என்று ஆராய்ந்து பார்ப்போம்.

எரிந்து பிரகாசிக்கும் விளக்கைப்பற்றிச் சிந்திப்போம்: யோவான் ஸ்நானகன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காக இருந்தார் என்று இயேசு சாட்சிகொடுத்தார் (யோ. 5:35). ஆம், அந்த விளக்கு பிறப்பு முதலே எரிந்து பிரகாசித்தது, வனாந்தரத்தில் பிரகாசித்தது. அநீதியின் இருள் மண்டிக் கிடந்த ஏரோதுவின் அரண்மனையிலும் அது பிரகாசித்தது, தனது தலை வெட்டப்படும் நேரத்திலும் அது எரிந்து பிரகாசித்து ஓய்ந்தது. அது பலருடைய வாழ்க்கையிலும் ஊடுருவிச் சென்று அவற்றை ஒளிமயமாக்கிற்று. மனித வரலாற்றில் உயரிய இடத்தை அவர் பெற்றுக்கொண்டார். பெண்களிடத்தில் பிறந்தவர்களில் அந்த யோவானைக் காட்டிலும் பெரியவன் ஒருவனுமில்லை. 'மரணம் எப்போதும் வரட்டும். ஆனால், என் விளக்கு எரிந்துகொண்டேயிருக்கட்டும்' என்று சொல்வோமா?

மேற்கூறப்பட்ட நான்கு விளக்குகளில் நாம் ஏதாவது ஒன்றாகத்தான் இருக்கமுடியும். நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளவேண்டாம். சரியாகத் தீர்ப்புச் சொல்ல முடியா விட்டால் அப்பணியை ஆண்டவரிடமே விட்டுவிடுவோம். நாம் எந்த நிலையிலிருந்தாலும் அவர் நம்மை ஒளிரச் செய்வார் என்ற உண்மையில் உறுதிபூண்டு நம்மை அவரிடம் ஒப்படைப்போம். கடவுளைப் புகழ்ந்து பாடும் தாவீது, 'கர்த்தராகிய தேவரீர் என் விளக்காயிருக்கிறீர்; கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குகிறவர்' என்று விசுவாச முழக்கமிடுகிறார் (2 சாமு. 22:29). உலகத்தையே ஒளிமயமாக்க, நமது நற்செயல்கள் மூலம் உலகம் கடவுளை மகிமைப்படுத்த, நாம் எரிந்து பிரகாசிக்க முன் வருவோமா?

ஜெபம்:

இயேசுகிறிஸ்துவே, உம் திருமுகத்தின் ஒளியை என்மேல் பிரகாசிக்கப் பண்ணும். விளக்கு என்கிற பெயரில் நான் உலகை ஏமாற்றாமல், வாழ்க்கை முழுவதும் உலகில் எரிந்து பிரகாசிக்கும்படி இருள் அகற்றி, எண்ணெய் ஊற்றி, திரியைத் தூண்டி, மூடலை அகற்றி ஒளிரப்பண்ணும் சுவாமி.—ஆமென்.

19

விண்ணப்பமும் விடையும்

'நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.'
(1 யோ. 5:14)

'கடவுளுடைய கண் கெட்டுப்போய் விட்டதோ! அவருக்குச் செவி மந்தமாகிவிட்டது! அவர் உறங்கிவிட்டார் போலிருக்கிறது' என்றெல்லாம் ஒரு தாய் புலம்பிக்கொண்டிருப்பதைக் கேட்டேன். என்னவென்று கேட்டபோது தனது கஷ்டங்களையும், எதிர்பார்ப்புக்களையும் எடுத்துக் கூறினாள். இவைகளுக்காக நீண்ட காலமாக ஜெபம்பண்ணியும் ஒரு பயனும் இல்லாமல் போகவே இப்படி கடவுளைத் திட்டுவதாகக் கூறினாள். தொடர்ந்து கொஞ்ச நேரம் அந்த அம்மாவின் வாழ்க்கையைப்பற்றி உரையாடிக்கொண்டிருந்தபோது மேலும் சில தெளிவுகள் கிடைத்தன. இயல்பாகவே சில ஆசீர்வாதங்களை அவள் பெற்றிருக்கிறாள். சில காரியங்களை ஆண்டவரிடம் மன்றாடியும் பெற்றிருக்கிறாள். ஆனால் கேட்டதற்கு நேர்மாறாகச் சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அதோடு சிலவற்றிற்காக மட்டுக்குமிஞ்சி கேட்டதால் அவை தவறானவை என்று நான் புரிந்துகொண்டேன். ஆனால் அந்த அம்மாவுக்கு வேதனை மிகுந்த சில கஷ்டங்கள் இருந்தது உண்மை. வீட்டிற்கு வந்தபோது இதைப்பற்றி அதிகம் சிந்தித்து, திருமறையையும் புரட்டினேன். அங்கே கடவுளிடம் கேட்பது, பெற்றுக்கொள்வதுபற்றிச் சில தெளிவான உண்மைகளைக் காணமுடிந்தது.

கேட்காமலே கொடுக்கப்படுகின்ற நன்மைகளைப்பற்றிப் படித்தேன்: இவற்றைப் பொது ஆசீர்வாதங்கள் எனலாம். இது சமய நம்பிக்கை வேறுபாடின்றி யாவருக்கும் கிடைக்கின்றன. இயற்கைமூலம் ஆண்டவர் தரும் ஆசீர்வாதங்களை இப்பகுதியில் குறிப்பிடலாம். 'சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளில் நடக்கவிட்டிருந்தும் அவர் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழையையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, உணவினாலும் மகிழ்ச்சியினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி தமது சாட்சியை விளங்கப்பண்ணினார்' (அப். 14:17). படைப்பின் அடிப்படையில் எல்லா மக்களும் கடவுளின் பிள்ளைகளாக இருக்கிறபடியால் நல்லோர் தீயோர் என்று பாராமல் அவர் நன்மை செய்கிறார். ஆனால் சிலர் இதை உணர்ந்து அவருக்கு நன்றி சொல்லுகிறார்கள். மற்றவர்களோ அதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. இப்படிப்பட்ட காரியங்கள் இன்றும் நடந்துகொண்டிருக்கின்றன. படிப்பு, உத்தியோகம், பணம், சொத்து, வீடு இவை யாவும் எல்லாருக்கும் பொதுவாகக் கிடைக்கின்றவை. இவைகள் பொதுவானவை. இவற்றோடு இறை உறவும் கொள்ளும்போது வாழ்வு முழுமை பெறுகிறது.

கேட்டுப் பெற்றுக்கொள்ளுகின்ற ஆசிர்வாதங்களைப்பற்றிப் படித்தேன்: கேளுங்கள் தரப்படும் என்று இயேசு சொன்னார். விதவையும் அநீதியுள்ள நீதிபதியும் என்னும் உவமையில் ஆண்டவர் ஜெபத்தின் தொடர்ச்சி, விழிப்புணர்வு இவற்றைப் போதித்தார். கேட்டுப் பெற்றுக்கொள்வதில் ஒரு மகிழ்ச்சி இருக்கிறது. வெறும் உலகப் பொருட்களைக் கேட்பது தவறு. முழு வாழ்க்கையையும் நிறைவுபடுத்தும் நன்மைகளை அவரிடம் கேட்கவேண்டும். கேட்கும்போது அளவுகளை நாம் குறிக்காமல் கடவுளிடம் விட்டுவிடுவதை அவர் பெரிதும் விரும்புகிறார். இங்கு ஆகூர் என்கின்ற பக்தனுடைய ஜெபம் குறிப்பிடத்தக்கதாகும். 'நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி, என் கடவுளின் பெயரை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து

என்னைப் போஷித்தருளும்' (நீதி. 30:9). இப்படி நாம் என்றைக்காவது ஜெபித்திருக்கிறோமா?

கேட்டவைகளல்ல, மாறானவைகள் அளிக்கப்படுவதைப் படித்தேன்: யாப்போக்கு ஆற்றங்கரையில் யாக்கோபு தேவனோடு போராடி ஜெபித்தான் (ஆதி. 32:24–29). ஆசீர்வதிக்கும்படி வேண்டிக்கொள்கிறான். அங்கே அவனுடைய பெயர் மாற்றப்படுகிறது. அவனுடைய வாழ்க்கை மாற்றப்பட்டதற்கு இந்தப் பெயர் மாற்றம் அடையாளமாக இருக்கிறது. கடவுளின் நாமத்தை அறிவிக்கவேண்டுமென்று கேட்டான். 'நீ என் நாமத்தைக் கேட்பானேன்' என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார். நாம் கேட்பதற்கும் ஓர் அளவு உண்டு. நமக்குரிய எல்லையை மீறிக் கேட்டோமானால் கிடைப்பது மாறானதாகத்தான் இருக்கும். இப்படி ஜெபத்தில் நிகழும்போது நாம் கவலைகொள்ளவேண்டாம். நமது தேவையைப் பற்றி நமக்குத் தெரிவதைவிட ஆண்டவருக்கு அதிகம் தெரியும்.

கேட்டவை முழுவதும் மறுக்கப்படுவதைப் படித்தேன்: பவுலின் உடலில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அது சாத்தானின் தூதுவனாக இருந்து அவரைக் குட்டினது. அது நீங்கும்படி மூன்று தடவை வேண்டிக்கொண்டார். பதில் வித்தியாசமாயிருந்தது. 'என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்' என்றார் (2 கொ. 12:9). கடவுள் பவுலை நடத்தின சித்தத்தில் இந்த முள்ளுக்கும் குறிப்பிட்ட இடம் இருந்திருக்கிறது. பலவீனங்களை மாற்றுவதில் அல்ல, பலவீனங்களோடேயும் ஒரு மனிதனைப் பயன்படுத்துவதில்தான் அவருடைய வல்லமை நமக்கு விளக்கப்படுகின்றது. ஆண்டவர் நீக்க விரும்பாதவற்றை நீக்கவேண்டுமென்று நாம் ஆசைப்படாமலிருப்போமாக. கெத்செமனேயில், அந்தக் கசப்பான மரணப் பாத்திரம் இயேசுவுக்கு விருப்பமில்லாமல் இருந்தபோதுகூட, தம்மை முழுமையாகத் தம் தந்தையின் சித்தத்துக்கு ஒப்படைத்தார்.

தகாதவிதமாய்க் கேட்பதினால் பெற்றுக்கொள்ளாமலிருப்பதைப் படித்தேன்: 'நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள்

இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று, தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியால் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்' (யாக். 4:3). பிறர் கெட்டுப் போகவேண்டுமென்ற அகநோக்கில் ஜெபிக்கிறவர்களும் உண்டு. இப்படிப்பட்டவர்களுடைய ஜெபம் ஆண்டவர் பார்வைக்கு அருவருப்பாக உள்ளது. தனக்கு உலகில் பெயர், புகழ், தேவைக்கு மிஞ்சி பணம் இவை பெற்று மற்ற வர்களைவிடப் பெரியவனாக வாழவேண்டுமென்ற ஆசையோடு கேட்போமானால் அது பாவமாகும். இன்று நமது விண்ணப் பங்களைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

ஆண்டவருடைய சித்தத்தின்படி கேட்டால் நிச்சயம் பெற்றுக்கொள்வோம். அவருடைய சித்தத்தை அறிவது எப்படி? கொலோசே சபையார் தேவ சித்தத்தை அறிகின்ற அறிவில் வளரும்படி அவர்களுக்காக பவுல் விண்ணப்பம் பண்ணுகிறார் (கொலோ. 1:9). எனவே முதலில் அவருடைய சித்தம் இன்னதென்று பகுத்தறியும் பிரகாசமான மனக் கண்கள் கிடைக்கும்படி நாம் வேண்டிக்கொள்ளவேண்டும். அவரது சித்தம் நிறைவேறும் காலத்தை ஆண்டவரே குறிக் கட்டும். 'நீங்கள் கடவுளுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது' (எபி. 10:36).

ஜெபம்:

ஆண்டவரே, எதையும் உடனே பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற ஆத்திரத்தை என் ஜெப வாழ்விலிருந்து மாற்றும். உமது சித்தம் அறியவும், உமது உள்ளத்தைப் பகிர்ந்துகொள்ளவும் அந்த நேரத்தை அதிகப் பொருளுள்ள தாக ஆக்கும்.—ஆமென்.

20

இணையும் உறவு

'இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டுபோய், அவளோடே பட்சமாய்ப் பேசி, அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத்தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள்.'

(ஓசியா 2:14,15)

முறிந்த உறவு இணைகிறது. கணவனைவிட்டு ஓடிப்போய் அறநெறிச் சீர்கேட்டினால் தன்னைக் கெடுத்துக்கொண்டவள் மறுபடியும் அன்புக் கணவனால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு, மீட்கப்பட்டு, சேர்த்துக்கொள்ளப்படுகிறாள். இது ஓசியா தீர்க்கனின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியை வைத்தே கடவுளின் செய்தியைக் கூறுகிறார் தீர்க்கன். திருமணம் முடிந்த சில நாட்களுக்குள் இருக்கும் அன்பை இப் போது காணோம். இளவயதில் இருந்த பக்தி இப்போது குன்றிப்போயிற்று. வனாந்தரத்தில் எதற்கெடுத்தாலும் யெகோவாவை அண்டிவாழ்ந்த மக்கள், கானானில் குடியேறிய பின் அவரை மறந்துபோகிறார்கள். இதைத்தான் எரேமியா வேதனையோடு கண்டிக்கிறார். 'உன் இளவயதின் பக்தியையும், நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத் திருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்' (எரே. 2:2). ஒரு காலத்தில் பக்தி வைராக்கியத்துடன் பாடுபட்டுவிட்டு இன்று குளிர்ந்துபோயிருப்பவர்கள் உண்டு. ஆனால் கடவுள் உறவைப் புதுப்பிக்கிறார். இந்தப் புதுப்பித்தலில் கடவுள் இரண்டு காரியங்களைச் செய்கிறார்.

தனியான இடத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார்: பாலஸ்தீனச் சூழ்நிலையில் அது வனாந்தரமாக இருந்தது. நம்முடைய சூழ்நிலையில் அது வேறுவிதமான இடமாக இருக்கலாம். நாம் திருச்சபையாக வாழ்வது நல்லது. கூட்டு வழிபாடு செய்வதும் நல்லது. ஆனால் கடவுளோடு தனித்திருக்காதவர்களுக்கு இவற்றால் பயன் ஏதும் இல்லை. தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்திவிட்டு யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான் (ஆதி. 32:23,24). அப்போதுதான் அவனது வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது.

நான் செய்கின்ற வேலையினூடேயே தியானம் செய்கிறேன், கடவுளை நினைக்கிறேன் என்று சொல்பவர்கள் உண்டு. இதுவும் தேவைதான். ஆனால் இதுமட்டும் போதாது. இயேசுகிறிஸ்து அடிக்கடி தனித்திருக்கும்படி சென்றார். அதற்காக வனாந்தரம், கடற்கரை, தோட்டம், மலைகள் ஆகிய இடங்களைத் தெரிந்துகொண்டார். அவருடைய சீடர்களையும் அழைத்துக்கொண்டு போனார் (மா. 1:31; 6:31). இப்படிப்பட்ட தற்பரிசோதனை, உறவு புதுப்பித்தல் ஆகியவற்றின்மூலம் நாம் தெய்வீக ஆற்றலைப் பெற்றுக்கொள்கிறோம். உலகத்தைக் கலக்கும் வல்லமை அப்போதுதான் நமக்கு உண்டாகும்.

நமது ஜெப நேரங்கள் கடவுளுடன் உள்ள உறவைப் புதுப்பிக்கும் நேரங்களாகும். ‘நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்’ (சங். 46:10). ‘நீயோ ஜெபம்பண்ணும்போது உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் தந்தையை நோக்கி ஜெபம்பண்ணு’ (மத். 6:6). எந்தச் சந்தடியும் இல்லாத நேரங்கள் நமது அகக் கண்கள் தெளிவடையும் நேரங்களாகும். தீயில் நின்றும் சுடவில்லை என்று சொல்வதை நம்பமுடியாது. எனவே, இருக்கிற இடத்திலேயே இருந்துகொண்டிராமல் அவர் அழைக்கிற இடத்திற்குச் செல்வோமா? முக்கியமான சில காரியங்களை அவர் பேசவேண்டுமாம்.

பட்சமாகப் பேசுகிறார்: தனது அதிகாரத்தையும், கோபத்தையும் காட்டிக்கொள்ள கடவுள் முந்திக்கொள்ளவில்லை.

மாறாக மிகவும் தயவோடு பேசுகிறார். அண்மையில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. தனது மகளின் கெட்ட நடத்தையைக் கண்டித்து வந்தார் ஒரு தந்தை. ஒருநாள் அவள் வீட்டைவிட்டு ஓடிப்போனாள். தேடிப்போன தந்தை தனது மகள் இன்னொரு மனிதனோடு கூடா ஒழுக்கத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டுபிடித்தார். உடனே, தான் வைத்திருந்த அரிவாளினால் தனது மகளின் தலையை வெட்டி அதைப் பிடித்துக்கொண்டே 2 மைல் தூரம் நடந்து போலீஸ் நிலையத்தில் சரணடைந்தார். எத்தனை ஆத்திரம்! எத்தனை கோபம்! ஆனால் நமது அன்புத் தெய்வம் இப்படிச் செய்வதில்லை. கொடிய பாவநிலையில் நம்மைக் கண்டாலும் நம்மோடு பட்சமாகப் பேசி நம்மை மாற்ற முயலுகிறார். இத்துணை அன்பை வேறு எங்காவது காணமுடியுமோ?

முறிந்த உறவை இணைக்க முதல் வேலையை அவர் வலிய வந்து செய்கிறார். அடுத்த வேலை நம்மிடம் இருக்கிறது. அவர் அழைக்கிற இடத்திற்குச் செல்லவேண்டும். அவர் சொல்லுவதைக் கேட்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் பாதப்படியில் உட்கார்ந்திருந்து உன்னதமான செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்த மரியாள், தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் (லூ. 10:42). ‘கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்’ என்று எப்போதும் சொல்ல நாம் ஆயத்தமாயிருக்கிறோமா? (1 சாமு. 3:10.)

வேறு இரைச்சல்கள் தேவ சத்தத்தைத் தடைசெய்யாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். கூட்டங்களில் அருளுரையாற்றும்போது சிலர் பேசிக்கொண்டேயிருப்பார்கள். அப்போதுதான் வீட்டைப்பற்றிய சிந்தை, சாப்பாட்டைப்பற்றிய கவலை ஏற்படும். இப்படிப்பட்டவர்களைத் தவறான வழியில் பயன்படுத்துவதில் சாத்தான் கண்ணுங்கருத்துமாயிருக்கிறான். ஆவியானவர் சபைகளுக்கும், மனிதருக்கும் பேசுவதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். இளகிய உள்ளங்கள் தேவ வார்த்தையால் ஈர்க்கப்படுகின்றன. இருதயங்களைக் கடினப்படுத்திக்கொண்டே காலத்தைக் கடத்தும் கல்

நெஞ்சர்கள், கடவுளின் புதிய உறவில் வரமுடியாது. அந்த மாபெரும் மகிழ்ச்சியை அடையவும் முடியாது.

கர்த்தர் உறவை நாடுகிறார். நாம் இருக்கிற இடத்திற்கு அவர் நம்மைத் தேடி வந்திருக்கிறார். முறிந்த உறவு மறுபடியும் இணையவேண்டுமென்ற ஆசையோடு அவர் நிற்கிறார். 'கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக எத்தனைதரமோ நான் உங்களைக் கூட்டிச்சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமல் போயிற்று' என்று இயேசு அங்கலாய்க்கிறார் (மத். 23:37). அவர் நம்மைத் தனியே அழைக்கிறார். நயங்காட்டி நம்முடன் பட்சமாய்ப் பேசுகிறார். 'இதுவரை தூரம் போனதிருக்கட்டும்; இனியாவது என் அன்புறவுக்குள் வா' என்று அழைக்கிறார். நம்பிக்கையின் வாசலையும், இழந்துபோன மகிமையையும் மறுபடியும் தருவதாக வாக்களிக்கிறார். அவருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலம் புகுவோமா? அன்று கதரேனர் செய்ததுபோல இரட்சகரை நம்முடைய எல்லைகளைவிட்டுத் துரத்தாதிருப்போம் (லூ. 8:37).

ஜெபம்:

ஆண்டவரே, நாங்கள் பாவம் செய்து தூரமாய்ப் போனபோதிலும் எங்களைக் கண்டிப்பாய் நடத்தாமல் தயவோடும் அன்போடும் நடத்துகிறீரே, இதற்காக நன்றி. ஆதி அன்பையும், இளவயதின் பக்தியையும் மறுபடியும் நாங்கள் கொள்ள அருள்புரியும்.—ஆமென்.

21

நித்திய இளைப்பாறுதல்

'அதற்கு அவர் என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்; நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்.' (யாத். 33:14)

'நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்திர வீதத்திற்கு எழுந்திருப்பாய் என்றார்.' (தானி. 12:13)

மரணம் மனித வாழ்க்கையில் நிச்சயமானது. பொதுவாக மகிழ்ச்சியான அனுபவங்களைக் கற்பனை செய்யவே யாவரும் விரும்புவார்கள். ஓர் இளைஞன் தனது எதிர்காலத்தை நினைக்கும்போது கல்வி, உத்தியோகம், திருமணம், பிள்ளைகள் என்றெல்லாம் நினைப்பான். ஆனால் மரணத்தை அவன் நினைப்பதில்லை. ஆனால் உண்மை என்ன தெரியுமா? அவன் நினைக்கிற திருமணம்கூட நடக்காமற்போகலாம். ஆனால் மரணம் கட்டாயமாக நிகழும். இதனால் எப்பொழுதும் மரணத்தை நினைத்து துக்கித்துக்கொண்டிருக்கத் தேவையில்லை. ஆனால் மரணத்தை அடிக்கடி நினைப்பது நம் தூய வாழ்வுக்கு நல்லது என்று ஒரு பக்தன் கூறுகிறார். அதோடு அப்படி நாம் நினைத்தால், மரணச் செய்தி அதிக அதிர்ச்சியைத் தராது.

திடீரென்று மரணம் ஒரு மனிதனை இந்த உலகத்திலிருந்து வாரிக்கொண்டு போவதால் அது துக்கமான ஒரு நிகழ்ச்சிதான். ஆனால் அது ஒரு மனிதனின் முடிவு அல்ல. அவன் மரணத்திற்குப் பின்னும் வாழ்கிறான். இறையுறவை மரணம்கூடப் பிரிக்க இயலாது. மரணத்திற்குப்பின் கடவுளுறவில் வாழ்பவன் அடைகின்ற இளைப்பாறுதலைப்பற்றி

நாம் படித்த வேத வசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. இந்த இளைப்பாறுதல் மரணத்திற்குப்பின் மட்டுமல்ல, இந்த உலகத்திலேயே அனுபவிக்கப்படவேண்டும்.

இந்த உலகத்திலேயே நித்திய இளைப்பாறுதல் கிடைக்கிறது: 'வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்று இயேசு கூறுகிறார் (மத். 11:28). இது வேலை செய்வதை விட்டு நீங்கி ஓய்ந்திருக்கும் ஒரு நிலை அல்ல; மனிதனுடைய ஆன்மா பெறுகின்ற அமைதியாகும். மன அமைதி இல்லையே என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்கிறவர்களைப்பற்றிச் செய்தித் தாள்களில் படிக்கிறோம். மனிதன் கடவுளின் சாயலில் ஓர் ஆன்மீக ஜீவனாகப் படைக்கப்பட்டபடியால் அவரில் இளைப்பாறுதல் கொள்ளு மட்டும் அவனது நெஞ்சம் அமைதியின்றித் தவிக்கின்றது. சில முயற்சிகளிலும் சில பயிற்சிகளிலும் ஆன்மீக அமைதியைப் பெறமுயன்றும் தோல்வி அடைந்தவர்கள் உண்டு. இன்னும் சிலரோ தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் இருக்கும் நிலையில் ஒருவிதமான அமைதியைப் பெற்று அதிலேயே தங்கிவிடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் இளைப்பாறுதல் அலை திரைகளை அமர்ந்த தண்ணீராக மாற்றும் தன்மையுடையது. இதை யாரும், எப்போதும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு தற்கால வாழ்வில் பெறும் இளைப்பாறுதல் நித்திய இளைப்பாறுதலுக்கு நிழலாக அமைகின்றது. 'இப்போது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்போது முகமுகமாய்ப் பார்ப்போம்' என்று பவுல் கூறுகிறார் (1 கொ. 13:12). நித்திய இளைப்பாறுதலுக்குப் பரிசுத்த ஆவியானவர் முன்ருசியும் அந்த மகிமையான மீட்புக்கு அச்சாரமுமாய் இருக்கிறார் (எபே. 1:14). ஆகவே இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவிடமிருந்து இளைப்பாறுதல் பெற்று மன அமைதியுடன் வாழ்கிறவர்கள்தான் மறுமையின் இளைப்பாறுதலை எதிர்பார்க்க இயலும்.

நல்மரணம் அடைகின்றவர்கள் பரம இளைப்பாறுதல் பெறுகிறார்கள்: நியாயத்தீர்ப்பிற்கு முன் கிறிஸ்துவுக்குள் நித்திரை

அடைகிறவர்கள் ஒரு பகுதியில் அமைதியுடன் வாழ்கிறார்கள்; மற்றவர்களோ சமாதானமின்றி அலைந்து திரிந்து சிலவேளை தீய ஆவியின் கருவிகளாகவும் மாறிவிடுகிறார்கள். இந்த இளைப்பாறும் இடத்திலிருந்து கலைக்கப்பட்டதை சாமுவேல் விரும்பவில்லை (1 சாமு. 28:15). இங்கு இளைப்பாறுகிறவர்கள் சும்மா இருக்கிறார்களா அல்லது ஏதேனும் பணி செய்கிறார்களா என்று திட்டமாய்த் தெரியாது. முடிவு நாள் மட்டும் இளைப்பாறிக்கொண்டிருக்கும்படிக்குத் தானியேல் கட்டளை பெற்றான். இயேசுகிறிஸ்து காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கம் பண்ணினார் என்று பார்க்கிறோம் (1 பே. 3:19). தான் இந்த உலகத்தை விட்டுச் சென்று போன பின்பும் தமது ஆலோசனைகளைச் சபையார் நினைத்துக்கொள்ள முயற்சி எடுப்பதாகப் பேதுரு வாக்குப் பண்ணுகிறார் (2 பே. 1:15). இளைப்பாறுகின்ற ஆன்மாக்கள் தேவதூதர்களுடன் சேர்ந்து சில பணிகள் புரிவதைத் தன் இறை இணைவு நிலைக் காட்சி மூலம் சாது சுந்தர்சிங் வெளியிட்டுள்ளார். எப்படியும் இங்குள்ளவர்கள் நிறைவான இளைப்பாறுதலுடன் காணப்படுகிறார்கள் என்பதனை மட்டும் நினைவிற்கொள்வோம். 'பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன். கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய செயல்கள் அவர்களோடே கூடப்போம்' என்று அந்தச் சத்தம் சொல்லிற்று (தரி. 14:13). நான் இன்று மரித்தாலும் கர்த்தருக்குள் மரிப்பேன் என்கிற நம்பிக்கை நம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறதா?

பரலோக இராஜ்யம் நித்திய இளைப்பாறுதலின் இடமாயிருக்கிறது: இது உலக முடிவுக்குப்பின், இறுதி நியாயத்தீர்ப்பிற்குப்பின் விசுவாசிகள் பேரின்ப நிலை அடையும் ஓர் இடமாகும். இங்கு 'இடம்' என்பது பூகோளக் கணிப்புகளுக்கு அப்பாற்பட்டதாகும். பரலோகம் ஓர் ஆச்சரியமான இடம். அது ஒருமைப்பாடு உயர்வாகக் காணப்படும் இடம். அது ஒரு மகிழ்ச்சியின் இடம். இங்கு கடவுளின் சமூகம் முழுமையுடன் தெளிவாகக் காணப்படும். அவருடைய

சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், அவருடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. (சங்.16:11). அதன் மகிமையினை எடுத்துக்கூற எந்த உலக மொழியாலும் இயலாது.

கிறிஸ்தவனுடைய நித்திய இளைப்பாறுதல்பற்றிய நம்பிக்கை இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் அஸ்திவாரங் கொண்டிருக்கிறது. மனிதர்கள் கடந்து சென்ற மரண வாயிலில் அவரும் நுழைந்து அதை மகிமையின் வளர்ச்சிப் படிக்கல்லாக மாற்றித் தந்தார். இந்த உயிர்த்தெழுதலில் அவரே முதற்பலனானவர். மரணத்தின் கூரை வென்று பாதாளத்தின் ஜெயத்தை முறியடித்து அவர் வெற்றி சிறந்தார். அவரோடுகூட மரித்தோமானால் அவரோடுகூட உயிர்த்தெழுவோம் என்பது அதிக நிச்சயமாகும்.

இந்த உலகில் இளைப்பாறுதலை அடைகின்றவர்களின் கல்லறைகள் நம்பிக்கையின் கல்லறைகள் ஆகும். இந்த அற்பமான உடல் மகிமையான உடலாக மாறும் என்ற நம்பிக்கையோடும், விசுவாச அறிக்கையோடும் அவர்கள் அடக்கம் பண்ணப்படுகிறார்கள். மீட்பின் திட்டம் நிறைவேறும் நாளில் அவர்கள் கடவுளோடு சேர்ந்து நித்திய நித்தியமாய் அரசாளுவார்கள். 'அவர்களுடைய கண்ணீர் யாவையும் கடவுள் துடைப்பார்; இனி மரணமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை' (தரி. 21:4). சர்வ வல்லவரின் செட்டைகள் தமது மக்களை மூடிக்கொள்ளும்.

ஜெபம்:

ஆண்டவரே! உலகத்தை அபகரிக்கும் பேராசை வரும்போது நான் மரணத்தை நினைக்கச் செய்யும். நிலையற்ற இவ்வுலக வாழ்வில் ஒவ்வொரு நாளையும் உம்மோடேயே கழிக்கத் துணை செய்யும். என் உயிர் பிரியும்போது உமது நித்திய இளைப்பாறுதலில் பங்கடையும்படி அதன்முன் சுவையை இப்போதே அனுபவிக்க அருள்புரியும்.—ஆமென்.

22

நம்மோடிருக்கும் இறைவன்

'நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை. பலங்கொண்டு திட மனதாயிரு.' (யோசு. 1:5,6)

எந்தக் காரணமும் இல்லாத மரணம்; கண்டுபிடிக்க முடியாத ஒரு கல்லறை; இவை மோசேயின் வாழ்வின் இறுதி இரகசியங்கள். இவற்றில் கடவுளுக்கும் மோசேக்கும் இருந்த அன்புப் பிடிப்பினை நம்மால் புரிந்துகொள்ள இயலவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். அவரது கால்கள் மறைந்தன; ஆனால் அவர் காட்டிய பாதை மறையவில்லை. அவரது கைகள் மறைந்தன; அவர் செய்து முடித்த ஆற்றல் நிறைந்த பணிகளோ மறையவில்லை. அவரது கண்கள் மறைந்தன! ஆனால் கானானைக் கண்ட தூரப்பார்வை மறையவில்லை. அவரது வாய் மறைந்தது; ஆனால் கூறி அறிவித்த கடவுளின் இறைவாக்கு மறையவில்லை. மோசே இறந்தும் பேசுகிறார். அவர் இன்றும் பேசுகிறார். அவரது பேச்சின் தொடர்ச்சி இன்னொரு மனிதன் மூலம் ஒலிக்கின்றது. மோசேயின் ஆசனத்தில் யோசுவா அமருகிறார். ஒரு மக்களினத்தையே அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வனாந்தரம் முழுதும் நடத்திக்கொண்டு வந்த அனுபவம் வாய்ந்த ஒரு மாபெரும் தீர்க்கதரிசியின் ஆசனத்தில் அமர யோசுவா அஞ்சுகிறார். அப்போதுதான் கடவுள் அவரோடு பேசுகிறார். மோசேயின் ஆசனமல்ல, அதற்குப் பின்னே நின்றுகொண்டிருக்கும் செயலூக்கியான கடவுளை முன்னிட்டுத் தைரியத்தோடு பொறுப்பேற்கும்படி யோசுவா கேட்டுக்கொள்ளப்படுகிறார். கீழ்ப்

படிந்த யோசுவா படிப்படியாக தெய்வ நடத்துதலை உணருகின்றார். அப்போதுதான் அவர் உள்ளம் உறுதியான அறிக்கைகளை வெளியிடுகின்றது.

மோசேயோடு இருந்தவர் என்ற அறிக்கை வெளிப்படுகின்றது: 'மோசே இஸ்ரவேலர் எல்லாருக்கும் வெளிப்படையாய் செய்த சகல வல்லமையான செயல்களையும் பார்த்தால், கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப்போல் ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று விளங்கும் (உபா. 34:11,12). மோசேயைப்போன்ற ஒரு தலைவன் இல்லாவிடில் திருமறையின் முதல் ஐந்து புத்தகங்களும் வெறுமையாகவே நமக்குப்பட்டிருக்கும். உடல் சார்ந்தும் குடும்பநிலை சார்ந்தும் மோசே ஒரு சாதாரண பலவீன மனிதன்தான். ஆனால், அவரைக் கடவுள் எடுத்துப் பயன்படுத்திய விதம் ஆச்சரியமானது. 'நீ போ; நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன்' என்றார்' (யாத். 4:12). போதிப்பேன் போன்ற வாக்குத்தத்தங்கள் மோசேயை ஆற்றிலுள்ள ஒரு திருப்பணியனாக மாற்றின. கடவுளோடு அதிக நட்புகொண்டு இறுதிமட்டாக ஓர் உண்மை பக்தனாய் மோசே செயல்பட்டார். ஒருபோதுமே அவர் தமது சொந்த பலத்தில் நிற்கவில்லை. மோசேயின் வாழ்க்கை முரண்பட்ட ஒன்றாக இல்லாமல் எவரும் எளிதில் வாசித்துப் புரித்துகொள்ளத்தக்க தெளிவான மடலாகத் திருமறையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. சிறு சிறு காரியங்களுக்கும் கடவுளிடம் ஆலோசனை கேட்பதில் மோசே பழக்கப்பட்டுப் போனார். கடவுளோடே வாக்குவாதம்பண்ணுவதில்கூட அவருக்குச் சலிப்பில்லை. 'உம்முடைய சமூகம் என்னோடேகூட செல்லாமற்போனால், எங்களை இந்த இடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்' என்று ஒருமுறை வேண்டுதல் செய்தார் (யாத். 33:15).

மேலும் மோசே ஒரு பொறுப்புள்ள தலைவனாய் விளங்கினார். யார் எங்கு போனாலும் என் காரியம் நடக்கவேண்டுமென்று அவர் எண்ணவில்லை. மக்களோடே சேர்ந்து பயணம் செய்தார். ஆனால், அவர் யாரையும் பிடித்துத் தள்ளிவிட்டு முன்னே செல்லவேண்டுமென்று அவர் முயலவில்லை. பிற

ருடைய அழிவின்மேல் மகிழ்ச்சி அடையும் யோனா குணம் அவருக்கு இல்லை. மாறாக மக்களுடைய பாரங்களைத் தாமே சுமந்தார். ஒருமுறை மக்கள் சிலை வணக்கத்தில் ஈடுபட்டு, கடவுளின் கோபத்திற்குள்ளானபோது மோசே கீழ்க்கண்டவாறு ஜெபித்தார்: 'தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்' (யாத். 32:32). இவ்வாறு தங்களது மோட்ச வாழ்வைக்கூட மக்களுக்காகத் தியாகம் செய்ய எண்ணும் தலைவர்கள் இக்காலத்தில் உண்டா?

என்னோடும் இருக்கிறார் என்கிற அறிக்கை வெளிப்படுகின்றது: 'மோசே நூனின் மகனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்' (உபா. 44:9). மோசேயின் பணியைத் தொடருவதற்கு ஒரு தயக்கம் காணப்படினும் யோசுவா தன்னோடு கடவுள் இருப்பதை உணர்ந்துகொண்டபடியால் தனது முன்னோடியைப்போன்று சிறப்பாகப் பணியாற்றினார். அரும்பெரும் போர்கள் நடத்தி வெற்றி கண்டார். கானானைப்பிடித்து அதை எல்லாக்கோத்திரங்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். அவரது பணி புதியதாகப்படினும் அது மோசேயின் பணியாகிய அஸ்திவாரத்தின்மேல் உறுதியாகக் கட்டப்பட்டிருந்தது. இன்று பணியாளர் தரப்பில் காணப்படும் ஒரு பெரிய தொத்து வியாதி என்னவென்றால், ஒருவருடைய பணியை இன்னொருவர் தாக்குவதும், ஒருவர் கட்டுவதை இன்னொருவர் இடிப்பதுமாகும். ஒருவருடைய பணியின் பின்னணியோடு சேர்ந்து அல்லது அவர்களது உழைப்பின்மேல் தொடர்பணி செய்யாமல் புதிய புதிய அஸ்திவாரங்களைப் போடுவது எல்லாத் துறைகளிலும் காணப்படும் ஒன்றாகும். கிறிஸ்தவத் திருப்பணியும் இதற்கு அப்பாற்பட்ட ஒன்றல்ல. இத்தகைய கூட்டுப்பணி, தொடர்பணி ஆகியவை இல்லாதபடியால் இன்று உலகத்தில் சிறு சிறு அஸ்திவாரங்களையும் அரை குறையான சுவர்களையும் காண்கிறோம். நிறைவுபடுத்தி அழகுறச் செய்ய ஆட்கள் இல்லை. இந்த மனப்பான்மை மாறவேண்டுமானால் கடவுளைப்பற்றிய உண்மையை ஆழமாக உணர்ந்து

கொள்ளவேண்டும். மனிதன் உலகில் வந்து போய்விடுகிறான். கடவுளோ இங்கு நிலையாக இருந்து பணிசெய்கிறார். நாம் அவருடைய கருவிகள் மட்டுமே. நமக்கு முன்னிருந்தவர்களோடு அவர் இருந்ததுபோலவே நம்மோடும் இருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் நமது முன்னோடிகளின் உழைப்பை மதித்துக் கடவுளின் பணியினை முழுமைப்படுத்துவோமாக.

என்னையும் பயன்படுத்துவார் என்கிற எதிர்கால நம்பிக்கை உண்டு என்ற அறிக்கை வெளிப்படுகின்றது: மகிமையான கருவூலங்களை இந்த மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். அவர் நம்மைப் பயன்படுத்தும்படி அவருடைய பலத்த கரங்களில் அடங்கியிருக்கவேண்டும். கடவுளுக்கு ஆலோசனை சொல்ல நாம் யார்? 'கோடாரியானது தன்னால் வெட்டுகிறவனுக்கு விரோதமாக மேன்மை பாராட்டலாமோ? வாளானது தன்னைக் கையாளுகிறவனுக்கு எதிராகப் பெருமை கொள்ளலாமோ? அப்படிச் செய்தால் தடியானது தன்னைப் பிடித்திருக்கிறவனை மிரட்டினாற்போலவும், கோலானது நான் மரக்கட்டை அல்லவென்று எழும்பினாற்போலவும் இருக்கும்' (ஏசா. 10:15). தனக்கு தன்னாலே இருக்கும் யோர்தான், எரிகோபோன்றவற்றைப்பற்றிய பயம் யோசுவாவை உறுத்தி இருக்கவேண்டும். ஆனால், அவரது இந்த அருட்பொழிவு விழாவில் ஆண்டவர் கொடுத்த வாக்குறுதிகள் அவரைத் தைரியப்படுத்தின. இதனால் கடவுளின் அற்புதங்களைக் கண்ணாரக் கண்டார். உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்தவர்களின் கால்கள் பட்ட மாத்திரத்தில், யோர்தானின் தண்ணீர் இரண்டாகப் பிரிந்து நின்றது. எக்காள சத்தம் எரிகோவின் மதில்களை இடித்தது. அமலேக்கியரோடு போரிட்ட நேரத்தில் சூரியனும் சந்திரனும் ஓடாமல் நின்றன. இத்தகைய இயல் கடந்த செயல்களின் மூலம் யோசுவா தன்னோடிருந்து தன்னை இயக்கும் கடவுளின் மாட்சியை அறிந்துகொண்டார்.

இவ்வாறு கடவுளின் கரங்களில் இயங்கிய பக்தர்களின் வல்லமை நிறைந்த செயல்களைப் படிக்கவேண்டும். அவர்களின் அரும்பெரும் செயல்களை எண்ணிப் பார்க்கும்போது நமது உள்ளம் பரவசமடைகின்றது. புனிதர்பவுல், Dr. ஐடா

ஸ்கடர், ஸ்பர்ஜன், சாது சுந்தர்சிங் போன்றோர் ஆற்றிய பணிகளை வரலாறு உள்ளளவும் யாரும் மறக்கவே முடியாது. இவர்கள் செய்து முடித்த பணிகளின் தொடர் பணியில் பயணம் செய்ய நாம் அழைக்கப்படுகிறோம். எனது வாழ்நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். நான் சோர்ந்து போன நேரங்கள் உண்டு. அச்சமயங்களில் 'நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை' என்ற ஆண்டவரின் வாக்குத்தத்தம் எலியா பெற்ற அடையும் தண்ணீரும் போன்று என்னைப் பெலப்படுத்துகிறது. எங்கு சென்றாலும் இவ்வார்த்தைகள் நெஞ்சத்தில் எதிரொலித்துக் கொண்டே இருந்தன. நண்பரே, ஒரே ஒரு வாழ்க்கை; அதை ஆண்டவரின் கைகளில் விட்டுவிடும். அவர் உம்மை நன்கு செலவழிப்பார். பணிக்களத்தின் பாடுகளை எண்ணிக் கலங்காதீர். அலைகளின் இரைச்சலுக்கு அஞ்சவேண்டாம். மலைகளின் உயரங்கண்டு மலையாதீர். உம்மை அனுப்புகிறவர் கர்த்தர் அல்லவா? 'பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகுமிடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்' (யோசு. 1:9).

ஜெபம்:

எல்லாம் வல்ல தந்தையே! உம் ஆற்றல் நிறைந்த வாக்குறுதிகளை வைத்து சுகத்தையும் சுயநலத்தையும் நாடும் சோதனையினின்று என்னைக்காரும். பிடுங்க வேண்டியவைகளைத் தைரியத்தோடு பிடுங்கவும், நாட்டவேண்டியவைகளைத் தகுந்த இடத்தில் நாட்டவும் அருள்புரியும். உம்மால் இயக்கப்படும்படி உமது வல்ல கரங்களில் விழுகிறேன்.—ஆமென்.

(இந்த அருளுரை ஐயரவர்களின் இறுதி அருளுரையாகும். தமக்குப்பின் தமது பணியை ஏற்கவிருந்த திருப்பணியாளரை முன்னிட்டு இது ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், இதை ஆற்றுமுன்—வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களுக்குமுன்—அவர் ஆண்டவருக்குள் நித்திரை அடைந்தார்.)

அருள்திரு. எபநேசர் டிக்கிகஸ் (1903–1970) நாற்பது ஆண்டுகள் வேலூரிலுள்ள ஆற்காடு இறையியல் கல்லூரியில்

பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றியவர். சென்னைப் பேராயத்தில் சிறந்து விளங்கிய போதகர்களுள் ஒருவர். அவருடைய அருளுரைகளைப் பல்லாயிரம் பேர் விரும்பிக் கேட்டிருக்கின்றனர். அவர் அனைத்துலக கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கத்தின் துணைத் தலைவராகவும் அதன் இந்தியக் கிளையின் தலைவராகவும் பல ஆண்டுகள் பொறுப்பேற்றிருந்தார். கிறிஸ்தவ இலக்கிய சங்கம் வெளியிட்ட நாம் விரும்பும் கீர்த்தனைகள் தவிர வேறு பல சிறு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

CLS

JESUS IS ALL TO ME
Sermons By. E. TYCHICUS
Compiled By S. ISRAEL

விலை ரூ. 15·00 (இந்தியாவில் மட்டும்)